சிவசங்கரி

# எதிர்காக



திருமகள்
நிலையம்

# எதற்காக?

# 1

ஏரிக்கரைக்கு மிக அருகிலேயே கம்பீரமாக எழுந்து நிற்கும் அந்த 'கால்டன் ஹோட்டலில்' தன் அறைக் கதவைத் திறந்துகொண்டு வெளியில் வந்தாள், இந்து.

அன்றோடு அவர்கள் கொடைக்கானலுக்கு வந்து நான்கு நாட்கள் ஆகின்றன. அந்த காலை நேரத்தில், இரவின் அலுப்பு நீங்க குளித்துவிட்டு வெளிவராந்தாவைக் கடந்து, பச்சைப் பசேலென்ற புல்வெளியில் நடந்த இந்துவுக்கு, என்னவென்று சொல்ல முடியாதபடி நெஞ்சு நிறைந்து கிடந்தது.

மேலே நிர்மலமான ஆகாயம், சுற்றிலும் பச்சை மலைகள்; உயரே உயரே நெடுக வளர்ந்து காடாக கிடக்கும் யூகலிப்டஸ் மரங்கள். கண்ணெதிரே பரந்து கிடக்கும் ஏரி. அந்த அமைதியான சூழ்நிலை எல்லாமே இந்துவுக்கு ரொம்பப் பிடித்திருந்தன,

செப்டம்பர் மாதம் பருவம் இல்லாத சமயமாதலால், கொடைக்கானல் மனித சஞ்சாரமே இல்லாமல் 'ஹோ' வென்று இருந்ததும், அவளுக்கு இனித்தது.

இனிக்காமல் என்ன செய்யும்? அவளுக்குத் திருமணமாகி ஒரு வாரம்கூட ஆகவில்லை. தேனிலவில் வேறு இருக்கிறாள். வேறு எப்படி இருக்க முடியும்?

இரண்டு மாதங்களுக்கு முன் ஒருநாள் கல்லூரிப் பேச்சுப் போட்டியில் கலந்துகொண்டு பேசுவதற்காக மேடைமேல் ஏறிய பொழுது, அங்கே நடுவர்களில் ஒருவராக அமர்ந்திருந்த ராஜாராமனைப் பார்த்தாள். அந்த நேரத்தில் அவள் கனவில்கூட நினைக்கவில்லை; இவர் தாம் தன்னை ஆட்கொள்ளப் போகும் தெய்வம் என்று.

சென்ற மாதத்தில் ஒரு நல்ல வெள்ளிக்கிழமையில் ராஜாராமனின் பெற்றோர் இவளுடைய பெற்றோரை வந்து பார்த்ததும், தங்கள் மகன் பிரபல வக்கீல் ராஜாராமன், இரண்டு மூன்று இடங்களில் அவளை கவனித்துவிட்டு, இவளையே தன் வாழ்க்கைத் துணைவியாக அடைய எண்ணுகிறான் என்று சொன்னதும், எல்லா மனங்களும் ஒப்பி திருமணத்திற்கு நாள் குறிக்கப்பட்டதும், ஓ! கனவு போலத்தான் இருக்கிறது.

உள்ளே அறையினுள் ஷேவ் செய்து குளித்துக் கொண்டிருக்கும் அன்புக் கணவனை நினைத்த மாத்திரத்தில் அவள் மனம் துள்ளியது.

தன் எண்ணங்களில் மூழ்கியவளாக, உடலை விறைக்க வைக்கும் குளிரை போக்குவதற்காக, காலை இளஞ்சூரியனின் சூடு உடலில் விழும்படி புல்தரையில் நடந்து கொண்டிருந்த இந்துவின் கவனம், திடீரென்று யாரோ வெகு அருகாமையில் மழலைக் குரலில் ''கம் ஹியர், கம் ஹியர்'' என்று கூறியதால் சற்றே தடைப்பட்டது.

திரும்பிப் பார்த்தாள்.

ஒரு வெள்ளைக்காரக் குழந்தை. வயசு மூன்று இருக்கலாம். கையில் ஒரு சின்ன நாய்க் குட்டியை சங்கிலியால் பிணைத்துக்கொண்டு, ''இங்கே வா...இங்கே வா'' என்று அதட்டியவாறு தன் முழுப் பலத்தாலும் அதை தன் அருகில் இழுத்துக் கொண்டிருந்தது.



நல்ல செழுமையான சூழ்நிலையில் வளர்ந்ததாலோ என்னவோ, அந்தக் குழந்தையின் உடலும் முகமும் பட்டாக ஜொலித்தன.

செலுலாயிட் பொம்மை ஒன்று உயிர் பெற்று வந்துவிட்டமாதிரி இருந்த அந்தக் குழந்தையைக் கண்டதும், இந்துவின் மனம் ஆசையால் விரிந்து, உடனே அந்த குழந்தையின் அருகில் அவளைச் செல்ல வைத்தது.

''ஹலோ'' என்றாள் அவள்.

பதிலுக்கு வெட்கமோ. தயக்கமோ சிறிதும் இல்லாமல் அந்த குழந்தையும் ''ஹலோ'' என்று சொல்லிவிட்டு அழகாய்ச் சிரித்தது.

ஏனோ தெரியவில்லை. அந்த நிமிஷத்தில் இந்துவுக்கு தன் அருமைத் தம்பியின், தனக்குப் பிறகு பல ஆண்டுகள் கழித்துப் பிறந்திருக்கும் சந்துருவின் நினைவு எழுந்தது. ''பிறந்தது முதல் அவனுக்கு எல்லாவற்றிற்கும் நான்தான் இருந்தாக வேண்டும். இப்பொழுது என்ன செய்கிறானோ?' என்ற ஏக்கமும், ஐந்து நாட்களாக அவனிடமிருந்து பிரிந்து இருக்கிறோமே' என்ற தாப உணர்வும் கூடவே எழுந்தன.

மெல்ல குழந்தையை நெருங்கியவள் ''உன் பெயர் என்ன?'' என்று கேட்டுவிட்டு, அதன் குண்டுக் கையைப் பற்றி மெல்ல தன் கைக்குள் இருத்திக் கொண்டாள்.

மெத்தென்று இருந்த அந்த கையை நெருடிக் கொண்டே அந்தக் குழந்தையும் மறுப்பு ஒன்றும் சொல்லாமல் இருந்ததால் கிட்டே இழுத்து அணைத்துக் கொண்டு, எனக்கு ஒரு முத்தம் கொடு'' என்று இரு முறை கேட்டுவிட்டு, அதற்கும் அது ஒன்றும் பேசாமல் இருந்ததால், தானே குனிந்து வலிய அதன் இரு கன்னத்திலும் அழுந்த முத்தமிட்டாள்.

''அந்த குழந்தை கொடுத்து வைத்ததுகூட நான் கொடுத்து வைக்கவில்லையே!''

திடுக்கிட்டு நிமிர்ந்த இந்து, தனக்குப் பின்னால் தன் கணவன் ராஜாராம் கைகளைக் கட்டிக்கொண்டு, அவளையே உற்று நோக்கியவாறு நிற்பதைப் பார்த்தாள். தன் செய்கையைப் பார்த்துவிட்டார் என்கிற வெட்கம் தாளாமல், ஒரு நிமிஷம் திணறிப் போனாள்.

முழ அகலத்திற்கு மெஜெண்டா கரையிட்ட வெள்ளை பட்டுப் புடைவையில் தந்த தேவதையாய் காலை வெயிலில் வெட்கிக்கொண்டு பெண்மையின் புற வடிவாய் நிற்கும் அழகு மனைவியைக் கண்ட ராஜாராமனும் உணர்ச்சி வசப்பட்டான்.

முகவாயை ஒருமுறை நீவி விட்டுக்கொண்டு கம்பீரமாக அருகில் நடந்து வந்தவன், ஒரு கையால் இடையைச் சுற்றி வளைத்து அவளை தன் பக்கம் திருப்பிக்கொண்டு, மற்றொரு கையால் அவள் முகத்தைச் சற்றே தூக்கினான்.

கணவனின் பிடியில் மெழுகாக உருகினாலும், ''என்ன இது?...யாராவது தெரிந்தவர்கள் இருக்கப்போகிறார்கள்!'' என்று தவித்தாள் இந்துமதி

அவளுடைய அந்த தவிப்பு அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது.

''இருந்தால் என்ன? 'அட! இந்த இளம் தம்பதி எவ்வளவு ஆசையாய் இருக்கிறார்கள்' என்று சந்தோஷப்படுவார்கள்; அல்லது, பொறாமைப்படுவார்கள். அவ்வளவு தானே?'' என்றான். ராஜாராமன்—திமிறும் அவளை தன் கையிலிருந்து நழுவ விடாமலேயே.

''விடுங்களேன்''—மனம் வேண்டும், வேண்டும் என்று கெஞ்சுவதை அடக்கிக்கொண்டு' ''ஆமாம் அவர்களுக்கு நீங்களும் நானும் கணவன் மனைவி என்று தெரியுமா? ஏதாவது தவறாக நினைத்தால்...'' என்று இழுத்தாள்.



திணறித்திணறிப் பேசிய அவள் முகபாவத்தை ரசித்தவாறே ''யாராவது தெரிந்தவர்கள் பார்த்தால்?' என்று தானே நீ சொன்னாய்? தெரிந்தவர்களுக்கு நாம் தம்பதி என்பது தெரியாதா, என்ன? தெரியாதவர்களைப்பற்றி நமக்கென்ன கவலை டார்லிங்'' என்றான் ராஜாராமன்.

வழக்கம் போல அவர் தன்னை மடக்கிவிட்டதை உணர்ந்த இந்து—''நீங்கள் பிரபல வக்கீல்தான். ஒப்புக் கொள்கிறேன். உங்கள் சாமர்த்தியத்தை என்னிடமே காட்ட வேண்டுமா?'' என்று கொஞ்சியதும் அவன் பிடி மேலும் இறுகியதே தவிர, தளரவில்லை.

ராஜாராமனின் குணத்தை இந்த சில நாட்களிலேயே ஓரளவுக்குப் புரிந்து கொண்டு விட்டாள், இந்து.

கம்பீரமான உருவம், திடமான மனம், அழுத்தமான சிந்தனை; நினைத்ததைச் சாதிக்கும் திறமை, எல்லாம் அவரிடம் ஒருங்கே இருக்கிறது என்பதை மிக நன்றாகவே தெரிந்து கொண்டு விட்டாள்.

கல்யாணமான மறுதினம் யாரோ முதலிரவு என்று பேச்செடுத்தபோது, ''அப்படிப்பட்ட சடங்கெல்லாம் எங்களுக்குத் தேவையில்லை. திருமணம் என்ற பந்தமே எங்களைச் சேர்த்துவிட்டது. இனி தனியாக வேறொன்றும் தேவையில்லை'' என்று அவன் சொன்னதை இந்து கேட்டபொழுது, அவனுடைய தீர்மானமான பேச்சில் அவள் கண்டது அந்த கம்பீர ஆண்மையைத்தான். அது அவளுக்கு ஆனந்தமாகவும் இருந்தது.

இரண்டே நாளில் காரில் இங்கு தேனிலவுக்கு வந்து விட்டார்கள்.

'கால்டன் ஓட்டலில்' ஏரி பார்த்த அறையை வாடகைக்கு எடுத்துக்கொண்டு அங்கு தங்கச் சென்றார்கள். அறை வாசலில் அவளை ஒரு நிமிஷம் 'நில்' என்று தடுத்த

ராஜாராமன், "உனக்கு ஆங்கிலேயர்களின் பழக்கம்ஒன்று தெரியுமா இந்து?" என்று கேட்டுவிட்டு, அவள் பதிலை எதிர்பார்க்காமல் அவளை அலாக்காகக் குழந்தை மாதிரி தூக்கிக்கொண்டு அறைவாசலைக் கடந்து, உள்ளே சென்று கட்டில்மீது மெதுவாக வைத்து, "உன் வாழ்க்கை சந்தோஷமாக என்றும் இருக்கவேண்டும்" என்று காதுக் குள் கிசுகிசுத்தானே, அப்பொழுது தெரிந்து கொண்டாள் —'தாம் நினைப்பதையே இவர் சாதிப்பார்' என்று.

ஓ! வாழ்க்கை இவ்வளவு அழகானதா என்ன?

படகில் இந்துவை அமர்த்திக்கொண்டு ஏரி முழுவதும் சுற்றிவிட்டு, படகு கொள்ளாத அளவு அல்லிப்பூக்களைப் பறித்து நிரப்பிக்கொண்டு திரும்பும்போது ஒருநாள்— "உன்னைப் பார்த்தால் ஒரு கவி சொன்ன கவிதைதான் நினைவுக்கு வருகிறது இந்து. ஒருகாதலன் தன் காதலியை வர்ணிக்கிறான் —

'அவள் வசந்தத்தைக்காட்டிலும் புதுமையானவள். சிரிப்பைக்காட்டிலும் மகிழ்ச்சியானவள். சங்கீதத்தைக் காட்டிலும் இனிமையானவள்' என்று.

இதை முதன் முதலில் படித்துவிட்டு இப்படியும் ஒரு பெண் இருக்க முடியுமா? என்று எத்தனையோ நாட்கள் வியந்திருக்கிறேன். இப்பொழுது உன்னைப் பார்க்கிறேன். அவன் வாக்கு எவ்வளவு உண்மை என்றும் உணருகின் றேன்" என்று கூறிக்கொண்டே அவளை இழுத்து அணைத்துக்கொண்டு "ஐ லவ் யூ"—என்று கன்னத்தில் கன்னம் வைத்து முணுமுணுத்தபோது பரவசப்பட்டுப் போனாள் இந்து.

"ஐ லவ் யூ டார்லிங்" என்று திரும்பவும் ஒரு தடவை சொன்ன ராஜாராமன் அதோடு திருப்தி அடையாமல் "எங்கே நீ ஒருமுறை சொல்லு—பதிலுக்கு ஐ லவ் யூ'... என்று" எனக்குழந்தை மாதிரி அவளைக் கேட்கவும் செய் தான்.



இது சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை என்றாலும்—புதுத் தம்பதியரிடம் இப்படி ஓர் ஊடல் இருக்க வேண்டியதுதானே?

"ம்ஹூம், மாட்டேன்"

"ஏன்?"

"இப்போ மாட்டேன். அப்புறம்..."

"எப்புறம்?"—ராஜாராமன் விடவில்லை.

"அப்புறம் என்றால் கொஞ்ச நாளைக்குப் பிறகு..." என்று சொன்ன இந்து; "என்ன நீங்கள்...என்னை விடுங் களேன்" என்று உதட்டைக் கூப்பிக்கொண்டு கேட்ட பொழுது, ராஜாராமன் தன்னை மறந்தான்.

பத்து நாட்கள் ஓடுவதற்குக் கேட்பானேன்?

ஒருநாள் 'பில்லர்-ராக்ஸ்,' ஒருநாள் 'பேரிஜம்-லேக்' மற்றொரு நாள் 'பேர்-ஷோலா அருவி' எனப் பொழுது இனிமையாகக் கழிந்தது.

எது தப்பினாலும் நித்தமும் 'கோக்கர்ஸ்-வாக்' போவது மட்டும் தவறாது.

அன்றும் அப்படித்தான்—

கோடு போட்டாற்போல் மலையின் விளிம்போடு ஒட்டியவாறு வளைந்து, வளைந்து செல்லும் அந்த 'கோக்கர்ஸ்-வாக்'கில் மெதுவாக நடந்துகொண்டிருந் தார்கள், இந்துவும் ராஜாராமனும்.

மாலை போய் இருள் சேரும் வேளை. புகைமண்டல மாய்ப் புகுந்து விளையாடி ஆளை மறைக்கும் மேகக் கூட்டங்கள், கீழே பள்ளத்தாக்கில் மின்மினிப் பூச்சியாய் தெரிந்த கிராம விளக்குகள்.

ராஜாராமனின் வலது கை இந்துவின் இடையைச் சுற்றிப் பற்றி தன்னோடு சேர்த்து அணைந்துக்கொண்டிருந்தது. கணவனின் தோளில் சற்றே தலையை சாய்த்தவளாக இந்து, இந்த உலகையே மறந்திருந்தாள். நடு நடுவே இடையில் கணவனின் கைவிரல்கள் விளையாடுவதால் உண்டான ஒருவிதச் சிலிர்ப்பு—கிளர்ச்சி—அவள் மேனியில் ஊடுருவிச் சென்றது.

''இந்து...''

''.........''

''இந்து...இந்து குட்டி...''

அவள் தலையை தன் தலையால் முட்டினான் ராஜாராமன்.

''என்ன...ப்ளீஸ்...?''—அவனுக்கு மாத்திரம் கேட்கும்படி பேசினாள் இந்து.

நடந்துகொண்டே இருந்த ராஜாராமன் சட்டென்று நின்றான்.

''எப்போது பார்த்தாலும் ''ப்ளீஸ் ப்ளீஸ்' என்கிறாயே'' அது என்ன, என் பெயரா இந்து? ஏன் என் பெயரை சொல்லி அழைக்கக்கூடாதா? ம்,..சொல்லேன்..''

ஒரு சில விநாடிகள் பதிலே சொல்லாமல் நின்ற இந்து—மிக மெதுவாக சொன்னாள், ''பேர் சொல்லிக் கூப்பிடாமல் இருக்கமாட்டேன். கண்டிப்பாக கூப்பிடுவேன்—ஆனால் இப்போதே அல்ல; இன்னும் கொஞ்ச நாள் கழித்து. இன்னும் உங்களோடு நிறையப் பழகிய பிறகு—சரியா? அதுவரைக்கும்தான் இந்த 'ப்ளீஸ்'...''

''முடியாது...முடியாது...நான் ஒப்புக்கொள்ளவே மாட்டேன்—நான் எது சொன்னாலும் நீ 'அப்புறம்... அப்புறம்' என்று சமாளிக்கிறாய்...இப்போது நான் விட மாட்டேன்...பெயர் சொல்லி கூப்பிட்டால்தான் ஆயிற்று ...எங்கே இந்து...ப்ளீஸ்...கூப்பிடேன்...''



''சரி, என்னவென்று கூப்பிடணும்?''

''ஏன் எல்லோரும் கூப்பிடுவது போல் 'ராம்' என்று கூப்பிடேன்.''

தலையை லேசாக மாட்டேன் என்பது போல் அசைத்தாள் இந்து.

''எல்லார் மாதிரியுமா நானும் உங்களுக்கு? நான் தனி இல்லையா?'' என்றாள்.

''ஓகோ! உன் 'தனித்தன்மை' உணர்வை மறந்து விட்டேனே! பின்னே நீ எப்படி கூப்பிடப் போகிறாய்?''

இதற்கு இந்து பதில் சொல்வதற்குள் பெரிய மேகக் கூட்டமொன்று அவர்களைச் சூழ்ந்து கொண்டது.

''குளிரலை உங்களுக்கு?'' என்று கேட்டுவிட்டு கணவனிடம் இன்னும் ஒண்டிக் கொண்டாள் இந்து.

''ஏய், இந்து! என்னை ஏமாற்றப் பேச்சை மாற்றாதே—எப்படிக் கூப்பிடுவாய்—சொல்லேன்.''

அவன் விடவில்லை.

''எல்லோருக்கும் நீங்கள் ராம் என்றால், எனக்கு ராஜா...ராஜ்...'' மேற்கொண்டு எதுவும் பேச வெட்கமாய் இருப்பது போல கணவனின் மார்புக்குள் இந்து புகுந்து கொண்டாள்.

நாட்கள் கும்மாளமிட்டுக் கொண்டு ஓடின. ஆயிற்று. நாளைக்குச் சென்னைக்குத் திரும்பப் போகிறார்கள்.

இன்று காலையில் குறிஞ்சி ஆண்டவர் கோவிலுக்குப் போய்விட்டு, சாப்பாட்டைக் கையில் எடுத்துக் கொண்டு 'சில்வர் கேஸ்கேடு'க்கு வந்திருக்கிறார்கள்.

'ஜோ' என்று வெள்ளியாய் கொட்டும் அருவியைப் பார்த்துப் பார்த்து வியந்த இந்து, 'எத்தனை பொருத்த

மான பெயர்!'' என்று நினைத்து அதை ராஜாவிடம் சொன்ன போது, ''உன் பெயர் பொருத்தத்தை விடவா?'' என்று கேட்டுவிட்டு சிரித்தான்.

பொழுது இனிமையாகக் கழிந்தது.

சாப்பாட்டை முடித்துக்கொண்டு, ''சற்று இளைப் பாறலாமே!'' என்று, இந்து சொன்னதின் பேரில் அங் கேயே ஒரு விரிப்பைப் போட்டு அமர்ந்தார்கள்.

மனசும் வயிறும் நிறைந்ததாலோ, என்னவோ கணவனின் மடியில் தன் தலையை வைத்துப் படுத்த இந்து ஐந்து நிமிஷங்களுக்குள் உறங்கி விட்டாள்.

தூங்கும் போது கள்ளம் கபடு இல்லாத ஒரு குழந் தையை போலத் தோன்றிய இந்துவையே உற்று நோக் கினான் ராஜா.

'குழந்தை போல்'—என்று நினைத்துக்கொண்டதும் ''குழந்தைகள் என்றால்தான் இவளுக்கு எத்தனை விருப் பம்?' என்ற எண்ணமும் கூடவே எழுந்தது.

அன்று காலை குறிஞ்சி ஆண்டவர் கோவிலுக்குப் போன போது உட்பிரகாரத்தில் கண்ணை மூடி இந்து நின்றது நினைவு வந்தது.

''என்ன பிரார்த்தனை பலமா?'' என்று அவன் அவளைக் கேட்டபொழுதும் ''ம்ஹூம்.''அதெல்லாம் ஒன்றுமில்லை' என்று மழுப்பியவளை ''டார்லிங் என்னை ஏய்க்காதே! சுவாமியிடம் என்ன கேட்டாய்?'' என்று துருவித் துருவி கேட்டும் ''சமயம் வரும்போது சொல்லுகிறேன்'' என்று கூறிவிட்டாள் இந்து.

என்ன வேண்டிக் கொண்டாள்? தனக்கு கூடிய சீக்கிரம் குழந்தை பிறக்க வேண்டும் என்று நினைத்திருப் பாளோ?



திரும்பி, மடியில் மலராய்க் கிடக்கும் மனைவியைப் பார்த் தான் அவன்.

இரண்டு மாசங்களுக்கு முன்பு கல்லூரி மாணவியாய் மேடையில் முழங்கிய அந்த இந்துவா இவள்? இந்த மான் குட்டியும், அந்தப் பெண் சிங்கமும் ஒரே பெண்தானா? மெதுவாய் குனிந்து அந்த பட்டுநெற்றியில் மென்மையாய் ராஜா முத்தமிட்டான்.

# 2

'க்ரீங் க்ரீங்', இரண்டே முறை அந்த டெலிபோன் ஒலிப்பதற்குள், அதன் எதிரில் அமர்ந்து கட்சிக்காரர் இருவருடன் முக்கியமான பேச்சில் ஈடுபட்டிருந்த ராஜா ராமன் ரிசீவரை எடுத்து விட்டான்.

''ராஜாராமன்...''

''நான்தான்'' என்று பதில் வந்தது.

இந்துதான். அவளைத் தவிர வேறு யார் ராஜாவிடம் 'நான்தான்' என்று சொல்ல முடியும்; அவளும் அவனைத் தவிர வேறு யாரிடம் 'நான்தான்' என்று கொஞ்சலுடன் தொடங்குவாள்? 'உங்களுடைய நானேதான்' என்று சொல்லாமல் சொல்லிய அந்த ஒரு வார்த்தை, வழக்கம் போல இன்றும் கட்சிக்காரர்களுடன் வழக்கு விஷயமாகப் பேசிக் கொண்டிருக்கும் அந்த சமயத்திலும் அவனுள் கிளர்ச்சியை உண்டு பண்ணியது.

ஆயினும் முகத்தையும் குரலையும் சாதாரணமாகவே, வைத்துக்கொண்டு ''எஸ்...'' என்றான் ராஜா.

''என்ன ராஜ்! 'நான்தான்' என்கிறேன், 'எஸ்' என்று பதிலுக்கு 'டல்'லடிக்கிறீர்களே.''

"ம்..."

இந்த 'ம்' வந்தவுடனேயேபுரிந்துவிட்டது இந்துவுக்கு; யாரோ கட்சிக்காரர்கள் அங்கே மறுபக்கத்தில் அவர் எதிரில் இருக்கிறார்கள் என்று.

ஆனாலும், என்னவோ தெரியவில்லை, அந்த நிமிடத்தில் கணவனை சற்றே சங்கடத்தில் ஆழ்த்த வேண்டும் என்ற எண்ணம் திடீரென்று அவளுள் எழுந்தது.

ஒன்றுமே புரியாதது போல அவள் மேலும் பேசினாள். "ராஜ்—இப்பொழுது ஏன் 'போன்' செய்தேன் தெரியுமா உங்களிடம் கொஞ்சம் ஆசையாகப் பேச வேண்டும் என்று தோன்றியது. அதனால்தான். ஸே ஸம்திங் லவ்விங் டார்லிங், ப்ளீஸ்."

இந்துமதியின் குரலிலிருந்த தாபம் ராஜாராமனுக்கு வியப்பாக இருந்தது.

திருமணமான இந்த நான்கு மாசங்களாய் அவனும் தினமும் கெஞ்சோ கெஞ்சென்று கெஞ்சுகிறான். துளியும் அசையாத இந்தப்பெண் இன்று பார்த்து இந்த வார்த்தைகளைச் சொல்லுகிறாள்—சரியாகப் பேசக்கூட முடியாதபடி இந்தக் கட்சிக்காரர்கள்...

"ம்" என்றான் மீண்டும்.

இந்துவுக்கு உண்மையாகவே சலித்துவிட்டது, 'என்ன மனிதர் இவர்'—என்று. பொய்க் கோபத்தைத் தருவித்துக் கொண்டு "சரி, போங்கள். என்னுடன் பேச உங்களுக்கு கசக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளாமல் பேசிவிட்டேன்...ஸாரி, பை பை" என்று கூறிவிட்டு ரிசீவரை வைத்து விட்டாள்.

காலையில் வீட்டு வேலைகளை முடித்துக் கொண்டு கணவன் கோர்ட்டுக்குச் செல்லும் போது அம்மாவிடம் சற்று பேசிக் கொண்டிருந்து விட்டு, தம்பியுடனும் விளையாடிக்கொண்டிருக்கலாமே என்ற எண்ணத்தில் பெற்றோர் வீட்டில் இறங்கிக்கொண்டவள், இப்போது மதியம் மூன்று மணியளவில் அம்மா வேலையாக இருப்பதாலும், தம்பி விளையாடப்போய் விட்டதாலும், கணவன் ராஜாராமனை போன் மூலம் வம்புக்கு இழுத்தாள்.



இந்த நான்கு மாச காலத்தில் தன் கணவனிடம் தனக்கு எவ்வளவு ஸ்வாதீனம் வந்துவிட்டது என்பதை நினைக்க அவளுக்கே வேடிக்கையாக இருந்தது.

கட்சிக்காரர் முன்னால் தான் அப்படி பேசியது அவருக்கு எவ்வளவு சங்கடத்தை உண்டு பண்ணி இருக்கும் என்பதை சற்றே மனக்கண்ணில் பார்த்த இந்து, வாய்விட்டுச் சிரிக்கவும் செய்தாள்.

பத்து நிமிஷங்கள் சென்றிருக்கும். டெலிபோன் ஒலித்தது. ரிசீவரைக் கையில் எடுக்கும்போதே கூப்பிடுவது தன் கணவன்தான் என்று இந்துவுக்குத் தெரிந்து விட்டது

"எஸ்..." என்றாள் அவள், யாரிடமோ பேசுகிறாப் போல.

"ஹாய் டார்லிங்!" பொங்கி வழிந்தது ராஜாவின் குரல்.

"என்ன இந்தும்மா—நான் 'ம்' கொட்டுவதில் இருந்தே எனக்கு எதிரில் (யாரோ) இருக்கிறார்கள் என்று உனக்குத் தெரிய வேண்டாமா? உன்னுடன் பேச எனக்குக் கசக்குமா என்ன? இப்போது ஆசையாய் பேசட்டுமா? ஐ லவ் யூ... ஐ லவ் யூ...ஐ லவ் யூ"

இந்து உருகினாள்

ஆனாலும் "ஒன்றும் வேண்டாம் போங்கள்..." என்றாள் பொய்க் கோபத்துடன்.

"ப்ளீஸ் டார்லிங்...ஸாரி சொல்லட்டுமா?"

''ஒரு தடவை போதாது. மூன்று தடவை சொல்ல வேண்டும். ஓ. கே?''

''ஸாரி...ஸாரி...ஸாரி...''

''ம்ஹூம்... ம்ஹூம்—ஏனோ தானோ என்று சொல்கிறீர்கள்...''

''ஸாரி இந்தும்மா—

ஸாரி இந்துகுட்டி—

ஸாரி டார்லிங்...''

சிரிப்பு தாங்கவில்லை இந்துவுக்கு—

''போதும் போதும் பக்தனே! நின் பக்தியை மெச்சி மன்னித்தோம்.''

இது இவர்களுக்குள் சமீப காலமாக தோன்றி வளர்ந்து விட்ட ஒரு விளையாட்டு—தங்களை மறந்து, தங்கள் வயசையும் சூழ்நிலையையும் மறந்து இருவரும், குழந்தைகளாக மாறிவிடும் ஓர் ஊடல்...

''ஆல்ரைட் இந்துகுட்டி! விஷயத்திற்கு வருகிறேன். இன்று மாலை நீதிபதி ராமநாதன் வீட்டில் ஒரு முக்கிய மான விருந்து இருக்கிறது. நாம் இருவரும் போகிறோம். மறந்து விடாதே. நான் கோர்ட்டிலிருந்து திரும்பும் போது உன்னை அழைத்துக்கொள்ளவா?''

''ஓ எஸ்...சந்துரு விளையாடப் போயிருக்கிறான். அவன் வந்ததும், அவனுக்கு ஒரு கதை சொல்வதாகச் சொல்லியிருக்கிறேன். அதைத் தவிர எனக்கு வேறு வேலை ஒன்றும் இல்லை. நீங்கள் ஐந்து மணிக்கு இங்கு வந்தால் சரியாக இருக்கும்...''

இந்து பேசிக்கொண்டிருக்கையிலே வேலைகள் முடிந்து அந்த அறைக்குள் நுழைந்த அவள் அம்மா மங்களத்தின் காதுகளில் இந்தப் பேச்சு விழுந்தது.



எத்தனை பெண்கள் இந்தக் காலத்தில் இந்து மாதிரி இருக்கிறார்கள்? கூடப்பிறந்தவர்களைப் பார்த்துக் கொள்ளுவதை ஒரு வேண்டாத பொறுப்பாக நினைக்கும் போது இந்துவுக்கோ குழந்தைகள், கூடப்பிறந்தது என்றால் உயிர்.

இந்துவைப் பார்த்துக்கொண்டிருந்த மங்களத்திற்கு நெஞ்சு கொள்ளாமல் பெருமை அலைபாய்ந்தது.

மங்களம்—ராமசாமி தம்பதிகளுக்கு சீமந்தப் புத்திரியாய் பிறந்தவள் இந்துமதி அறையிலிருந்த குழந்தையை கொண்டுவந்து காட்டியபோது ராமசாமிக்கு ஒரு முழு நிலாவின் நினைவுதான் வந்ததாம். அதனால் இந்துமதி என்றே பெயர் வைத்துவிட்டார்கள்—

ஒரு தனியார் கம்பெனியில் கை நிறைய சம்பளம் வாங்கும் ராமசாமிக்கு, எதிலும் குறை இருந்ததில்லை. பிறகு மகளை வளர்த்த விமரிசையைக் கேட்கவேண்டுமா?

இந்துவும் ஒவியமாய்த்தான் திகழ்ந்தாள் பேசத் தெரிந்த நாள் முதற்கொண்டே சட்டென்று யாரிடமும் ஒட்டிக்கொண்டு விடுவாள்—பெரியவளாக ஆக இந்துவே இன்னும் மெருகேறி மனிதர்களுக்கு தக்கபடி வளைந்து கொடுத்துப் பழகுபவள் என்று பெயர் வந்துவிட்டது.

இந்த இருபது ஆண்டுகாலத்தில் இந்து என்றைக்காவது எங்களுக்குப் பிடிக்காததை செய்து எங்கள் மனத்தை நோகடித்திருக்காளா? என்று எத்தனையோ தடவைகள் யோசித்திருப்பதைப் போலவே இன்றும் மங்களம் நினைத்தாள்.

ம்ஹூம், கிடையாது,

கலகலவென்று பேசுவாளே தவிர, அவள் தந்தை 'இந்து இது வேண்டாம்' என்று ஒரு வார்த்தை சொல்லி விட்டாலும் அதற்குமேல் 'ஏம்ப்பா?' என்று அவள் இன்றுவரை கேட்டது கிடையாது.

இந்துவை அடக்கமான பெண் என்று சொல்லலாமா.

விபூதியை நெற்றியில் இட்டுக்கொண்டு ரவிக்கை தெரியாதபடி போர்த்திக்கொண்டு வெளியில் மட்டும் அடக்கமாகக் காட்டிக்கொண்டு மனசில் அதன் சாயலே இல்லாமல் இருப்பதுதான் அடக்கம் என்றால் கண்டிப்பாக இந்து அடக்கம் இல்லை—

அவளுக்கு என்று ஒரு வழி உண்டு. தனி விருப்பு வெறுப்பு உண்டு.

தனக்கு நிச்சயமாகச் சரி என்று தோன்றியதை-வெளியே சொல்ல என்றுமே தயங்க மாட்டாள். அதே நேரத்தில் 'நீ சொல்வது தவறு' என்று யாராவது நியாயமாக எடுத்துக் காட்டினால் தன்னைத் திருத்திக்கொண்டு மற்றவருக்கு ஸாரி சொல்லவும் சற்றும் தயங்கமாட்டாள்.

கல்லூரியில் எதிலுமே முதலாக நின்ற இந்துவுக்குப் பல கலை நிகழ்ச்சிகளிலும், பொதுக் கூட்டங்களிலும் பங்கு எடுத்துக்கொள்ள சந்தர்ப்பம் வரும். கூட இருக்கும் பெண்கள் தலைகால் புரியாமல் 'மாடர்ன், மாடர்ன்' என்று சொல்லிக்கொண்டு தங்களையே அலங்கோலப் படுத்திக் கொண்டு நிற்கும் காலத்தில், இவள் மாத்திரம் அந்த திசைக்கே போகாமல் தனித்து நிற்பாள்.

ஆனால் கூட்டமெல்லாம் இவளைச் சுற்றியே இருக்கும்.

கல்லூரியில் எந்த விழாவானாலும், தன் தம்பி சந்துருவை—தனக்குப் பிறகு பல ஆண்டுகள் கழித்து பிறந்திருக்கும் அருமைத் தம்பியை—கூடவே அழைத்துக் கொண்டு போவாள். அதில் ஒரு பெருமை அவளுக்கு.

''என்ன இந்து, குழந்தையைக் கூடவே அழைத்துக் கொண்டுவருகிறாயே—உனக்குத் தொந்தரவாக இல்லையா? மேலும், விழாவிற்கு வந்திருக்கும் மற்ற கல்லூரி மாணவிகள் என்ன நினைப்பார்கள்'' என்று யாராவது தப்பித். தவறி கேட்டுவிட்டால் போயிற்று!



''ஏய்! நீங்களும், உங்கள் 'அவர்கள் என்ன நினைப்பார்கள், இவர்கள் என்ன சொல்லுவார்கள்' என்கிற பேச்சும்!...என் தம்பி எனக்கு அருமை; அழைத்து வந்திருக்கிறேன். உங்களுக்கு என்ன?'' என்பாள்

இந்த அபரிமிதமான அன்பு திருமணம் ஆனபிறகு மாறிவிடும் என்று நினைத்திருந்த மங்களத்திற்கு, அதற்குப்பிறகு மாப்பிள்ளையின் ஊக்கத்தினால் முன்னைப் போலவே இருப்பதை உணரும்போது வியப்பா, இல்லை சந்தோஷமா என்று தெரியாத ஓர் உணர்ச்சிதான் மனசில் பரவியது.

நினைவு அலைகள் தன்னை அடித்துக்கொண்டு போக அனுமதித்துவிட்டு, அதன் பெருக்கில் தன்னை மறந்து நின்று கொண்டிருந்த மங்களம், ''அம்மா' என்று மகள் அழைப்பதைக் கேட்டுத் திரும்பினாள்.

''ஏம்ம—நான் போன் பேசி முடித்துவிட்டு உன்னை இரண்டுதரம் கூப்பிட்டுவிட்டேன், என்னம்மா அப்படி பிரமாதமாக யோசித்துக் கொண்டிருந்தாய்?'' என்று தாயை மகள் கேட்பதற்குள், ''அம்மா...அம்மா! உடனே கீழே வாங்களேன்'' என்று அலறிக்கொண்டு தோட்டக்காரன் மாடியில் அவர்கள் இருந்த அறைக்குள் ஓடி வருவதற்கும், சரியாக இருந்தது.

''என்னடா, என்னடா?''—தாயும் மகளும் பதறிக் கொண்டு ஏக காலத்தில் கேட்டார்கள்.

''நம் சந்துரு தம்பி...சைக்கிள் பின்னாலே ஒக்காந்து தள்ளச் சொல்லிச்சிம்மா... வாணாம்னு எவ்வளவோ சொன்னேம்மா...கேட்காம ஏறி உக்காந்துகிடுச்சம்மா... தள்ளறப்போ பின் சக்கரத்திலே கால் சிக்கிடிச்சம்மா...''

அடுத்த முக்கால் மணிக்குள் வீடே இரண்டு பட்டுவிட்டது.

டாக்டர் வந்து பார்த்து ''எலும்பு முறிவு ஒன்றுமில்லை'' என்று கூறிவிட்ட பிறகும், ''டாக்டர், என்

சந்துருவுக்கு அடி அதிகமில்லையே''என்று இந்து திரும்பத் திரும்பக் கேட்டாள்.

கட்டுப் போட்ட காலுடன் குழந்தை அம்மா, அம்மா என்றுகூட அரற்றாமல் 'அக்கா' என்று முனகிக் கொண்டு வலி தாளாமல் தவித்தது, இந்துவுக்குத் தாளவில்லை.

சரியாக ஐந்து மணிக்கு ராஜாராமன் தான் சொன்னது போலவே வந்து இருமுறை 'பம்...பம்' என்று ஒரு சங்கேத மொழியில் ஹாரன் அடித்ததும், வழக்கமாகத் துள்ளிக்கொண்டு ஓடி வரும் இந்துவைக் காணாததால், என்னவென்று புரியாமல் வீட்டிற்குள் நுழைந்தான்.

கீழேயே எதிர்ப்பட்ட மங்களத்திடமிருந்து நடந்த விவரங்களை அறிந்துகொண்ட ராஜாராமன், பதட்டமில்லாமல் இந்து இருந்த அறைக்குள் சென்றான். கணவனைக்கண்டதும் மனம் வெடிக்க ''பார்த்தீர்களா... பார்த்தீர்களா? நம்ப சந்துருவுக்கு இப்படி ஆகிவிட்டதே!'' என்றவளுக்குக் கண்கள் கலங்கிப் போயின.

அமைதியாக நின்று ஆறுதல் சொன்ன ராஜாராமன் மெள்ள அவளை அடுத்த அறைக்கு அழைத்துச்சென்றான். ஒரு நிமிஷ காலம் வரை அவள் அழுது ஓயட்டும் என்று இருந்தவன், ''என்ன இந்து இப்பொழுது என்ன நடந்துவிட்டது? குழந்தைகள் என்றால் விளையாடாதா,இல்லை விளையாடும் குழந்தைகளுக்கு அடிதான் படாதா?''என்று ஆரம்பித்து நிதானமாக ஒரு சிறு குழந்தையை தேற்றுவது போல், பேசிய பிறகே இந்து நிதானத்திற்கு வந்தாள்.

கண்களைத் துடைத்துக் கொண்டு ஸாரி என்கிற தினுசில் கணவனை ஏறிட்டுப் பார்த்தவளை 'ஸில்லி கேர்ள்' என்று கன்னத்தில் செல்லமாகத் தட்டி, அவளை அணைத்துக் கொண்டான் ராஜாராமன்.

அந்த ஆறுதலான அணைப்பில் தன் துயரை மறந்து மௌனமாக இருந்த இந்து ஏதோ நினைத்துக் கொண்டு



தன்னை உலுப்பிக்கொண்டு சொன்னாள்: ''ஓ, நாம் கிளம்ப வேண்டாமா? உங்கள் விருந்துக்கு நேரமாகவில்லை?''

எல்லோரிடமும் ஒரே மாதிரியான அன்பைச் செலுத்தத்தெரிந்த தன் மனைவிக்கு, குழந்தைகள் என்றாலே ஓர் அலாதி பிரியம்; அதுவும் அவளே வளர்த்த அவள் தம்பி என்றால் அவளுக்கு உயிர் என்பதையும் இந்த நான்கு மாசத்தில் நன்கு அறிந்திருந்த ராஜாராமன் தலையை அசைத்தான்.

''இல்லை, இன்றைக்கு நாம் அந்த விருந்துக்குப் போகப் போவதில்லை உனது மனநிலை எனக்கு நன்றாகப் புரிகிறது சந்துருவுடன் இந்த மாலையைக் கழித்தால் அவனும் சந்தோஷப்படுவான், உனக்கும் திருப்தியாக இருக்கும், அதையே செய்வோம்.''

இந்துவின் முகம் மலர்ந்தது.

''ஆனால், ஆனால், இது முக்கியமான விருந்து என்றீர்களே ராஜ்!'' என்றவளிடம் ''உன் மன நிம்மதியைக் காட்டிலும் எனக்கு முக்கியமானது ஒன்றுமில்லை, இது உனக்குத் தெரியுமா இந்து?'' என்று அவளிடம் அவன் பதிலுக்குக் கேட்கவும் அவள் வாய் வார்த்தைகளால் ஒன்றுமே பேசாமல் அவன் தோளில் சாய்ந்தாள்.

பாசத்துடன் இந்துவின் வகிட்டில் முத்தமிட்ட ராஜாராமனுக்கு, 'ஓ! இவள் தான் சில சமயங்களில் எப்படி ஒரு சின்னக் குழந்தையாகவே மாறி விடுகிறாள்!'' என்ற நினைப்பு எழுந்தது.

## 3

நினைக்க நினைக்க ராஜாராமனுக்கு ஆச்சரியமாகவே இருக்கிறது. வெறும் ஆச்சரியமில்லை. இனிக்கும் ஆச்சரியம்.

இந்துவே ஓர் ஆச்சரிய தேவதைதானோ...

ஆச்சரியத்தின் பல்வேறு பரிணாமங்களை நாளுக்கொன்றாகக் காட்டிக்கொண்டு அடக்கத்துடன் கரை புரண்டோடும் ஆறாக இன்று அன்பைப் பொழியும் இந்த இந்துவா, அன்று அந்த கல்லூரி மேடையில் சிம்ம கர்ச்சனை புரிந்தாள்?

''வருகிற வாரம் கல்லூரிகளிடையே பேச்சுப் போட்டி நடக்கவிருக்கிறது. இதில் ஒரு விசேஷம் என்னவென்றால், போட்டி தொடங்குவதற்கு ஐந்து நிமிஷம் முன்னால்தான் தலைப்பை மாணவ மாணவிகளுக்குக் கொடுப்போம். அந்த ஐந்து நிமிஷத்தில் அவர்கள் தங்களைத் தயார் செய்து கொண்டு பேசுவர். இதற்கு நீங்கள் ஒரு நடுவராக இருக்க வேண்டும்'' என்று அன்றைக்குச் சென்னை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இருவர், ராஜாராமனின் வீடு தேடி வந்து அழைத்தபோது சென்னை வக்கீல்களில்—சிறு வயதிலேயே பேர் பெற்றுவிட்ட ஒரு சிலர்களில்—முதன்மையான அவன் உடனே சரி என்று சொல்லி விட்டான்.

நல்ல சுவையான மாலையாக இருக்கும் என்ற நினைப்பில் சென்றவனுக்கு, நேரம் செல்லச் செல்ல முதல் ஆறு மாணவிகள் பேசியது சலிப்பையே ஏற்படுத்தி விட்டது.

''இந்தியா ஏன் பின்தங்கிய நாடாக இருக்கிறது?' என்பதுதான் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தலைப்பு. தங்களை நன்கு தயார் செய்துகொள்ள நேரம் இல்லாததாலோ அல்லது விஷயமே பிடிபடாததாலோ தங்கள் கருத்துக்களை ஆணித்தரமாக எடுத்துரைக்காமல் 'இந்தியா தன் பண்பாட்டைக் கைவிட்டுவிட்டதுதான் நம் தேச முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளது' என்றும், விஷமாக ஏறும் மக்கள் தொகைதான் நாம் பின்தங்கியதன் முக்கிய காரணம்'என்றும் ஆளுக்கொரு காரணத்தை மட்டும் எடுத்துரைத்தபோது, ராஜாராமனுக்கு ஏற்பட்ட எரிச்சல் சொல்லி சாத்தியமில்லை.



முகவாயை நீவி விட்டுக்கொண்டு இருக்கை கொள்ளாமல் தவித்தவனை அடுத்து ''குமாரி இந்துமதி பேசுவார்'' என்ற அறிவிப்பு கவர்ந்தது. தொடர்ந்தாற்போல் சுற்றிலும் உள்ளவர் எழுப்பிய கையொலி, 'இவள் முன்னமே தன் வாக்குச் சாதுரியத்தால் இவர்களுக்கு அறிமுகமானவளா?' என்றும் நினைக்க வைத்தது.

அடுத்த சில விநாடிக்குள் மேடை ஏறிய இந்துமதியைப் பலமான கைதட்டலுடன் கூட்டம் வரவேற்றது.

மேடைக்குச் செல்லும் படிகளை லாவகமாக ஏறிக் கடப்பவளை ராஜாராமனும் பார்த்தான். ஐந்து அடி ஆறு அங்குலம் உயரம் இருக்கலாமா?—ம். இருக்கலாம்—அதற்கேற்ற பருமன்—வாளிப்பான உடல்கட்டுக்கு அவள் உடுத்தியிருந்த தனி வயலட் நிறப் புடைவை மிகவும் எடுப்பாக இருந்தது.

அவள் நல்ல அழகிதான்—

வட்ட முகத்தில் அந்த புடைவையின் நிறத்திலேயே பெரிய குங்குமப் பொட்டு வைத்து, ஒற்றைப் பின்னல் போட்டிருந்தாள். தலைக்குக் குளித்ததாலோ என்னவோ ஒரு முடிக்கற்றை அழகாகப் பறந்து அவள் முகத்தில் விளையாடியது.

இந்துமதியின் ஒவ்வோர் அசைவும் நிதானமாக இருந்ததைப் போல அவளிடமிருந்து ஒரு கம்பீரமும் வெளிப்படையாக வழிந்தோடியது.

அவள் மேடைமீது ஏறி 'மைக்'குக்கு எதிரில் நிற்பதற்குள் சபையில் இருந்த மாணவர்கள் செய்த அமளியும், அதற்கும் மேலாக இந்துமதியிடம் காணப்பட்ட ஒரு தன்னம்பிக்கையும் அவனுக்குப் புதிதாகவும், புதிராகவும் இருந்தன.

'இவள் பேச்சுத் திறமையால் வெற்றிக்கொள்ளப் பார்க்கிறாளா? அல்லது தன் அழகால், வந்து நின்ற உட

னேயே இப்பொழுதுகூட கவர்ந்துவிட்டாளே இந்த அப்பட்டமான அழகால்—வெற்றிகொள்ள நினைக்கிறாளா?' என்று ஒரு விநாடி தனக்குள்ளேயே யோசித்த ராஜாராமன் 'எப்படியானாலும் சரி என்னைப்பொறுத்த வரையில் திறமைதான் முக்கியம்—'என்று தீர்மானித்தவனாக இந்துமதி பேசுவதைக் கேட்கத் தயாரானான்.

ஒரு கையால் மைக்கைப் பிடித்துக்கொண்டு தட்டுத் தடுமாறாமல் நிதானமாகப் பேசத் தொடங்கினாள், இந்துமதி.

அவள் பேச ஆரம்பித்த முதல் பத்து வரிகள்கூட மிகச் சாதாரணமாகவே இருந்தன. ராஜாராமனுக்கு.

ஆனால், அடுத்த ஒரு நிமிஷத்திற்குள், அந்தப் பெரிய சபையில் திடீரென்று நிசப்தம் நிலவலாயிற்று.

சுற்றிலும் உள்ளவர்களை நோக்கியவாறே அவள் 'இந்தியா என்ன, என்ன விஷயங்களில் பின்தங்கி இருக்கிறது' என்பதைக் கோடு போட்டாற் போல் சுற்றி வளைக்காமல் முதல் மூன்று நிமிஷங்களுக்குள் சொன்ன பொழுது ராஜாராமன் அவனையும் அறியாமல் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

இந்துமதி, Iஏன் இந்தியா பின் தங்கிவிட்டது' என்பதை ஆராய்ந்துவிட்டு—இதற்குப் பரிகாரம் என்ன என்பதை விளக்க முற்பட்டபொழுது, அவள் குரலில் இருந்த வேகம் சபையினரைத் திக்குமுக்காடச் செய்தது.

அவள் சொன்னாள் ''நம் நாடு முன்னேற்றப் பாதையில் பின்தங்கித்தான் இருக்கிறது'' எல்லா நாட்டிற்கும் வழி காட்டியாய் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திகழ்ந்த நம் பாரத நாடு இப்பொழுது பின்தங்கிவிட்டது என்று தற்சமயம் ஒவ்வொரு மேடையிலும் பலர் அழுவதைக் கேட்டிருக்கிறோம். ''ஏன்...ஏன்?' என்று லட்சோபலட்சம் பாரத மக்கள் புலம்புகிறோமே-இதன் காரணம்



நமக்குத்தெரியாதா? உங்கள் அனைவரையும் கேட்கிறேன். நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்கள்''—

ஓர் கணம் சபையினரைச் சுற்றிப் பார்த்துவிட்டு அவளே மேலே சொன்னாள் :

''உங்களுக்குக் கண்டிப்பாகத் தெரியும். ஆனால் வெளியே சொல்லத் தயங்குகிறீர்கள், இல்லையா?''

உண்மை கசக்கும் என்பார்கள் பெரியோர்கள். நான் சொல்லப் போவதும் உண்மையாதலால் நிச்சயமாகக் கசக்கத்தான் செய்யும்.

''நம் நாட்டின் முன்னேற்றத்திற்குத் தடையாக நிற்கும் அடிப்படை காரணங்கள் இரண்டு. ஒன்று நம்முடைய முழுச்சோம்பேறித்தனம். இதற்கு ஓரிருவர் விலக்காக இருக்கலாம். எங்கோ தனித்து நிற்கும் அவர்களை நான் இந்த வட்டத்தில் சேர்க்கவில்லை. ஆனால், மீதமிருக்கும் தொண்ணூற்று எட்டு மனிதர்களை, நம் பாரதத்தின் முக்கால் பகுதியை அடைத்துக் கொண்டிருக்கும் அந்த மனிதர்களைத்தான் சொல்கிறேன். ஆமாம், பேசுவதிலேயே இன்பம் கண்டு உழைக்க அஞ்சும் சோம்பேறிகள் நாம்—'எங்கள் தாத்தா காலத்தில் அரண்மனைபோல் வீடும் வாசலும், இத்தனை வேலி நிலமும் இருந்தன' என்று பெருமையாகப் பேசுகிறோமே தவிர 'ஐயோ... அவர் அப்படி இருந்தாரே, இன்று நாம் நிலை குலைந்து நிற்கிறோமே, இதை தவிர்க்க வேண்டுமே, அதற்கு நாமும் உழைத்து முன்னுக்கு வரவேண்டும்' என்ற எண்ணம் நம்மில் எந்தனை பேரிடம் இருக்கிறது? கடந்த காலத்தை எண்ணியே பெருமை கொள்ளும் நமக்கு, நிகழ் காலத்தையும் எதிர்காலத்தையும் நினைப்பதற்கு நேரமே இல்லாதது நம் நாடு செய்த மிகப்பெரிய துர்ப்பாக்கியங்களில் ஒன்று இல்லையா?''

இந்துமதியின் சொல்லம்புகளக் கேட்டுக்கொண்டிருந்த ராஜாராமன் தன்னையும், தன் சூழ்நிலையையும்

மறந்துவிட்டான். அவனுக்குள்ளிருந்து ஏதோ ஒன்று பிரிந்து வெளியே விசுவரூபம் எடுத்து மேடையில் நின்று முழங்குவதைப் போன்ற உணர்வு.

இந்துமதி தொடர்ந்தாள்:

''இரண்டாவது காரணம், நம்மிடம் உண்மையான உழைப்பு, அதாவது சிரத்தை என்பது இல்லாததுதான். எந்த வேலை செய்தாலும், அது எப்படிப்பட்ட வேலையாக இருந்தாலும் அதை நாம் வயிறு வளர்க்கச் செய்யும் ஒரு தொழிலாகத் தலை எழுத்தே—என்றுதான் செய்கிறோமே தவிர, அதில் மனமும் உடலும் ஈடுபடச் செய்வதில்லை. நம் உடலின் ஒவ்வோர் அணுவும் நாம் செய்யும் எந்தத் தொழிலிலும் பூரணமாக ஈடுபடுமானால், ஈடுபட்டு அதனுடன் ஒன்றி இருப்போமானால் உங்கள் எல்லோரையும் கேட்கிறேன்: நாமோ நம் நாடோ இப்படியா இருப்போம்?—இல்லை. நிச்சயமாக இல்லை.

''இதோ, இப்பொழுது பேசுவதற்காக இந்த மேடையில் நிற்கிறேனே இந்தக் கணத்திலும்கூட நான் என் முழு மனத்தையும் இந்தக்காரியத்தில் செலுத்தி இருக்கிறேனோ என்று எனக்கு நானே கேட்டுக்கொண்டால் அதுதான் உண்மை அதுதான் சிரத்தை. அதுதான் உண்மையான உழைப்பு.

மேதைகள் குழுமியிருக்கும் இந்தக் கூட்டத்தில் நான் உங்களுக்குத் தெரியாததைச் சொல்ல வந்துவிட்டதாக யாரேனும் எண்ணினால், மன்னிக்கவும். என் நோக்கம் அதுவே அல்ல...

''மனதார, வாழ்க்கையில் உயர என்ன செய்ய வேண்டும் என்று நான் நித்தமும் உணருகிறேனோ, அதைத்தான் உங்களிடம் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்கிறேன்— '

''ஒரு தனிப்பட்ட மனிதன் உயர அயராத உழைப்பு தேவை. ஒரு மனிதன் உயர்ந்தால், அவன் பத்துப் பேர்கள் உயர வழி செய்கிறான். அவர்கள் உயர்ந்தால் சமுதாயம் வளரும். சமுதாயம் வளர்ந்தால் நாடே செழிக்கும்—இதுதான் நமக்குத் தேவை. நன்றி.''



இந்துமதி தன் உரையை முடித்துக்கொண்டு கீழே இறங்கிவிட்டாள். கூட்டத்தினர் பலமாகக் கைகளைத் தட்டியபோது ராஜாராமன் தன் உணர்வுக்கு வந்தான்.

முதற் பரிசை வாங்கச் சற்றைக்கெல்லாம் இந்துமதி மீண்டும் மேடைக்கு வந்தபொழுது, அவள் மேல் பெரும் மதிப்பு ஏற்பட்டிருந்ததை அவனால் உணரமுடிந்தது.

'இவள் கண்டிப்பாகத் தனித்துதான் நிற்கிறாள்' என்று நினைத்துக்கொண்டவனுக்கு 'இவள் வக்கீலாக மாறினால் என் போன்றவரைத் தன் அழகாலும் சாதுரியத்தாலும் விழுங்கியே விடுவாள்' என்றும் எண்ணிய போது, சிரிப்புதான் வந்தது.

அதன்பிறகு. ஒருமாச காலத்திற்குள்,என்னவெல்லாம் நடந்துவிட்டன?

சந்தர்ப்பவசத்தாலோ என்னவோ அந்த ஒரு மாசத்தில் இந்துவை ஒரு சினிமாவிலும், ஒரு திருமணத்திலும் சந்தித்துப் பேச நேர்ந்ததும், அவளைப்பற்றித் தான் அதிகமாக நினைக்கத் தொடங்கியதும், தன் பெற்றோரிடம் தன் விருப்பத்தைக் கூறிச் சரியாக மற்றும் ஒரு மாசம் செல்வதற்குள் அவளைத் தன் மனைவியாகவே அடைந்ததும் நடந்து எட்டு மாசங்கள் ஆகிவிட்டாலும் இப்பொழுதுதான் நிகழ்ந்தது போன்ற உணர்வை ராஜாராமனுக்குக் கொடுத்தன.

அலுவலக வேலைகளுக்கு இடையே இன்றும் அந்த சம்பவங்களை மீண்டும் ஒருதடவை நினைத்துக்கொண்டதும் இந்துவோடு பேசவேண்டும் என்ற துடிப்பில் வீட்டுக்குப் போன் செய்தான்.

''அம்மா இல்லீங்க. வெளியில் தானே வண்டியை ஓட்டிக்கொண்டு போயிருக்காங்க'' என்று வேலையாள் சொன்னதைக் கேட்டதும், 'சரி. பெற்றோர் வீட்டுக்குப் போயிருப்பாள் என்று எண்ணி, அந்த வீட்டு நம்பரைச் சுழற்றினான். அங்கும் அவள் வரவில்லை என்று தெரிந்துவிடவே எங்கே போய்விட்டாள்? என்று ஒரு விநாடி நினைத்துவிட்டு, மீண்டும் தன் வேலைகளில் கவனத்தைச் செலுத்த முயன்றான் ராஜாராமன்.

முடியவில்லை.

இந்த இந்துதான் எத்தனை அற்புதமான புதிராக இருக்கிறாள்! ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவளை ஒரு புதுக்கோணத்தில்—வடிவில்தான் இந்த எட்டு மாச காலத்தில் பார்த்துவிட்டேனே! ஒவ்வொரு வடிவும் இந்துவுக்கு ஒரு தனி நிறத்தைக் கொடுத்து, அவளை மேலும் மேலும் சிறக்கச் செய்கிறதே! ஓ! இன்னும் எத்தனை வடிவில் தன்னை அவள் வெளிப்படுத்த இருக்கிறாள்?

ராஜாவுக்கு வேலை செய்ய மனம் இல்லை.

நாற்காலியில் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டவனால் 'இந்து எங்கே இருக்கிறாள்' என்ற கேள்வி மீண்டும் அவன் உள்ளத்தில் தலைதூக்கியது.

## 4

மவுண்டுரோடிலுள்ள ஒரு கடைபாக்கி இல்லாமல் ஏறி இறங்கிவிட்டாள் இந்து-ஒரு கடையிலாவது அவளுக்குத் தேவையான பண்டம் கிடைக்கவில்லை.



நாளைக்கு ராஜாவிற்குப் பிறந்தநாள் ஆயிற்றே!—அவருக்கு ஏற்ற பரிசை வாங்க வேண்டுமே! என்று நடையாய் நடக்கிறாள். ஒன்றும் சரியாக அமையவில்லை. கடைசியில் காசிச் செட்டித் தெருவுக்குப் போய், அங்கு கொட்டிக் கிடக்கும், வெளிநாட்டுச் சரக்கில் ஏதாவது சரிப்படுமா, பார்க்கலாம் என்று நினைத்து, டவுன் பக்கம் வண்டியை ஓட்டினாள்.

குறுகிய அந்தச் சந்தில் வண்டியை சிரமப்பட்டு நிறுத்திவிட்டு இறங்கியவள் கண்ணில் முதலில் தென்பட்டது அந்த அழகிய பெண் குழந்தைதான்! வலப் பக்கமிருந்த கடையினுள் இந்துவுக்கு முதுகைக் காட்டிக் கொண்டு நின்றிருந்த ஓர் இளம்பெண்ணின கையைப் பிடித்துக்கொண்டு இருந்த அந்தப் பெண் குழந்தைதான் எவ்வளவு அழகாக இருந்தது!

வயது இரண்டு இருக்குமோ, என்னவோ—அழகு என்றால் அவ்வளவு அழகு—இந்து மயங்கிப் போய் விட்டாள்.

அந்தக் கடையினுள் ஏறிக் கடைக்காரரிடம் பேசும் பாவனையில் அந்தக் குழந்தையையே பார்த்துக்கொண்டிருந்தவளுக்கு, அதிருஷ்டவசமாக கடைக்காரர் வைத்திருந்த சாமான்களில் ஒன்று, ரொம்பப் பிடித்துவிட்டது.

'போல்ராய்ட்' என்ற அந்தக் காமிரா, படம் எடுத்த ஒரு நிமிஷத்திற்குள், அந்தப் படத்தைத் தானே டெவலப் செய்து பின் வழியாகப் பிரிண்ட் போட்டுக் கொடுத்து விடும். ராஜாவுக்கு அந்தக் காமிரா நிச்சயம் பிடிக்கும் என்று தெரிந்ததும், கடைக்காரரிடம் பேரம் பேசத் தொடங்கினாள்

காமிராவைக் கையில் எடுத்துக்கொண்டு அவள் பேரத்தை ஆரம்பிக்கவும், இத்தனை நேரமாக முதுகைக் காட்டிக்கொண்டு நின்றிருந்த அந்தப் பெண் திரும்பவதற்கும் சரியாக இருந்தது.

''ஹாய்! சித்ரா!'' — இந்து உற்சாகக் குரலில் அழைத்தாள்.

''இந்து, நீயா!'' பதிலுக்கு உரக்கக் கூவிய சித்ரா, ஓடி வந்து இந்துவின் கையைப் பிடித்துக் கொண்டாள்

இந்து கேட்ட முதல் கேள்வி: ''யார் இந்த அழகுச் செல்வம்!''

''என் பெண்...ரதி—''என்று சித்ரா சொல்லவும் ''ஓ! உன் பெண்ணா! பெயர் கூட எத்தனை அழகாக பொருத்த மாக வைத்திருக்கிறாய்!'' என்று கூறிக்கொண்டே இந்து குழந்தையை அள்ளி எடுத்துக்கொண்டாள்.

''இதற்கு வேற்று முகமே கிடையாது, இந்து'' என்று பெருமையாய்ச் சொன்ன சித்ரா, ''ஆமாம், நீ என்ன பண்ணு றாய் இங்கே?'' என்றாள்.

தன் திருமணத்தைப் பற்றி விரிவாக சித்ராவிடம் சொன்ன இந்து, ''அதிருக்கட்டும்—பாதி படிக்கிறபோது காதல்தான் முக்கியம் என்று படிப்பை விட்டுவிட்டுத் திருமணம் செய்து கொண்டு டெல்லிக்குப் போனாயே, உனக்குச் சென்னையில் என்ன வேலை?'' என்று பதிலுக்கு அவளைக் கேட்டாள்.

''எல்லாம் சொல்கிறேன் போகும்போது. முதலில் வியாபாரத்தை முடி!'' என்றாள் சித்ரா.

காமிராவிற்குப் பணம் கொடுத்து வாங்கிக்கொண்டு காரில் சித்ராவையும் குழந்தையையும் ஏற்றிக்கொண்டு சித்ராவின் வீட்டை நோக்கி போகும் அந்த நேரத்திற்ள் தன் டெல்லி வாழ்க்கையைப் பற்றியும், தன் கணவருக்கு தற்சமயம் சென்னைக்கு மாற்றலாகிவிட்டதைப் பற்றியும் ஆதியோடந்தமாய் சித்ரா விவரித்தாள்.

மாம்பலத்தில் ஒரு தெருவில் சின்ன வீட்டில் சித்ராவை இறக்கினாள் இந்து.

''உள்ளே வாயேன்'' என்று சிநேகிதி வற்புறுத்திய தால் உள்ளே சென்றாள்.



வீடு மிகச் சாதாரணமாகத்தான் இருந்தது, சூழ் நிலையைக்கொண்டே சித்ராவின் பண வசதியைத் தெரிந்து கொண்டாள் இந்து.

ஏதோ பேச்சு வாக்கில் ''நாங்கள் கொடுக்கும் இந்த நூறு ரூபாய்க்கு இன்னும் கொஞ்சம் நல்ல வீடாகத் தேடிக் கொண்டிருக்கிறோம்...எங்கே அப்படி சட் டென்று கிடைக்கிறது?'' என்று சித்ரா சலித்துக்கொண்ட பொழுதுதான், இந்துக்கு ஒரு யோசனை தோன்றியது

அந்தக் காலை நேரத்தில், உதயசூரியனின் கிரணங் கள் பூமியை இன்னும் தொடாத வேளையில், இரவெல் லாம் தூங்காமல், எப்போதடா விடியும்? என்று தவித்துக் கொண்டிருந்த இந்து, அருகில் உறங்கும் கணவனுடைய தூக்கம் கலைந்துவிடாமல் மெல்ல எழுந்தாள்.

அவசர அவசரமாகக் குளித்துவிட்டு, சின்னதாக ஜரிகையிட்ட 'ஆலீவ் க்ரீன்' புடவையை ராஜாவுக்குப் பிடித்தமானதை—அணிந்துகொண்டு, தலை கொள்ளா மல் மல்லிகைப் பூவை வைத்துக் கொண்டவள் அலமாரி யில் புடைவைகளுக்கு அடியில் முதல்நாள் வைத்த அந்த அழகிய சின்னப் பெட்டியை எடுத்துக் கொண்டாள்.

கட்டிலை அடைத்துக் கொண்டு ஆஜானுபாகுவாய் உறங்கிக் கொண்டிருக்கும் கணவனை நெருங்கி அவன் காது அருகில் வாயை வைத்து 'ஹாப்பி பர்த் டே டு யூ என்று மெல்லிய இனிய குரலில் பாடினாள்.

ராஜாராமனின் உறக்கம் சற்றே கலைந்தது.

படுக்கையை விட்டு எழுந்திருக்காமலேயே வலக் கையால் மனைவியைத் தன் பக்கம் இழுத்துக்கொண்ட ராஜா கேட்டான்.

''பிறந்த நாளுக்கு வெறும் பாட்டும், வாழ்த்தும் தானா?''

''தெரியுமே! எனக்குத் தெரியுமே! நீங்கள் ஏமாந்து போய் இப்படிக் கேட்பீர்கள் என்று தெரியுமே!'' என்று கெக்கலித்த இந்து, ''கண்ணை மூடுங்கள்'' என்றாள்.

சொன்னபடி செய்தான் ராஜா.

அவன் கையில் 'பொத்'தென்று அந்தச் சிறிய பெட்டியை வைத்தாள் இந்து.

''ஒகே, கண் திறக்கலாம்.''

''பூ! இதுதானா? எனக்கு இது வேண்டாம்டா.''

''ஏனாம்?''

''எனக்கு இன்னும் வேறு ஏதாவது வேண்டும்.''

''வேறு ஏதாவது? எவ்வளவு அலைந்து திரிந்து இதை வாங்கி வந்திருக்கிறேன், தெரியுமா? பிரித்துத்தான் பாருங்களேன்!''

''முடியாத்—முடியாத்.''

''என்ன வேண்டும் சொல்லுங்கள். இந்தப் பரிசை விட உயர்ந்ததாக இருந்தால் கண்டிப்பாகத் தருகிறேன்.'

''ஓ. நிச்சயமாக உயர்ந்ததுதான்! உயர்ந்ததைத் தவிர வேறு கேட்பேனா?'' என்ற ராஜாராமன் ''எங்கே இப்படித் திரும்பேன். உன் கையை என் தோளில் வைத்து, உன் முகத்தைக் கொஞ்சம் திருப்பி...''என்றான்.

''ஆ! என்ன இது, நிறுத்துங்கள்...''—அவள் முகம் சிவந்து, உடல் வளைந்தது.

அவளைக் கையில் அள்ளிக்கொண்டு ''இதோ இருக்கிறதே என் வாழ்க்கையின் பரிசு—இதைவிட எனக்கு வேறு என்ன வேண்டும்?'' என்று இந்துவிடம் சொன்ன ராஜா, ''நீ இன்று எவ்வளவு அழகாக இருக்கிறாய் இந்தும்மா—ப்யூடிஃபுல்'' என்று கொஞ்சிக்கொண்டே போனான்.



நிமிஷங்கள் பறந்து, பொழுது நன்கு புலர்ந்து விட்டது.

''எங்கே வாங்கினாய் இந்து, இந்த அருமையான காமிராவை...?''

மடியில் கிடந்த பரிசைபிரித்துப் பார்த்து அசந்து போன ராஜாதான் இந்தக் கேள்வியைக் கேட்டான்.

''எங்கேயா? பிடித்திருக்கிறதா, இல்லையா?'' என்று பதில் கேள்வி போட்டுவிட்டு, கணவன் கையிலிருந்த அதை வாங்கி ''ஸ்டெடி'' என்று சொல்லிவிட்டு, கண் மூடித்திறப்பதற்குள் பட்டனை அழுத்திவிட்டாள் இந்து

சரியாக ஒரு நிமிஷம் ஆனதும் 'ஒன்று' இரண்டு மூன்று'' என்று மந்திரவாதி போலக் கூவிக் கொண்டே காமிராவைத் திருப்பி சரக்கென்று வெளியே தெரிந்த படத்தைத் கிழித்தெடுத்தாள் அவள்.

நைட் பைஜாமாவில், தலையெங்கும் முடி கூத்தாட, தூக்கம் கலையாத கண்ணுடன் ஆனால், கம்பீரமாக ராஜா அந்தப் படத்தில் இருந்தான்.

மகிழ்ந்து போனான் ராஜாராமன்.

இதுதான் சரியான சமயம் என்று அவன் முன் மற்றொரு படத்தை நீட்டினாள் இந்து.

ஓர் அழகான பெண் குழந்தை ஒரு கன்னத்தில் குழி விழச் சிரித்துக் கொண்டிருந்தது அதில்.

''யார் இது? என்பது போல் தன்னை நோக்கிய கணவனிடம் ''நேற்று இந்த காமிரா வாங்கப் போன கடையில் நின்று கொண்டிருந்தது, எடுத்தேன். குழந்தை அழகாக இல்லை?'' என்றாள் இந்து.

''அழகான குழந்தை'' என்று கூறிவிட்டுக் குளியல் அறைக்குப் போனான் ராஜா.

''வந்து...வந்து...நம்ம அவுட் ஹவுஸ் இருக்கே, அது இப்படியே காலியா கிடந்தா எப்படி ராஜ்? அது வீண் இல்லை?'' என்று தொடர்ந்து பேசினாள் இந்து.

''என்ன செய்யச் சொல்கிறாய்—நாம் வேண்டுமானால் அங்கே குடிபோய் விடலாமா?''—குறும்பாக விளையாடினான் ராஜா.

''வாடகைக்கு விடலாமே, ராஜ்.''

''வாடகையா?—சே... சே... நம்முடைய தனிமை, அந்தரங்கம் எல்லாமே, அதை வாடகைக்கு விட்டால் போய்விடுமே! இது தெரியாதா உனக்கு, டார்லிங்?''

''அந்தரங்கத்தை வீட்டுக்குள் வைத்துக்கொண்டால் ஆயிற்று. தோட்டத்தில் குடி வைப்பதற்கும் அதற்கும் என்ன சம்பந்தமாம்?'' என்று கொஞ்சினாள் இந்து.

மனசில் எதையோ வைத்துக்கொண்டுதான் அவள் இப்படிப் பேசுகிறாள் என்பதை உணர்ந்தும் ''இந்து... எனக்கு அந்த யோசனை பிடிக்கவில்லை...''என்று அழுத்தமாகக் கூறிவிட்டான் ராஜ்.

அன்று மாலை கோர்ட்டில் இருந்து திரும்பியவன் கண்ணில் முதலில் தென்பட்டது அந்தக் குழந்தையின் படம்தான்.

'படத்திலேயே துருதுருவென்று இருக்கும் இது, நேரில்இன்னும் ஜோராக இருந்திருக்குமே!'என்று எண்ண ஓட்டத்தில் ஏதோ நினைவுக்கு வந்தவனாக இந்துவைக் கேட்டான்.

''பார்த்தீர்களா? எனக்குத் தெரியும் நீங்கள் இப்படிக் கேட்பீர்கள் எனறு. அப்புறம் நாளைக்கு 'இதை நேரிலே பார்க்கணும் போலிருக்கு என்பீர்கள். இதுக்குத்தான் அவுட் அவுசில் குடி வைக்கலாமா? என்றேன்'' என்றாள் இந்து.



''டார்லிங்! புரியும்படியாகப் பேசேன்!'' என்றான் ராஜா.

முதல் நாள் கடைத் தெருவுக்குப் போனது, கடையில் தற்செயலாகத் தன் பழைய சிநேகிதி சித்ராவைப் பார்க்க நேர்ந்தது எல்லாவற்றையும் விவரமாகச் சொன்ன இந்து, அவள் குழந்தை ரதிதான் இந்த போட்டோவில் இருக்கும் குழந்தையென்றும் சொல்லிவிட்டு, ''ராஜ் சித்ரா இருக்கும் வீடு அவளுக்குப் பிடிக்கவில்லையாம் வேறு வீடு பார்க்கிறார்களாம்'' என்று பூடகமாய்ச் சொன்ன பொழுதில்தான் 'ஏன்' என்பது மட்டுமல்ல, யாரை அந்த அவுட் அவுசில் குடி வைக்கத் துடிக்கிறாள் என்பதும் ராஜாராமனுக்குத் தெரிந்துபோனது.

கணவனின் அமைதியைத் தனக்கு சாதகமாக்கிக் கொண்டு, அவன் மார்பில் சற்றே சாய்ந்து, முகவாயில் கையை வைத்து ''ப்ளீஸ் டார்லிங்...சந்துருவிற்கு நல்ல படிப்பு வேண்டும் என்று ஊட்டி கான்வெண்டுக்கு அனுப்பியதில் இருந்து எனக்கு என்னவோ மாதிரி இருக்கிறது ராஜ்...மேலும் சித்ரா படித்தவள்—அவள் கணவனும் நல்லமாதிரி. நமக்குத் தொந்தரவாக இருக்கமாட்டார்கள், ராஜ். இந்த ரதி வேறு, வேற்றுமுகம் இல்லாமல் நேற்று பகல் முழுக்க என்னிடமே இருந்ததாக்கும்...ராஜ்—ப்ளீஸ்...ப்ளீஸ்...'' என்று மெல்லக் கேட்டாள்.

# 5

''மலை மேலே மலைமேலே குண்டு...ம்...சொல்லு..''—ரதியை தூக்கினாள் இந்து.

''மலல்லல...என்ன?''

''நவாபு தோட்டத்திலே சண்டை,''

''சண்டை...''

''எங்கப்பன் முறுக்கு மீசை.

''அப்பா...மீசை...''

''எங்க ஆயி சுடறது தோசை...''

''தோசை...நேக்கு?...''

சிரிப்பு தாங்கவில்லை இந்துவுக்கு.

''எனக்கு கொஞ்சம் ஆசை...''

''நேக்கு தோசை''—அதையே திருப்பிச் சொல்லியது ரதி.

''துடைப்பக்கட்டை பூசை...''

இரண்டு வயது ரதிக்கு இந்தப்பாட்டைச் சொல்லிக் கொடுக்க முயன்ற இந்து, அந்தக்குழந்தை பெரிய பெரிய வார்த்தைகளைச் சொல்லமுடியாமல் திணறும் அழகை ரசித்தவண்ணம், ''தோசை வேணுமா, ரதி குட்டிக்கு? பூசை வேண்டாமா?''—என்று கூறிய வண்ணம் அள்ளிக் கொண்டு, இரண்டு கைகளாலும் அதன் முகத்தை அழுத் திப் பிடித்தவாறு வாயில் முத்தமிட்டாள்.

ஐந்து நிமிஷங்களுக்கு முன் மகளைப் பார்க்க அவள் வீட்டிற்கு வந்த மங்களம், பெண்ணைக் காணாமல் ஒவ்வோர் அறையாகத் தேடிக்கொண்டு வந்தவள், மாடி வராந்தாவில் ஊஞ்சலில் அமர்ந்தவாறு ரதியை மடியில் வைத்துக்கொண்டு இந்து கொஞ்சி மகிழும் இந்த காட்சி யைக் கண்டு, வராந்தா வாசலிலேயே நின்றுவிட்டாள்.

சந்துருவிடம்—பிறப்பால் அவளுடைய தம்பியாகி விட்ட அவனிடம்—இவள் அலாதி அன்பு காட்டியபோது இது சதையும் ரத்தமும் ஒன்றானதினால் உருவான பிணைப்பு என்று நினைத்திருந்தவளுக்கு,யாரோ சிநேகிதி மகளான ரதியிடமும் அதே பாசம் பெருக்கெடுத்து ஓடு



வதைப் பார்த்தபொழுது 'இந்தப்பெண் மனசு என்ன, சாட்சாத் அம்பாளோட மனசு தானா?''—என்று வியப்பு தான் எழுந்தது.

இந்துவுக்கு மணமாகி ஓராண்டு நிறையப் போகிறது. அதற்குள் இப்படிப் பிள்ளைப்பைத்தியமாக இருப்பவள்.. தனக்கென்று ஒன்றைப் பெற்றுக் கொள்வது தானே? ஒரு வேளை ஏதாவது பிள்ளை வேண்டாமென்ற திட்டத் தில்...?

இன்றைக்கு மகளிடம் எப்படியும் மனம்விட்டுப் பேசி விடுவது என்ற முடிவுக்கு வந்த மங்களம், ''இந்து'' என்று அழைத்தவாறே அவள் அருகில் சென்றாள்.

''அம்மாவா?—வாம்மா இந்த ரதி என்னமா பேசறது தெரியுமா? இப்படி உட்காரேன்'' என்று உற்சாகம் தாளாமல் பேசிய இந்து, ரதி பக்கம் திரும்பி ''எங்கே சொல்லு—மலை மேலே மலை மேலே குண்டு'' என்று மீண்டும் ஒருமுறை அந்தப்பாட்டைத் தொடங்கினாள்.

மங்களத்திற்கு ஏனோ அந்தச் சமயம் இந்தப் பேச்சு ரசிக்கவில்லை.

''இருக்கட்டும் இந்து...இது என்ன வரவர இரவு இல்லை, பகல் இல்லை என்று எப்போது பார்த்தாலும் நீ இந்தக் குழந்தையை வைத்துக்கொண்டு கூத்தடிக்கிறாய்? மாப்பிள்ளை என்ன நினைப்பார்?'' என்று தன் மன வேகத்தில் பேசியதும், ஒன்றும் புரியாத இந்து, ''என்ன அம்மா சொல்லுகிறாய்?'' என்று வினவினாள்.

ஒரு கணம்தான். தன்னைச் சுதாரித்துக் கொண்டு விட்டாள் மங்களம்.

''ஒன்றுமில்லையம்மா. பெற்றவர்களுக்குக் கொஞ்சம் கூட நேரம் கொடுக்காமல் நாமே இந்தக் குழந்தையை நம் கூடவே வைத்துக்கொள்வது சரியா? அதைத்தான் சொன் னேன்'' என்றாள்.

''ஓ! அதுவா? உண்மைதான்...இரும்மா, இவளை சித்ராவிடம் அனுப்பிவிட்டு வரேன்'' என்று பதில் சொல்லிவிட்டு, மாடி வராந்தாவிலிருந்து எட்டி தோட்டத்தைப் பார்த்து ''ஏய் சித்ரா, வந்து உன் பெண்ணரசியைக் கூட்டிக்கொண்டு போகிறாயா?'' என்று கூவிவிட்டுத் திரும்பினாள்.

மகள் கொடுத்த காப்பியைக் குடித்துக்கொண்டே மங்களம் இந்தக் கேள்வியைக் கேட்டாள். ''என்ன இந்து, நீ இப்படியே இருந்தால் எப்படி? என்னைப் பார்க்கிற இடத்திலேயெல்லாம் 'பெண் இன்னும் குளிச்சுண்டுதான் இருக்காளா?' என்று கேட்டுத் துளைக்கிறார்கள்...''

அதற்கு இந்து ஏதும் பதில் கூறாமல், அமைதியாக இருந்ததால், அவளே, ''நான் சொல்றேன்னு கோவிச்சுக்காதே இந்து. காலாகாலத்தில் அது உண்டாகணும். ஊரார் குழந்தைகளையும் தம்பியையும் ஊட்டி வளர்த்துட்டா ஆச்சா? உனக்கும் ஒண்ணு பிறந்தாத்தானே எங்களுக்கும், திருப்தி! உனக்கும் பாத்தியதை!'' என்றாள்.

''என்னம்மா, நீ இன்னிக்கு என்ன ஒரே 'லெக்சர், மூட்'லே இருக்கே?'' என்று கேலி செய்த இந்து சட்டென்று முகத்தைத் தீவிரமாக மாற்றிக் கொண்டு ''இதெல்லாம் நம்பிக்கையில் ஓரளவுக்குத்தான் இருக்கம்மா, எனக்கும் ராஜாவுக்கும் ஒண்ணு பிறந்தா நன்றாகத்தான் இருக்கும். உண்டாகவில்லையே. நாம என்ன பண்ணறது? மெதுவாகத்தான் பிறக்கட்டுமே! என்ன அவசரம்? குழந்தைதான் வேணும் என்றால், சந்துரு இருக்கான். இல்லை...ரதி இருக்காள்—இல்லைன்னா எத்தனையோ இருக்கு. மேலும் எங்களுக்கு என்ன அப்படி வயசாயிடுத்தா? என்னம்மா...?''என்றாள்.

இந்து, தன் வழிக்கே வருவதைக் கண்ட மங்களம் ''ஏதாவது கண் திருஷ்டி இருந்தாலும் இப்படி தடங்கலாகுமென்று சொல்லுவா. இதற்கு 'முப்பாத்து அம்மன் கோவிலுக்குத் தொட்டில் வாங்கிக் கட்டறேன்—நெய் விளக்குப் போடறேன்'' என்று வேண்டிக் கொண்டால் நல்லது என்கிறார்கள். செய்யலாமா?'' என்று துடிப்போடு கேட்டாள்.



சற்று நேரம் பதிலே பேசாமல் தாயை நோக்கிக் கொண்டிருந்த இந்து, ''அம்மா நீ இப்படிப் பேசறதை அவர் கேட்டால் என்னை ரொம்பக் கோவிச்சுப்பார். எங்க இரண்டு பேருக்குமே கடவுளிடம் நிறைய பக்தியும் நம்பிக்கையும் இருக்கு. ஆனா அதை, நீங்க சொன்ன தினுசிலே வழிபட்டாதான் பலன் கிடைக்கும் என்று நாங்க நினைக்கிறதில்லை. கடவுளுக்குத் தெரியாதா—யாருக்கு என்னென்ன, எப்படிச் செய்யணும் என்று? அதை விட்டுவிட்டு, 'தொட்டில் கட்டு', 'பணம் போடு'—என்று லஞ்சம் கொடுக்கச் சொல்றியே, அம்மா—இது சரியா? எங்களுக்கே இப்ப குழந்தை இல்லையே என்கிற குறை இல்லை—அதனாலே பேசாமலே விடு---'' என்று ஆணித்தரமாகப் பேசிய போது, இனி இவளிடம் பேசிப் பயனில்லை என்று மங்களம் அதோடு விட்டு விட்டாள்.

இந்துவும் தங்களுக்குள் நடந்த இந்தப் பேச்சுக்களை அறவே மறந்து விட்டாள். ஆனால் அன்று இரவு கணவனின் பரந்தமார்பில் சாய்ந்து உறங்க முற்பட்ட அந்த ஒரு கணத்தில், ஆமாம், எனக்கு ஏன் இன்னும் குழந்தை உண்டாகவில்லை? என்று நினைத்து விட்டு மறுகணமே என்ன பைத்தியக்கார நினைப்பு என்று எண்ணிச் சிரித்தாள்.

நாட்கள் என்கிற மொட்டுகள், மாதம் என்ற மலர்களாக மலர்ந்தன.

இந்த ஒண்ணரை ஆண்டு தாம்பத்திய வாழ்க்கையில் இந்து—ராஜா அனுபவிக்காத இன்பமே இல்லை.

வாழ்க்கை வசந்தமாக இருந்தது. அவர்கள் பாதையில் மலர்களாகக் கொட்டிக் கிடந்தன. தேனையும் மணத்தையும் வாரி இறைத்து, அவர்களைத் திக்குமுக்காடச் செய்து கொண்டிருந்தது காலம்.

திருமணமான வேளையோ — இல்லை இந்துவின் அதிருஷ்டமோ, இல்லை ராஜாவின் உழைப்போ தெரிய வில்லை. வக்கீல் ராஜாராமனின் செல்வாக்கும் கிடுகிடு வென்று உயர்ந்து கொண்டே போயிற்று.

எந்தச் சிக்கலான வழக்கு என்றாலும், எல்லாருக்கும் 'ராஜ்'தான் தேவைப்பட்டான்.

புகழுக்குத் தகுந்தபடி இந்து — ராஜாவின் வெளி வாழ்க்கை விரிவடைந்து, நண்பர்கள் வட்டமும் பெரிதா கியது,

அன்று—கோர்ட்டுக்கு ராஜா புறப்படுமுன் ''இந்து இன்று மாலை சபையர் தியேட்டருக்குப்போக வேண்டும் என்றாயே. இரண்டு டிக்கெட்டுகள் வாங்கிட்டேன். மாலை தயாராக இரு...'' என்று சொன்னவன், ''ஆமாம், நீ இப்பொழுது என்ன செய்யப் போகிறாய்?' என்று கேட்டான்.

''எனக்கா? ம். இருங்கள்...'' என்று ஒரு விநாடி யோசித்து விட்டு, ''காலை 11மணிக்கு சித்ராவும் நானும் ரதியை அழைத்துக் கொண்டு ஜூவுக்குப் போகிறோம். பாட்டு வாத்தியார் பிற்பகல் மூணு மணிக்கு வருவார். பிறகு அம்மாவுக்குக் கடைக்குப் போகணுமாம். அவ்வளவு தான் முடித்துக்கொண்டு நான் ஐந்தரைக்குள் தயாராகி விடுவேன்...' என்று இந்து சொன்ன பொழுது 'அம்மாடி! இந்தப் பெண்ணுக்குத்தான் உடலிலும், மனசிலும் எவ்வளவு சக்தி இருக்கிறது'' என்று வியந்தான்.

முதல்நாள் சினிமாவுக்குப் போய்விட்டு வந்து இரவு இரண்டு மணிக்குப் படுத்ததாலோ என்னவோ, அன்று எழுந்திருக்கும்போது இந்துவுக்குத் தலையைக் கனத்தது. ஜுரம் வருவதுபோல அசத்தியது.

''டாக்டரிடம் காண்பியேன்'' என்று ராஜா வற் புறுத்திய பொழுது—



''வேண்டாம் டார்லிங், நாளைக்குப் பார்த்துக்க லாம்'' என்று தட்டிக் கழித்துவிட்டாள் இந்து.

ஆனால், மறுநாள் உடம்பு வழிக்கு வராததால், லேடி டாக்டரைப் பார்த்தவள்—அவள் மறுபடியும் அடுத்தநாள் வரச்சொன்ன பொழுது அவளுக்கே புதிராக இருந்தது.

அன்று மதியம் குளித்து விட்டு காலிசிந்த் புடைவை ஒன்றை உடுத்திக் கொண்டு டாக்டரை மீண்டும் பார்க்கச் சென்ற பொழுது என்னவென்று சொல்லத் தெரியாதபடி உள்ளம் பரபரத்தது.

மாலையில் ''ஹலோ இந்து குட்டி—என்ன, மகாராணி மாதிரி, வாசலில் மலர்ந்து கொண்டு நிற்கிறாய்?'' என்று கேட்டபடியே உள்ளே நுழைந்த கணவனைத் துள்ளல் நடையுடன் பின் தொடர்ந்தாள் இந்து.

அவள் முகம் சிவந்தது. கண்களில் மகிழ்ச்சி அருவி யாய்க் கொட்டிறறு.

''என்ன இந்து! ஐயாவுக்கு இந்த வரவேற்பு கிடைக் கும்படி நான் என்ன பாக்கியம் செய்தேன்?'' என்று மனைவியின் இடையைச் சுற்றி வளைத்துக் கொஞ்சினான் ராஜா.

''வந்து டார்லிங்...ஊரில் ரொம்பத் தண்ணீர் கஷ்டம் வந்து விட்டதாம். அதனால் நான் இன்னும் எட்டரை மாசத்திற்குக் குளிப்பதில்லை என்று தீர்மானித்திருக் கிறேன்...''—பேச முடியாமல் அவள் திணறினாள்.

இந்து சொன்ன விஷயம் ராஜாவின் மூளைக்கு எட்டவே இல்லை.

மனைவியின் அழகில் லயித்திருந்த அவன் ''ஹோய்! எட்டரை மாசம் குளிக்க மாட்டாயா? அடக்கடவுளே! அத்தனை நாட்கள் குளிக்கா விட்டால், யு வில் ஸ்டிங்க்'' என்றான் மூக்கைப் பிடித்துக் கொண்டு.

''என் அம்மாவிடம் சொல்லுங்கள். 'இந்து நாற்பது நாளாய்க் குளிக்கவில்லையாம். இன்னும் எட்டரை மாசம் குளிக்க மாட்டாளாம்' என்று. அப்படியே கூத்தாடுவாள்'' என்றதும் 'ஜில்' என்று வயிற்றில் ஏதோ செய்தது ராஜாவுக்கு.

''ஏய்! ஏய்...! ஏய்...!'' என்று உரக்கக் கூவிக்கொண்டு இந்துவை அப்படியே குழந்தை மாதிரி தூக்கிக் கொண்டு கூத்தாடினான் அவன்.

## 6

இந்த சித்ரா இருக்கிறாளே, அவள் ஒரு சுவையான கதாபாத்திரம்.

அவள் உயரம் நாலடி பதினோரு அங்குலம்தான். ஆனால் குழந்தை முகம். எப்பொழுதும் சிரிப்பை அள்ளிக் கொட்டும் உதடுகள், துடிப்பான பேச்சு. இவை அவளுக்கு இயற்கை தந்த சீதனங்கள். சித்திரக் குள்ளன் மாதிரி அவள் இங்கும் அங்கும் ஓடிக் கொண்டு, ஓர் இடத்தில் நிலையாக இருக்காமல் தனக்கே உரிய ஒரு தனி பாணியில் பேசுவதைக் கேட்கும் போது நமக்குச் சிரிப்புத்தான் முதலில் வரும். ஆனால், அவளுடைய பேச்சிலும், சைகையிலும் அப்பட்டமாக வழிந்தோடும் உண்மை—சிரத்தை—நம்மைச் சில நிமிஷங்களிலேயே கவர்ந்து அவள்பால் ஈர்த்து விடும்.

சித்ராவுக்கு சாதாரணமாகப் பேசவே தெரியாது. அவன் நடந்து வந்தான்—இவள் திரும்பிப் பார்த்தாள் என்று சாதாரணமாகச் சொல்லுவதைக்கூட அவள் தன் வழக்கப்படி ''அவன் 'டடங்—டடங்' என்று நடந்து



வந்தான், அவள் 'சொய்ங்' என்று சருக்கி விழுந்தாள்—என்று சினிமாவில்பின்னணி இசை கொடுப்பது போலக் கொடுத்துக்கொண்டு பேசும் பொழுது கேட்க மிகவும் வேடிக்கையாக இருக்கும்—அதோடு அபிநயமும் சேருமானால், கேட்க வேண்டுமா?

இன்று காலை ஏதோ வேலை விஷயமாக இந்துவின் வீட்டிற்குச் சென்றவள், பத்து நிமிஷத்தில் திரும்பத் தன் இல்லத்திற்கு வந்தபொழுது முகம்'பூம்' என்று மலர்ந்து கிடந்தது. அவள் மொழியிலேயே சொன்னாள் 'விசுக் விசுக்' கென்று நடந்து வந்து உள்ளே நுழைந்தவள், ''ரகு, உங்களுக்கு விஷயம் தெரியுமா?' என்று உற்சாகத்துடன் கைகளைப் பிணைத்துக்கொண்டு கேட்டாள்.

ரகுபதி—அவள் கணவன்—பேப்பரில் இருந்து தன் கண்களை எடுக்காமலே ''என்ன?'' என்றான்.

''நான் இவ்வளவு ஆர்ப்பாட்டத்தோடு கேட்கிறேன். நீங்கள் 'டம்' என்று 'என்ன' என்கிறீர்களே?'' இதற்குள் இடுப்பிலிருந்து கைகள் இரண்டு தடவை முன்னே நீண்டு வட்டமடித்துவிட்டு பழைய இடத்திற்கு வந்து விட்டன.

' நம் ரநிக்குத் தங்கையோ, தம்பியோ, 'ஜம்'மென்று பிறக்கப் போகிறதே—உங்களுக்குத் தெரியுமா?''

அவ்வளவுதான், கோடானுகோடி இடிகள் ஆயிரமாயிரம் மின்னல்கள் தன்னைத் தாக்கிய மாதிரிஅரண்டே போய் விட்டான் ரகு.

''என்ன...என்ன'' என்று அலறிக்கொண்டு எழுந்தவனுக்கு மேற்கொண்டு வாயில் வார்த்தையே வரவில்லை.

ரகு இருக்கிறானே, இவன் ஒரு சரியான பிரகிருதி 'தான் உண்டு. தன்வேலைகள் உண்டு' என்று சிலமனிதர்கள் இருப்பார்கள் என்பார்கள்—ஆனால், இவனுக்கு அதில் முதல்பாதிதான் பொருந்தும்—பிற்பாதி கிட்டே கூட வராது.

ஏதோ தெரியாத்தனமாய் நான்கு ஆண்டுகளுக்கு முன் தன் மாமா பெண் சித்ராவைக் காதலித்துவிட்டு, பிறகு திருமணமும் செய்துகொண்டுவிட்டான். அவன் படித்திருந்த பி ஏ. படிப்புக்கு டெல்லியில், பாவம், யாரோ ஒரு வேலை போட்டுக் கொடுத்தார்கள். முதன் முதல் தொடங்கிய நானூற்று ஐம்பது ரூபாய் சம்பளத்தோடு இப்பொழுது முக்கி முக்கி இன்னும் நூற்றைம்பது ரூபாய் சேர்ந்து எல்லாமாக அறுநூறு ரூபாய் வருகிறது. இதற்குள் அவனும் சித்ராவும் குழந்தை ரதியும் எப்படியோ கண்ணியமாகத்தான் குடித்தனம் நடத்தி வருகிறார்கள்.

சென்னைக்கு மாற்றினால் கொஞ்சம் செலவு கட்டுப்படும் என்ற நம்பிக்கையில் இங்கு மாற்றல் வாங்கிக் கொண்டு வந்தவர்களுக்கு ரதியின் அதிருஷ்டம் இந்துவின் வீடு கிடைத்தது. அதுமட்டுமல்ல, ரதியின் முக்கால்வாசிச் செலவுகளையும் இந்துவே செய்துவிடுகிறாள்.

அவனும் ஒருவர் வழிக்கும் போகாமல் 'அப்பாடா! இந்த மட்டும் நம் வருவாய்க்குள் நாம் இருக்க முடிகிறதே —என்று நினைத்து திருப்திப்படும் வேளையில்இப்படி ஒரு சேதியைத் தூக்கிப் போட்டால், அவன் தான் என்ன செய்வான்?

கணவனின் 'திரு திரு' முழிப்பைக் கண்டதுமே சித்ராவுக்குப் புரிந்து விட்டது.

'ராமா, ராகவா! எதுக்காக இப்படிக் கிடந்து 'உஸ் உஸ்' என்று துடிக்கிறீர்கள்? இந்து மூலமாக ரதிக்குத் தம்பியோ தங்கையோ பிறக்கப் போகிறது என்று தான் சொல்ல வந்தால்...?''

அம்மாடி—தலையில் இருந்த மலையை இறக்கிக் கீழே வைத்து விட்டாற் போன்ற உணர்வு ரகுவிற்கு

''அப்படியா? ஐம் வெரி ஹாப்பி'' என்று ஒரே வார்த்தையில் சொல்லிவிட்டு. மீண்டும் தன் பேப்பருக்கே போய் விட்டான்.



மாப்பிள்ளை ராஜ் வந்து சொல்லிவிட்டுப் போன விஷயத்தை மனைவியிடம் சொல்லி முடிப்பதற்குள் திணறிப் போனார் ராமசாமி.

''நமக்குப் பேரன் பிறக்கப் போறான்டி'' என்று ராமசாமி முடிப்பதற்குள் ''வெங்கடாஜலபதி, குருவாயூரப்பா, கருமாரியம்மா...எங்கள் வயிற்றில் பாலை வார்த்தீர்களே''— என்று கூவிய மங்களம், நேரே சுவாமி அறைக்குள் சென்று விளக்குகளை ஏற்றி, மூன்று தடவை கீழே விழுந்து வணங்கினாள்.

காரணம் இல்லாமல் இரண்டுதடவை மாடிப் படிகள் ஏறி இறங்கினாள். சமையற்காரியிடம் 'சொல்லியிருந்த சமையலை மீண்டும் ஒருதரம் மாற்றிச் சொன்னாள். கணவரிடம் மறுபடியும் ஒரு தடவை ''இது நிச்சயம்தானா?'' என்று கேட்டுக் கொண்டாள். கடைசியாகச் சிறிது படபடப்பு அடங்கியதும், பெண்ணுக்கு போன் செய்தாள்.

பேசுவது யார் என்று கூடத் தெரிந்துகொள்ளாமல் ''கண்ணு'' என்று பேச்சைத் தொடங்கினாள். ''இருங்கள், இந்துவைக் கூப்பிடுகிறேன்'' என்று மாப்பிள்ளை சொல்வதைக் கேட்டதும், தூக்கிவாரிப் போட வெட்கத்தால் கூனிப் போய் விட்டாள். இந்து வந்ததும் ''இந்தும்மா...உண்மையா நான் கேள்விப்பட்டது? என் வயிற்றில் பாலை வார்த்திியே'' என்று ஆனந்தம் தொண்டையை அடைக்கக் கேட்டாள்.

''இந்தா, இனிமேல நீ மிகக் கவனமா இருக்கணும்— மேலேயும் கீழேயும் தடதடவென்று ஓடாதே. நல்ல பால், தயிராகச் சாப்பிடு. வேண்டுமென்றால் மாப்பிள்ளையிடம் சொல்லிவிட்டு இங்கே வந்துவிடு. உடம்பு அசதியாக இருக்கிறமாதிரி சில சமயம் தோன்றும். அதற்கெல்லாம் கவலைப் பட்டுடாதே இந்தா...'' சரமாரியாகப் பேசத் தொடங்கி விட்டாள் மங்களம்.

இந்து சிரித்தாள்.

போனில் பேசி முடித்த பிறகு, உள்ளே சென்று பஞ்சாங்கத்தைக் கொண்டுவந்து கணவரிடம் கொடுத்த மங்களம், ''வளைகாப்பு சீமத்தத்துக்கு நாள் பாருங்களேன்'' என்று சொல்லவும் செய்தாள்.

மனைவியின் தலைகால் தெரியாத நடத்தையைப் பார்த்து மகிழ்ந்த ராமசாமி சிரித்தார். பிறகு சொன்னார். ''அடீ அசட்டு அம்மாவே...பெண்ணுக்கு இது எத்தனாம் மாதம் என்றுகூட இன்னும் தெரியாது. அதற்குள் வளைகாப்புக்கு நாள் பார்க்கச் சொல்கிறாயே! முதலில் விவரங்களைத் தெரிந்து கொண்டு வா'' என்றார்.

அப்பொழுதுதான் கொஞ்சம் தன் நிலைக்கு வந்தாள் மங்களம்.

அந்த பியட் காரை மெரினா சாலையில் குலுக்கல் இல்லாமல் ஓட்டிய ராஜா, இடபக்கம் ஒடித்து உள்ளே ஓடும் இன்னொரு சாலையில் வண்டியை விட்டான்.

பல்கலைக் கழகத்திற்கு எதிரே இருந்த அந்த இடம் மனித சஞ்சாரம் இல்லாமல் அமைதியாக இருந்ததை உணர்ந்து அங்கேயே வண்டியை ஓரமாக நிறுத்தினான்.

சற்றே தள்ளி, கதவு மேல் சாய்ந்துகொண்டு ஏதோ நினைப்பில் மூழ்கியவளாக இருந்த இந்துவை ராஜா ராமன் இடக்கையால் இழுத்துத் தன் தோளில் சாய வைத்துக் கொண்டான். வெட்கத்தால் சிவந்து கிடந்த அந்த முகத்தை வலக்கையால் தூக்கி, துடிக்கும் உதடுகளில் முத்தமிட்டு, ''நீ நேற்று சொன்ன சமாசாரத்தை விட இதுவரை என் வாழ்வில் எனக்கு வேறு எதுவுமே இனித்ததில்லை, இந்து'' என்று குரல் கரகரக்க அவளிடம் மெதுவாகச் சொன்னான்.

இந்து சிரித்தாள்—மென்மையாக.



என்னவென்று சொல்லத் தெரியாத ஓர் அமைதி, அவர்கள் இடையே அந்த வினாடி நிலவியது.

''மணலில் அமருவோமா?''

''ம்''

இறங்கி கையோடு கை இணைத்து, கால்கள் புதையப் புதைய மணலில் நடந்து, தண்ணீருக்குள் சமீபத்தில் போய் உட்கார்ந்தார்கள்.

நிர்மலமான ஆகாயம். வெள்ளியாகிப் பொழியும் நிலவு. அலைகள் கூட அந்த நேரத்தில் அமரிக்கையாக இருந்ததைப் போல இந்துவுக்குத் தோன்றியது

அலைகடலும் ஓய்ந்திருக்க

அகக் கடல்தான் பொங்குவதேன்?

நிலமகளும் துயிலுகையில்

நெஞ்சகந்தான் விம்முவதேன்?

''பொன்னியின் செல்வன்'' கதையில் படித்த இந்தப் பாடலின் வரிகள் அவள் நெஞ்சில் வந்து முட்டி நின்றன. ஆமாம், இந்த இதயம்தான் ஏன் இப்படி இன்பம் தாளாமல் பொங்குகிறது? உள்ளம் விம்முகிறது?

என் ராஜா என்னோடு, என் உயிரோடு சங்கமம் ஆனதற்குச் சாட்சி என் வயிற்றில் வளரத் தொடங்கி விட்டதா?

''உன் யோசனைகளுக்கு ஒரு நயாபைசா தரட்டுமா? என்று கேட்ட ராஜா, அவள் மடியைத் தலையணையாகக் கொண்டு காலை நீட்டிப் படுத்தான், பெருமூச்சு ஒன்றை உள்ளுக்கு இழுத்து, ''ஆகா, என்ன ஆனந்தமான இரவு'' என்றான். பிறகு மனைவியின் முகத்தை நோக்கி ''இந்து உனக்கு என்ன குழந்தை வேண்டும்? பெண்ணா இல்லை, பையன் வேண்டுமா?'' என்று கேட்டான்.

''உங்களுக்கு?''-அவள் அவனையே திருப்பிக் கேட டாள்.

''எனக்கா? எனக்குப் பெண்தான் வேண்டும்.''

''ஏன்?''

''ஏனோ! உனக்கு?''

''எனக்குப் பையன்—எ பாய் ஜஸ்ட் லைக் யூ''

''ஆ...ஏனாம்?''

''ஏனோ?''

'கலீர்' என்று இருவரும் சிரித்தார்கள்.

அவர்களுடைய அந்தச் சிரிப்பு கடலில், வானத்தில் பூமியில் எங்கும் எதிரொலித்தது, மீண்டும் 'கலீர்' 'கலீர்' என்றது.

என்ன விந்தையான மனிதர்கள் நாம்? நாற்பத் தைந்து நாட்கள் ஆவதற்குள் வளைகாப்புக்கு நாளையும், என்ன குழந்தை வேண்டும் என்றும் தீவிரமாக எண்ணத் தொடங்கி விடுகிறோமே! இப்படி மனக்கோட்டை கட்டி அதில் ஆனந்தமாக வாழும் குணம் மனித ஜாதிக்கு மட் டும் எப்படி வந்தது?

மனக்கோட்டையை பிரமாண்டமாகக் கட்டி விட் டால் அது இடிந்து விழும்போது வலியும் அதிகமாகத் தான் இருக்கும் என்பது நம்மில் பலருக்குத் தெரியாதது போலவே, இந்து—ராஜாவுக்கும் அப்போது தெரிந்திருக்க வில்லைதான்.

# 7

''கிரீச்...கிரீட்... கிரீச்... கிரிட்... கொட கொடோ கொட் கொட கொடோ கொட்...'' என்று சுவர்க்



கோழிகளும் பெரிய மிடாத் தவளைகளும் ஒரு சேர எழுப்பிய இந்தச் சத்தங்கள்தான் அந்தச் சூழ்நிலையை நிறைத்தன.

பெரிய பெரிய தேக்கு மரங்களின் அழகான வளர்த் தியோ, ஒருவர் இலையாகப் போட்டுச் சாப்பிடலாம் என்பதுபோல இருந்த பச்சை இலைகளோ, இரண்டு ஆட்கள் சேர்ந்து அணைத்தால்கூட அணைக்கமுடியாத அந்த மரங்களின் அடிப்பருமனோ இந்துவின் கவனத்தை ஈர்க்கவில்லை.

பிரமாண்டமாக இருக்கும் 'ஆரண்ய நிவாசின்' மிகச் சமீபத்திலே—பரந்து கிடந்த தண்ணீர்ப் பரப்பிற்கு அருகில் உட்காருவதற்கு ஏதுவாக இருந்த ஒரு பாறையில் துவண்டுபோய் அமர்ந்திருந்தாள், இந்து.

பச்சைப் பசேலென்று யாரோ அந்த வட்டாரம் முழு வதும் விரித்துப் போட்டுவிட்ட கம்பளம்மாதிரி சுற்றிலும் கண்ணுக்கெட்டிய தூரம்வரை மெத்து மெத்தென்ற புல் தரையும், அதன் மேலே துள்ளித் துள்ளி விளையாடிய நாய்க்குட்டிகளும் பறந்த பட்டாம்பூச்சிகளும்கூட இந்து வின் சலனத்தைத் தங்களிடம் இழுக்க அறவே தவறி விட்டன.

கையில் சில கூழாங்கற்களைச் சேர்த்துக்கொண்டு 'ப்ளுக் ப்ளுக்' என்று தண்ணீரில் எறிந்துகொண்டிருந்த இந்துவின் முகத்தில் முன்பெல்லாம் விளையாடும் சிரிப்போ குறுகுறுப்போ இப்போது இல்லை. அவள் சிந்தனைகூட ஒன்றிலும் நிலையாக இல்லாமல் எங் கெங்கோ சுற்றிவிட்டு வழக்கம்போலக் கடந்த ஆறு மாசங்களில் நடந்துபோன நிகழ்ச்சிகளிலேயே மீண்டும் வந்து நின்றது.

ஏன் இப்படி?...எங்கே என்ன தவறாகப் போயிற்று?

ஆயிரமாயிரம் முறைகள் தனக்குள்ளேயே கேட்டுக் கொண்டுவிட்ட இந்து இன்றும், இந்த நிமிஷத்திலும் அதையே மறுபடியும் நினைத்துக் கொண்டாள்.

சிந்தனையில் கரைந்து போய் அமர்ந்திருந்த இந்து வுக்கு கணவன் ராஜா பின்னால் வந்து நின்றதோ,

'போல்ராய்டு' காமிராவைக் கொண்டு தன்னை ஒருபடம் எடுத்ததோ, பிரிண்ட்டை கையில் வைத்துக்கொண்டு தன்னையே பார்த்து நிற்பதோ தெரியவில்லை. சிலையாய், அமைதியாய், தலையைக் குனிந்து, வெறித்த பார்வையுடன் அமர்ந்திருந்த மனைவியைப் பார்த்த ராஜாவுக்குத் தாங்கவில்லை. இரண்டு ஆண்டுகளுக்குமுன் கல்லூரி மாணவியாய் அழகின் வடிவாய் நிதானத்தின் உருவாய், தைரியமாய் தலைநிமிர்ந்து நின்று, தன் உயரம் எடுபட 'பளிச்' சென்று பேசி முதற்பரிசைத் தட்டிச் சென்ற என் இந்து எங்கே, இவள் எங்கே? அந்த வட்ட முகத்தில் முன்பு இருந்த அழகே இருந்தாலும் ஒரு வாட்டமும் வந்துவிட்டதே! எதற்கும் அஞ்சாதவளாய் இருந்த என் இந்துவை சமீபத்திய நிகழ்ச்சிகள் குலைத்து விட்டனவே! ராஜாவுக்கு நெஞ்சு வலித்தது.

மனைவியை உற்சாகப்படுத்த வேண்டியது தன் கடமை என்று உணர்ந்தவனாக "ஹாய்...இந்துக்குட்டி—எந்த உலகத்தில் இருக்கிறாய்? நான் வந்ததுகூடத் தெரியாமல்" என்று குரலில் குதூகலத்தைத் தருவித்துக் கேட்டவாறே அவள் அருகில் வந்தான்.

கணவன் அமருவதற்காக பாறையில் சற்று இடம் விட்டு நகர்ந்த இந்துவின் தோளை அணைத்தவாறே அங்கு அமர்ந்தான் ராஜா.

என்ன பேசுவது, எப்படித் தொடங்குவது என்று ஒரு கணம் யோசித்தவன் "என்னம்மா—என்னமோ மாதிரி இருக்கிறாய்?" என்றான்.

பெரிய ஓர் உயிரற்ற சிரிப்பை உதட்டில் ஓடவிட்ட இந்து "இல்லையே ஐம் ஆல்ரைட்" என்றாள் பதிலுக்கு.

"மாட்டிக்கொண்டாயா? எனக்குத் தெரியும் நீ இப்படிச் சொல்லுவாய் என்று அதற்குத்தானே கையில் ஆதாரத்தோடு வந்திருக்கிறேன்" என்ற ராஜா, சற்று முன் தான் எடுத்த புகைப்படத்தைக்காட்டி 'ம்...பார்த்துகொள்—எப்படி இஞ்சி தின்ற குரங்கு மாதிரி இருக்கிறாய்



என்று! அடக்கடவுளே! என் இந்துவா இது?...நம்பவே கஷ்டமாக இருக்கிறது" என்று சொன்னான்.

இந்து வாய் வார்த்தைகளாய் ஒன்றுமே பேசாமல் இருந்ததைத் தனக்குச் சாதகமாய் எடுத்துக்கொண்டு மேலும் "இந்தப் படத்தைப் பார் இந்து. இது ஏது தெரியுமா? உனக்கே தெரியாது! நம் தேனிலவில் பில்லர் ராக்சில் எடுத்தது. 'இங்கு நிறைய புதைகுழிகள் இருக்கும்-யாரோ கூட சமீபத்தில் புதையுண்டு இறந்து போனார்கள்' என்று ஒரு வழிகாட்டி சொன்னவுடன் 'அந்தச் சமாதிக்கு அழைத்துச் செல்; யார் அவர்? எப்படி இறந்தார்?' என்று நூறாயிரம் கேள்விகளைக் கேட்டு அவனைத் திணற அடித்தாயே அப்போது எடுத்த 'போட்டோ தான்..." என்றான்.

ஏதேதோ பேசிக்கொண்டு போனவன், "என்ன பேச்சு மூச்சைக் காணோம்?" என்று கேட்கவே 'ம்' என்றாள் இந்து.

"சரி...இதைப் பார்! நீ கல்லூரியில் பேசி, நான் உன்னைக்கண்டு மயங்கிப்போன அன்று எடுத்த படம் இது. அடேயப்பா! இந்தப் படத்தை ஒரு மாணவனிடம் இருந்து 'காபி' வாங்குவதற்குள் நான் பட்ட பாடு...அப்பொழுதெல்லாம் நீ எப்படி இருப்பாய் தெரியுமா, இந்து? "கரையை மூழ்கடித்துவிட வேண்டும்" என்ற எண்ணத்தில் சீறிக்கொண்டு வரும் அழகிய அலைபோல் இருப்பாய்...ஸோ ப்ரட்டி, ஸோ ஆக்டிவ்..."

பழைய நினைவுகளில் ஒன்றிப்போன ராஜாராமன் மீண்டும் மெல்லத் தொடர்ந்தான்.

"உன் அழகில் நான் முதலில் மயங்கவில்லை இந்து—ஆனால் அன்று நீ பேசத் தொடங்கினாயே, அந்தக்கணத்தில்—பேசிப் பேசி சபையோரை உன் நாவன்மையால் கட்டிப்போட்டாயே, அப்பொழுது என்னை இழந்தது நிஜம்தான். நீ அன்று மேடையில் நின்றபோது எனக்கு எப்படி இருந்தது தெரியுமா? ஏதோ ஒன்று என்னுள்ளிருந்து பிரிந்து தனியே வெளியே வந்து மேடையேறி

முழங்குவதைப் போல இருந்தது. டார்லிங்! அன்றைக்கும், அதன்பிறகும் உன்னிடமே—உன்னிடம் மட்டுமே காணப்பட்ட அந்தப்பேச்சும் சிரிப்பும் எங்கே? எனக்கு அவையில்லாமல் ஒன்றுமே பிடிக்கவில்லையே—இந்து...''

மனைவியின் தோளை அணைத்திருந்த ராஜாவுடைய கைகள் சற்றே நடுங்கி இறுகின.

இதற்கும் இந்து பதில் அளிக்கவில்லை—சிலை மாதிரி அமர்ந்திருந்தாள்.

'டுப் டுப்' என்ற சத்தத்துடன் படகு தண்ணீரில் சென்றது. மலைகளின் நடுவில் பள்ளத்தாக்குகளில் பெரியாற்றை அணைகட்டித் தடுத்துத் தேக்கியிருக்கிறார்கள்.

''உங்கள் மனைவிக்கு இப்பொழுது ஓர் இட மாறுதல் தேவை. முடிந்தால் நல்ல மலைப்பிரதேசத்துக்கு அழைத்துப் போங்களேன்''—லேடி டாக்டர், ராஜாராமனிடம் சென்ற மாசம் சொன்னதை மனதில் வைத்துக்கொண்டு அவர்கள் இங்கே வந்திருக்கிறார்கள்.

ஆயிற்று; அவர்கள் தேக்கடிக்கு வந்து நாலு நாட்கள் ஓடிவிட்டன. 'ஆரண்ய நிவாச'த்தின் அழகான சூழ்நிலையில் தங்கியிருந்தும் இந்துவின் போக்கில் மாறுதலே இல்லாமல் போகவே ராஜாராமன் தவித்துப் போய்விட்டான்.

ஆறு மாசங்களுக்கு முன்னால் ஒருநாள், மெரினாவில் தன் கழுத்தைக் கட்டிக்கொண்டு 'எனக்கு உங்களைப் போலவே ஒரு பிள்ளைதான் வேண்டும்' என்று குதூகலித்துச் சொன்ன இந்து அன்று இருந்த தினுசே வேறுதான்.

அவள் வயிற்றில் வளர்ந்த குழந்தைக்கு அறுபது நாட்கள் கூட ஆகவில்லை; அதற்குள் அவர்கள்தான் என்னென்ன நினைத்துவிட்டார்கள்.

''சகுந்தலா என்று பெயர் வைக்கலாமா?'' என்பான் அவன்.



''ஏன் அதைவிட இன்னும் பழங்காலப் பெயர்கள் கிடைக்கவில்லையா? கைகேயி—தாடகை...எத்தனையோ இருக்கின்றனவே''—என்பாள் அவள்.

''போக்கிரி''—என்று கூவிக்கொண்டு அவன் துரத்த அவள் ஓட, அவன் ஏதோ நினைவுக்கு வந்தவனாய் ''ஹேய் இந்துக்குட்டி ஓடாதே, ஓடாதே—'' என்று கெஞ்சுவான்.

இந்த மகிழ்ச்சியெல்லாம் அற்ப சந்தோஷம்தான் என்று அவர்களுக்கு எப்படித் தெரியும்?

அன்று பகல் பன்னிரண்டு மணி இருக்கும். கோர்ட்டில் வேலையாக இருந்தபோது திடீரென்று அவனுக்கு போன் கால் வந்தது, ''இந்துவுக்கு உடம்பு சரியில்லை'' என்று சித்ராதான் செய்தி சொன்னாள். அவன் ஓட்டமாய் ஓடி வருவதற்குள் எல்லாமே முடிந்துவிட்டிருந்தது—'பிள்ளை', 'பெண்' என்று கற்பனையில் எழுந்து ஆசைக்கும் அன்புக்கும் ஆராவமுதாய், பிள்ளைக்கனியாய் ஆடிவரும் சிறு தேராய் நினைவகம் முழுவதிலும் ஆடித் தீர்த்த 'அது' வெறும் சதைப் பிண்டமாய் வெளியேறி, நிராசையெனும் பெரு வெளியில் இருவரையுமே தள்ளிவிட்டது.

அன்று மாலை அழுது அழுது கண்கள் சிவந்திருந்த மனைவியை ஆதுரத்துடன் அணைத்தவாறு, ''போனால் போகட்டும் டார்லிங். அழாதே இந்தும்மா—நாம் இருவரும் இன்னும் சிறுவயதினராகத்தானே இருக்கிறோம்? இன்னொன்று சீக்கிரமே பிறக்காமலா போய்விடப் போகிறது'' என்று தேற்றியபோது ராஜா மிகுந்த சிரமத்துடன் தன் வேதனையை அடக்கிக்கொண்டான்.

இந்து எதிர்பார்த்ததைவிடத் தைரியமாகத்தான் அதைத் தாங்கிக் கொண்டுவிட்டாள்— யாராவது ''என்னம்மா, குறைப் பிரசவமாயிடுச்சாமே!'' என்று கேட்டு, போய்விட்ட குழந்தையை நினைவுபடுத்தினால்தான், கண்களில் கண்ணீர் முத்தாக உருளும். பல்லைக்

கடித்துக் கொண்டு தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டுவிடுவாள்.

இதற்கும் மேல் மனம் சஞ்சலப்பட்டால், ரதியைக் கூட்டிக்கொண்டு எங்காவது காந்தி மண்டபம், பூங்கா என்று போய்விடுவாள்.

தெய்வத்துக்கு இதுவும் பொறுக்கவில்லை போலும்.

''அடடா! விழுந்து புரண்டு அழுவாள் என்று பார்த்தால்—அமைதியாக எடுத்துக்கொண்டுவிட்டாளே!'' என்று பொறாமை கொண்ட விதி, கண்ணைத் திறந்து அவளைப் பார்த்து விழிகளைப் பயங்கரமாக இன்னொரு முறை சுழற்றியது.

அடுத்த இரு மாசங்களுக்குள், விபத்தாலோ, இல்லை தெரியாத்தனத்தாலோ இந்து மீண்டும் 'கர்ப்பமாக' இருப்பதை உணர்ந்த போது, அன்னையும் கணவனும் மட்டுமல்லாமல் லேடி டாக்டரும் அதிர்ந்தே போனாள்.

''பச்சை உடம்பு, பலவீனமாக இருக்கும். எப்படித் தாங்கப் போகிறாளோ?'' என்று அவர்கள் பயந்தபடியே முடிவும் இருந்தது.

இரண்டாம் தடவையாக, லேடி டாக்டர் முன் துக்க முகத்துடன் நின்றான், ராஜாராமன்.

# 8

'நீங்களெல்லாம் படித்தவர்கள். நீங்களே இப்படி நடந்துகொண்டால் எப்படி மிஸ்டர் ராஜாராம்.''

லேடி டாக்டர் கேட்ட இந்தக் கேள்விக்குப் பதிலே சொல்ல முடியாதவனாய் நின்றுகொண்டிருந்தான் ராஜா.



''எப்படி இப்படி ஆயிற்று என்றே தெரியவில்லை, டாக்டர்'' கையை விரித்து, தோளைக்குலுக்கி மெதுவாகப் பேசினான் அவன்.

முதல் சந்தர்ப்பத்தைப் போலவே இந்த முறையும், ஐம்பத்தைந்து நாட்களைக்கூடத் தாண்டவில்லை.

''நேற்று இந்துமதியை நீங்கள் இங்கு அழைத்து வருவதற்குள்ளேயே காரியம் மிஞ்சிவிட்டது. புவர் கேர்ல்... மயக்கம் அடைந்துவிட்டாள். நேற்று மாலை அவர்களிடமிருந்த 'அதை' முழுமையாக எடுப்பதற்குள் நாங்கள் எவ்வளவு பாடுபட்டு விட்டோம்! இந்துக்கு ஒன்றும் ஆபத்தில்லை என்றாலும் நீங்கள் கொஞ்சம் கவனமாக இருந்திருந்தால் அவள் இவ்வளவு சிரமப்பட வேண்டி இருந்திருக்காது, இல்லையா?''

டாக்டர் பேசப் பேச, ராஜாராமனுக்கு வருத்தத்துடன் கோபமும் வந்தது. ''என்னடா, தன் அந்தரங்கத்தைப் பற்றி இவ்வளவு சுவாதீனமாகப் பேசுகிறார்' என்று. ஆனாலும் 'அவர் டாக்டர்; இந்துவின் உயிருக்குப் பொறுப்பாளி. அந்த ஆர்வத்தில் பேசுகிறார்' என்று தன் உணர்ச்சியை அடக்கிக் கொண்டான்.

''ஆறு மாச காலத்திற்குள் இந்த மாதிரி குறைப் பிரசவங்கள் இரண்டு நடந்துவிட்டதால், நீங்கள் இன்னும் ஓராண்டுக்கு மிகக் கவனமாக இருக்க வேண்டும்—இந்து. கண்டிப்பாக இன்னும் ஓராண்டுக்குக்கருத்தரிக்கக் கூடாது. இது ரொம்ப முக்கியம்...யு அண்டர்ஸ்டாண்ட்?''

''நிச்சயமாக உங்கள் வார்த்தையை நான் காப்பாற்றுவேன் டாக்டர். ஆனால் இந்த விஷயம் இந்துவுக்குத் தற்சமயம் தெரியவேண்டாம்—இதை நாம் நமக்குள்ளேயே வைத்துக்கொள்வோமே'' என்று டாக்டரிடம் ராஜா கேட்டுக் கொண்டதும்—

''ஸர்டன்லி. உங்கள் அக்கறையைப் பாராட்டுகிறேன்'' என்று சொன்ன டாக்டர் ''ஆமாம், நீங்கள் ஏன் உங்கள்

மனைவியை ஒரு மலைப்பிரதேசத்துக்கு அழைத்துக் கொண்டு போகக்கூடாது? ஓர் இடமாற்றம் அவளுக்கு உதவி செய்யலாம்'' என்றும் யோசனை கூறியபொழுது, அது மிக நல்ல யோசனையாக ராஜாராமனுக்குத் தோன்றியது.

பேச்சு முடிவில் டாக்டர் ஒரு மாசம் கழித்து, இந்து ஊருக்குச் சென்று திரும்பிய பிறகு, தான் மறுபடியும் அவளைப் பரிசோதித்துப் பார்க்க விரும்புவதாகவும், இந்த மாதிரி குறைப் பிரசவத்திற்குக் காரணம் என்ன என்பதை ஆராய விரும்புவதாகவும் சொன்னதும், கட்டாயம் தாங்கள் தேக்கடியிலிருந்து திரும்பிய பிறகு மீண்டும் இந்துவை அழைத்து வருவதாகச் சொல்லிவிட்டு, ராஜாராமன் சென்றான்.

இட மாற்றம் இந்துவுக்கு இதமாக இருக்கும் என்ற நம்பிக்கையில் இங்கு வந்தவனுக்கு ஒரு வாரமாகியும், இந்துவிடம் மகத்தான மாறுதல் ஒன்றும் தெரியாததால் கவலை அதிகமாயிற்று.

அவனும் அவளைப் பழைய இந்துவாக மாற்ற என்னென்னவோ செய்து பார்த்துவிட்டான். எல்லாவற்றிற்கும் ஒரு புன்னகை; மிஞ்சிப் போனால் கண்ணீரைப் பதிலாகத் தந்து விடுகிறாள் இந்து

அன்று இரவு ''நாளைக் காலைச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு ஊருக்குத் திரும்புவோமா, இந்து?'' என்று படுக்கையில் அவளிடம் கேட்டான் ராஜா

'ம்' என்று சம்மதமாகக் குரலை எழுப்பிய இந்து, பார்வையை மோட்டு வளையில் ஓட விட்டவளாக அசையாமல் அவன் அருகில் கிடந்தாள்.

கிழித்த நாராகத் துவண்டு கிடக்கும் மனைவியைப் பார்த்த ராஜாராமனுக்கு வருத்தம்தான் பெருகியது. இந்த மாதிரி ஒவ்வொரு முறையும் குறைப் பிரசவமானால் எவ்வளவு சக்தி சேதமாகிறது உங்களுக்குத் தெரியுமா?' என்று



டாக்டர் அன்று கேட்டது காதில் ஒலித்தது, 'ஐயோ— மனைவியின் இந்த நிலைக்கு நான்தானே காரணம்'என்ற எண்ணமும் உலுக்கியது.

மெல்லத் திரும்பி இந்துவை அணைத்துக்கொண்டு, அவளை உற்று நோக்கினான். பிறகு கண்கள் கலங்க, 'டார்லிங் இந்து...கல்லூரி மாணவியாக பட்டாம்பூச்சி மாதிரி சிரித்துக் கொண்டிருந்த உன்னை, உன் மேல் ஏற்பட்ட பிரேமையால் திருமணம் என்ற பந்தத்தில் புகுத்தி, இப்படி இரண்டே ஆண்டுகளில் உன் இள உணர்ச்சிகளையெல்லாம் சாகடித்து விட்டேனேம்மா... டார்லிங் ப்ளீஸ், பர்கிவ்மீ...''என்று நா தழுதழுக்கக் கூறி, அவள் கன்னத்திலும் கண்களிலும் நெற்றி வகிட்டிலும் முத்தமிட்ட பின், இந்துவின் கூந்தலில் முகத்தைப் புதைத்துக் கொண்டதும், முதல் தடவையாக, 'இந்தத் துக்கம் தனக்கு மட்டுமல்ல; தன் அன்புக் கணவனுக்கும் உண்டு—அவர் அதை வெளியில் காண்பிக்காமல் தானே இதற்குக் காரணம் என்று உள்ளூரக் குமுறுகிறார்' என்பதை உணர்ந்த இந்து அதிர்ந்து போனாள்.

தன்னை மறந்தாள்; தன் வேதனையை மறந்தாள். தன் அன்புக் கணவனின் துக்கத்தை மாற்ற வேண்டும் என்ற வெறி வீறிட்டுக் கொண்டு எழ ''ராஜ், ராஜ்...தயவு செய்து அப்படி இன்னொரு தரம் சொல்லாதீர்கள் ராஜ். நீங்கள் எனக்குக் கிடைத்ததை நான் செய்த புண்ணியம் என்று நினைக்கிறேன் ராஜ்—நீங்கள் என்னிடம் மன்னிப்பு கேட்கிறீர்களே, இது நியாயமா ராஜ்? இப்போது என்ன ஆகிவிட்டது? நீங்கள் சொல்வது போல் நாம் இருவருமே இள வயதினர்தாமே ராஜ்—டார்லிங். என்னைத்தான் நீங்கள் மன்னிக்க வேண்டும்—என் துக்கத்திலேயே மூழ்கி உங்களை மறந்துவிட்டதற்கு'' என்று விசித்து விசித்து அழுதவண்ணம் கணவன் மார்பில் சாய்ந்து விட்டாள்

அந்த நிலையிலேயே மெள்ள மெள்ள கணவன் மேல் சாய்ந்து உறங்கிப்போன இந்து-காலையில் கண் விழிக்கும்

போது ஓரளவுக்கு மனம் லேசாகி விட்டதைப் புரிந்து கொண்டாள்.

அருகே உறங்கிக் கொண்டிருக்கும் ராஜாவைத் திரும்பிப் பார்த்தாள். ஆண்மை சுடர்விடும் அந்த முகத்தில் கவலையாலும் வேதனையாலும் கோடுகள் குறுக்கும் நெடுக்கும் ஓடி இருந்தன. நான்தான் இந்தச் சில நாட்களில் எவ்வளவு பைத்தியக்காரி மாதிரி நடந்து கொண்டிருக்கிறேன்! ராஜ் எனக்குக் கலகலப்பை ஊட்ட எத்தனை பாடுபட்டிருக்கிறார்? இதை நான் ஏன் உணர வில்லை!

கண்களைத் துடைத்துக்கொண்டு சில விநாடிகள் மரமாய், கல்லாய் அமர்ந்திருந்தவள், ஏதோ தனக்குள்ளேயே ஒருமுடிவுக்கு வந்தவள் போலத் தலையை ஆட்டிக் கொண்டு சப்தமில்லபமல் எழுந்து குளியல் அறையில் நுழைந்து தாளிட்டுக் கொண்டாள்.

குட் மார்னிங் தூங்குமூஞ்சிக் கணவர் அவர்களே!'' என்று இனிமையாகப் பேசிக் கொண்டே இந்து உலுப்பியதில் கண் விழித்த ராஜாராமன்—குளித்து மங்கள முகத்துடன் கையில் காப்பியுடன் நின்ற மனைவியைக் கண் விரிய விழித்துப் பார்த்தான்.

இது என் இந்தும்மாதானா?

இந்து பெரும் முயற்சி செய்து இப்படிக்குதூகலமாகப் பேசுகிறாள் என்பது அவனுக்குப் புரிந்துவிட்டாலும், அவளுடைய மாற்றம் நொந்துகிடந்த உள்ளத்திற்கு ஓர் அருமருந்தாக இருந்தது.

''இந்து! எனக்கு இப்போது உன்னை எவ்வளவு பிடிக்கிறது தெரியுமா?'' என்றவனிடம் 'எவ்வளவாம்!' என்று இந்து பதிலுக்குக்கேட்டதும் கைகள் இரண்டையும் அகல விரித்து, மூச்சை இழுத்துப் பிடித்து ''அவ...வ...வ...ளவு'' என்றான்.

பிறகு ''உனக்கு?'' என்று அவளிடம் கேட்டான்.



திடுமெனக் கண்களில் குறும்பு கூத்தாட ''எனக்கா? எனக்கு இவ்வளவு—'' என்று சுண்டைக்காய் அளவு விரல்களைக் குறுக்கி அவள் அபிநயம் பிடித்ததும், அவன் ''போக்கிரி'' என்று செல்லமாகக் கூறி அவள் காதைத் திருகினான்.

மனங்கள் தங்கள் துயரத்தைக் கொஞ்சம் மறந்து சிரிக்க, சுமார் பதினோரு மணியளவில் ஊருக்குப் புறப்பட்டார்கள், இந்துவும் ராஜாவும்.

மலை இறங்கிக் கம்பம் என்னும் ஊரைத் தாண்டி மதுரை செல்லும் பாதையில் வண்டி செல்லும் போது ''சுருளி அருவி'' என்னும் பலகையைப் பார்த்துவிட்டு வண்டியை நிறுத்தி ''அது என்ன நீர்வீழ்ச்சி, பார்க்கலாமா?'' என்று சொல்லிக் கொண்டு வலப்பக்கச் சாலையில் திரும்பினான் ராஜா.

அது ஒரு சின்ன நீர்வீழ்ச்சி என்றாலும் அதிலும் ஓர் அலாதி அழகு இருந்தது. வானளாவி நின்ற மரங்களில் இருந்து உதிர்ந்து கிடந்த இலைகள் தரையை மறைக்கச் 'சலசல' வென்று சங்கீதத்துடன் விழுந்து கொண்டிருந்தது சுருளியாறு.

பழைய கொடைக்கானல் அளவு குதூகலமும் விளையாட்டும் வராவிட்டாலும், ஓரளவு சிறுபிள்ளைகளாகவே மாறி, மனித நடமாட்டமே இல்லாததால் நன்றாகக் குளித்தார்கள், இந்துவும் ராஜாவும்.

குளித்து முடிந்த பிறகு அங்கு இருந்த ஒரே ஓர் அறை போன்ற ஒன்றில் இந்து உடை மாற்றிக் கொள்ளப் போன பொழுது ராஜாவும் கூட வந்தான்.

''என்ன ராஜ் நீங்கள்? இப்படிக் கூடவே வந்தால் நான் எப்படி உடை மாற்றிக் கொள்வதாம்?''—சிணுங்கினாள் இந்து.

''ஆ...! நான் வராமல் வேறு யார் வருவார்கள்?'' என்ற ராஜா ''இந்து...இந்து...''என்று கெஞ்சவும் செய்தான்.

பல நாட்களுக்குப் பிறகு இருவரும் மனம் விட்டுச் சிரித்தார்கள். அந்த நேரத்தில் இந்துவுக்கு அருவியும் அந்த மரங்களும் தங்களுடன் சேர்ந்து சிரிப்பதாகவே தோன்றியது.

அருவிக்குப் போகும் பாதையின் முடிவில் ஒரு சின்னக் கோவில் இருப்பதை அப்போதுதான் பார்த்தாள் இந்து. ஒரு சூலம் வேறு தரையில் புதைக்கப்பட்டுக் குங்குமமும் எலுமிச்சம் பழமுமாகக் காட்சி அளித்தது அருகில் ஒரு தட்டில் விபூதி, குங்குமம்.

என்ன தோன்றியதோ—சட்டென்று குனிந்து விபூதியையும் குங்குமத்தையும் எடுத்தவள் கண்களை நிமிர்த்திக் கணவனின் பார்வையைச் சந்தித்தாள். 'என்ன இந்து, அது யார் வைத்ததோ, யார் கைபட்டு எடுத்ததோ, சுகாதாரம் வேண்டாமா?' என்று அந்தக் கண்கள் கேட்பதையும் பொருட்படுத்தாமல் நெற்றியில் அவைகளை இட்டபின் மேலே நடந்தாள்.

வண்டியில் ஏறிப் பூட்டியிருந்த கதவுகளைத் திறந்தவர்களை வரவேற்றது பலாப்பழ மணம்தான்—தேக்கடியை விட்டு கிளம்பும் போது ஒருவன் ஐந்து ரூபாய்க்கு நான்கு பழம் என்று மலை வேர்ப்பலாபழத்தை வலுவில் தலையில் கட்டி விடவும், ஊருக்குச் சென்று வரட்டி பலாப்பழ அல்வா தயாரிக்கலாமே என்ற எண்ணத்தில் அவற்றை வாங்கி வண்டியில் போட்டிருந்தாள் இந்து.

ஆனால், அந்த பழங்கள் அவளுக்கு வாழ்க்கையில் மற்றொரு மறக்க முடியாத துயர நிகழ்ச்சியைத் தரப் போகின்றன என்பதை அவள் அப்போது அறிவாளா? ம்ஹூம், மாட்டாள்!

# 9

**''தேவி நீயே துணை !**
**தென்மதுரை வாழ் மீன லோசனி!**
**தேவாதி தேவன் சுந்தரேசன் சித்தம்**
**கவர் புவனசுந்தரி! கௌரீ!''**

கீர்வாணிராகத்தில் மதுரை மீனாட்சி அம்மன் சன்னதியில் இநதப் பாடலைப் பாடிக் கொண்டிருந்த இந்துவுக்கு, பாடப் பாட, தெய்வீகத்தின் உருவாய் நின்று கொண்டிருந்த மீனாட்சி அன்னையைப் பார்க்கப் பார்க்க உள்ளம் சிலிர்த்தது.

அதிகாலை வேளை!

நிசப்தத்தில் மூழ்கிக் கிடந்த கோவிலின் பிராகாரத்துச் சுவர்களில் இந்துவின் பாடல் முட்டி மோதிக் கொண்டு, அங்கேயே சுழன்று 'ம்' என்று யாரோ தம்பூராவை மீட்டுவது போல் ஒலித்தது.

முதல் நாள் மாலை மதுரையை அடைந்ததும் நேரே பாண்டியன் ஓட்டலுக்குச் சென்று அங்கு ஒரு அறையை வாடகைக்கு எடுத்துக் கொண்டார்கள். அலுப்பு தீரக் குளித்து, உணவு அருந்தி விட்டுப் படுத்தபோது இருவருக்குமே உறக்கம் கண்களைச் சுற்றிக் கொண்டு வந்தது.

காலையில் விடியும் முன்பே எழுந்துவிட்ட இந்து கணவனை எழுப்பி ''மீனாட்சி அம்மன் கோவிலுக்குப் போகலாமே!'' என்று அழைத்ததன் பேரில் இருவரும் அந்த அதிகாலை நேரத்தில் கோவிலுக்கு வந்திருக்கிறார்கள்.

காலை பூஜைகள் முடிந்து சிலரே இருந்ததால் தீபாராதனை காட்டும் முன்பாக குருக்கள் "யாராவது பாடத் தெரிந்தால் பாடுங்களேன்..." என்று கூறியதும் தலையை நிமிர்த்திக் கணவனின் பார்வையைச் சந்தித்தாள் இந்து. என்ன பாடப் போகிறாயா? என்று அந்தக் கண்கள் கேட்கவே, இந்து கணீரென்ற குரலில் முன் சொன்னவாறு பாடினாள்.

ஒன்பது கஜப்புடைவையைத் தழையத் தழைய உடுத்திக் கொண்டு சிறுத்த இடையும், அழகிய முகமும் கொவ்வைச் சிரிப்பும், காருண்யத்தைப் பொழியும் கண்களுமாக நின்று இந்துவின் நாதப் பிரவாகத்தைச் செவியாரப் பருகிக் கொண்டு நின்றிருந்தாள் அன்னை.

நெக்குருக இந்து பாடி முடிந்ததும் ஜகன்மாதாவின் சன்னதியை விட்டு வெளியே வந்த அவர்கள் நேராக எம்பெருமான் சன்னதிக்குள் சென்றார்கள். எந்தப் பள்ளிச் சிறுவர்களோ தெரியவில்லை, ஐந்து குழந்தைகள் ஒரு சேர நின்று தேவாரத்தை இனிய குரலில் பாடிக் கொண்டிருந்தார்கள். காலை வேளையில் அந்தப் பிஞ்சுக் குரல்கள் கேட்பவர்களின் உள்ளத்தில் பரவசத்தை உண்டு பண்ணின.

தேவாரம் முடியவும் அர்ச்சகர் தீபாராதனை காட்டவும் சரியாக இருந்தது.

அந்த நேரத்தில் "எல்லாரும் தட்டில் காசு போடுவா. தினமும் நாம் வருகிறோம்; ஆனா ஒரு காசுகூட போடறதில்லையேடா"—அங்கு கூடியிருந்த குழந்தைகளில் ஒன்று மென் குரலில் இன்னொன்றிடம் சொல்லியதை இந்துவும் ராஜாவும் கேட்டார்கள்.

அடுத்த சில கணங்களுள் தன் பர்ஸை எடுத்த ராஜாராமன் அதிலிருந்த சில்லறைகளைத் தன் கையில் கொட்டி அந்தக் குழந்தைகளிடம் சென்று ஆளுக்குக்கொஞ்சமாய்க் கொடுத்து "ம் தீபாராதனைத் தட்டில் போடுங்கள்"



என்று கம்பீரமாக, ஆனால், மெதுவாகக் கூறியதைக் கேட்டதும் இந்துவுக்கு சந்தோஷமாக இருந்தது.

இதைக் கேட்டதும் அந்த குழந்தைகள் முகத்தில் தான் எத்தனை குதூகலம்!

பிராகாரத்தைச் சுற்றி வந்துகொண்டிருந்த இந்து "எப்படி அந்தக் கணத்தில் உங்களுக்கு அந்த எண்ணம் தோன்றியது ராஜ்? அந்தப் பிஞ்சுப் பசங்களுக்கு என்ன சந்தோஷம் பார்த்தீர்களா? சில்லறைகளைத் தட்டில் போடும் போது அதுகளுக்குத்தான் எத்தனை பெருமை.." மீண்டும் மீண்டும் அதையே சொல்லி இந்து வியந்து போனாள்.

பதில் கூறாத ராஜா பிராகாரத்தில் யாரும் இல்லாததைக் கவனித்து விட்டு மனைவியின் இடையில் கையைச் சுற்றி அணைத்தான்.

"எனக்கு என்னவென்று சொல்லத் தெரியவில்லை. ஆனால், சந்தோஷமாக இருக்கிறது ராஜ்' என்று மறுபடியும் பேச்சை எடுத்த இந்து, "நமக்கு என்று குழந்தைகள் இருந்ததால்தான் சந்தோஷமா? உலகத்தில் எத்தனையோ குழந்தைகள் இல்லையா? ஒரே ஒரு நிமிஷத்தில் நமக்கு எத்தனை மகிழ்ச்சியை அவை கொடுத்து விட்டன" என்று சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் பேசினாள்.

கணவன் எதற்குமே பதில் சொல்லாமல் இருப்பதிலிருந்து தான் அவரை போர் அடிக்கிறோமோ என்ற நினைப்பு எழ அவசரமாகப் பேச்சை மாற்றினாள் இந்து.

"இந்தச் சிலையைப் பார்த்தீர்களா? அப்பா, எத்தனை அழகாக இருக்கிறது, என்ன பிகர்! என்ன உடற்கட்டு..." என்று அவள் வியந்ததும் 'சட்'டென்று குறும்பு வந்து விட்டது ராஜாராமனுக்கு.

"இது என்ன பிகர்? பூ...உன்னுடையதை விடவா?" என்று அவளை இன்னும் இறுக அணைத்ததும்—

''ஆ! இது கோவில். விடுங்கள்...விடுங்கள்...'' என்று இந்து கெஞ்சியதும்—

''அப்படி வா வழிக்கு...'' தான் சொன்னது உண்மை என்று நிருபணமாகிவிட்டாற்போல அகமகிழ்ந்தான் ராஜா.

வண்டி சென்னையை நெருங்கிக்கொண்டிருந்தது.

''ராஜ்! மறந்தே போனேனே!'' என்று விரல்களை உதறிய வண்ணம் இந்து பேசத் தொடங்கியதும், ''என்ன என்ன?'' என்றான் ராஜா, வண்டியின் வேகத்தைக் குறைத்தவாறு.

''ஒன்றுமில்லை. இன்றைக்குப் பதினாறாம் தேதி? இல்லை? சந்துரு ஊட்டியிலிருந்து இன்று காலை விடுமுறைக்கு வந்திருப்பானே? ஓ! நான் அங்கு இல்லை என்றால் ரொம்ப வருத்தப்பட்டிருப்பான் ராஜ், எனக்கு மறந்தே போய்விட்டதே!''

அந்த நிமிஷம் இந்துவை நினைத்து அவள் இன்னும் பல விஷயங்களில் மெச்சூரிடி இல்லாமல் இருப்பதை நினைத்து ராஜா வருத்தப்படவே செய்தான்.

ஆனாலும் ''அதற்கென்ன இந்து. போகிற வழியில் பத்து நிமிஷம் உன் வீட்டில் தங்கி சந்துருவைப் பார்த்தால் போகிறது, எனக்கும் உன் அப்பாவிடம் ஒரு வேலை இருக்கிறது'' என்றான்.

சந்துரு இந்த எட்டு மாதகாலத்தில் எவ்வளவு உயர்ந்து விட்டான்? நல்ல பள்ளியில் படிப்பதாலோ என்னவோ வயதுக்கு மீறிய நன்னடத்தை. ஆங்கிலமே பேசிப் பேசிப்பழகியதால் தமிழ் சரியாகப் பேச முடியாமல், கொச்சையாகப் பேசிய பேச்சு. ஆனால் அதை இந்து மிகவும் ரசித்தாள்.

சந்துருவோடு இந்து பேசிக்கொண்டு இருக்கையில் அவளுடைய பெற்றோருக்குத் தங்கள் பிரயாணத்தைச்



சுருக்கமாகச் சொல்லி முடித்த ராஜாராமன், ''புறப்படலாமா இந்து?'' என்று கேட்டான்.

''ஓ, போவோமே!'' என்ற இந்து ''டேய் சந்துரு, வாடா! எங்க வீட்டில் என்னோடும் அத்திம்பேரோடும் படுத்துக் கொள்ளலாம்'' என்று தம்பியை அழைத்தாள் இந்து.

''என்ன—உங்களோடு நான் படுப்பதா? சிறுகுழந்தை மாதிரி. என்னக்கா நீ? நான் இங்கேயே படுத்துக்கொள்ளுகிறேன்.'' காது சிவக்க, யாரோ தன்னிடம் கேட்கக்கூடாததைக் கேட்டுவிட்ட மாதிரி வெட்கப்பட்டுக்கொண்டு, சந்துரு பதில் சொன்னதும் இந்து பிரமித்துப் போய்விட்டாள்.

சில மாதங்கள் முன் வரைக்கும்கூட 'அக்கா' என்று தன்னைச் சுற்றிக்கொண்டு இருந்த சந்துருவா, இது?' என்று அவளுக்கு ஒரே மலைப்பு. ஆனால் சுதாரித்துக் கொண்டு ''பார்த்தாயா அம்மா, இவனுக்கு என்னோடு படுத்துக் கொள்ள வெட்கமாக இருக்கிறதாம்! பெரியவனாகிவிட்டான் அம்மா, என் தம்பி—'' என்று கூறிய பொழுது, அவள் சமாளித்துக்கொண்டு பேசுகிறாள் என்பது அங்கு இருந்த எல்லோருக்கும் நன்றாகப் புரிந்தது.

'போயேன் சந்துரு'' என்று பெற்றோர் வற்புறுத்தியும் ''நான் என்னம்மா இன்னும் சின்னப் பிள்ளையா!'' என்று இவன் கூறியதை இப்பொழுது வண்டியில் தங்கள் வீட்டுக்குச் செல்லும் போது இந்து திரும்ப நினைத்துக் கொண்டாள்.

அவளுக்கு ஒரு சின்ன அதிர்ச்சி ''பார்த்தீர்களா, பெரியவனாக நடத்த வேண்டுமாம். இவனை! ரொம்ப அனுபவப்பட்டவன் மாதிரி பேச்சைப் பாருங்கள்'' என்று அவள் சொன்னதும் முதன் முறையாக ராஜா அவள் பக்கம் திரும்பி ''அவன் கூறியதில் என்ன தவறு இருக்கிறது இந்து? பெரியவனாக எண்ணி எங்கோ ஒரு பள்ளிக்கு அனுப்பும் நாம் இங்கு மட்டும் குழந்தையாக

நடத்தினால் அவனுக்கும் பிடிக்குமா? மேலும் அவன் இன்னும் சிறு குழந்தை இல்லை இந்து. அவனுக்கு எட்டு வயதாகிவிட்டது. ரிமெம்பர் தட்' என்று ஆழ்ந்த குரலில் சொன்னதும் இந்து பேசவேயில்லை.

இந்துவைக் கண்டதும் ரதி ஆர்ப்பாட்டம் செய்து தீர்த்துவிட்டது. மடியில் ஏறுவதும் தோளைக் கட்டுவதும், ராஜாவிடமிருந்து இந்துவிடமும், இந்துவிடமிருந்து ராஜாவிடமும் ஓடி ஓர் அரைமணி வரை கலாட்டா செய்து விட்டது. பிறகு அதன் வெறி கொஞ்சம் அடங்கவும் இந்துவும் சித்ராவும் பேசலானார்கள்.

சாமான்களை எடுத்து வைத்துக்கொண்டே போன இந்து, பலாப்பழங்களில் ஒன்றை எடுத்து சித்ராவிடம் கொடுத்துவிட்டு ''வாசனை வந்துவிட்டது சித்ரா. நாளைக் காலையிலேயே அறுத்து விடு'' என்று சொன்னாள்.

பழத்தைப் பார்த்த ரதி ''நேக்கு...நேக்கு'' என்று ''தைதை'' என்று குதிக்கத் தொடங்கிய சமயத்தில் ''சொல்ல மறந்துவிட்டேனே இந்து. ரதிக்கு இரண்டு நாளாய்...''என்று ஆரம்பித்தாள். சித்ரா அதேகணத்தில் டெலிபோன் மணி அடித்தது. அதை எடுக்க யாரும் இல்லாததால் இந்துவே பாதிப் பேச்சில் உள்ளே போகும்படி ஆயிற்று.

அவள் திரும்பி வந்தபோது சித்ராவின் கணவன் ரகு, ''உறவுக்காரர் ஒருவர் வந்திருக்கிறார் வீட்டுக்கு வருகிறாயா'' என்று அங்கு வந்து சித்ராவைக் கேட்டதும், அவள் கிளம்பினாள்.

''ரதி இங்கேயே இருக்கட்டும் சித்ரா' இரவு படுக்க அனுப்புகிறேன்' என்று இந்து சொல்லவே சித்ரா கணவனுடன் புறப்பட்டுப் போனாள்.

''நேக்கு பயம். நேக்கு பயம்'' என்று விடாமல் ரதி கேட்டதைக் கேட்கச் சகியாத இந்து. சமையற்காரரை அழைத்துப் பழுத்திருந்த ஒரு பழத்தை நறுக்கச்



சொன்னாள். பிறகு மாடிக்குப் போய்க் குளித்துவிட்டு மாற்றுடை அணிந்து மறுபடியும் கீழே வந்தபோது ரதி கையில் ஒரு முழுச் சுளையை வைத்துக் கொண்டிருந்ததைப் பார்த்தாள்.

''அடேடே, நஞ்சையும், கொட்டையையும் எடுக்கலையே!'' என்று பதறிய இந்து, ''என்ன குழந்தையிடம் உரித்த சுளையை அல்லவா கொடுக்க வேண்டும்?'' என்று சமையற்காரரைக் கண்டித்தாள்.

'ஏற்கெனவே குழந்தை இரண்டு சுளைகளைத் தின்றுவிட்டது' என்பதைக் கூறினால் மேலும் தனக்கு வசவுகள் கிடைக்கும் என்று உணர்ந்த சமையற்காரர் 'இப்பத்தான் கையில் எடுத்தது'' என்ற முழுப் பொய்யைச் சொன்னார்.

இரவுச் சாப்பாட்டுக்கடை முடிந்ததும் ரதியை சித்ராவிடம் விட்டுவிட்டுப் படுக்கச் சென்றாள் இந்து.

இரவு மணி இரண்டு இருக்கலாம்.

''இந்தா இந்தா'' என்ற பதட்ட குரலில் சித்ரா அழைப்பதைக் கேட்டுக் கண் விழித்தாள் இந்து.

''ரதிக்கு வலிப்பு வந்திருக்கிறது. உடனே யாராவது டாக்டரைக் கூப்பிடேன்'' என்று அவள் துடித்ததற்கு மேலாகப் பதறிக்கொண்டு தங்கள் குடும்ப டாக்டரை அழைத்தாள் இந்து.

வலிப்பு வந்து, வாயில் நுரை தள்ள, கை கால்களெல்லாம் கோணலாக இழுத்துக்கிடந்த குழந்தைக்கு ஊசிமேல் ஊசி போட்டு என்னென்னவோ செய்தார் டாக்டர்.

''இது ஒருவித மாந்தம்...இது எதனால் வந்தது?'' என்று கேட்டவர், என்ன, பலாப்பழ வாசனை வருகிறதே, குழந்தைக்குக் கொடுத்தீர்களா?'' என்றும் கேட்டார்.

''ஐயோ, நான் இன்னும் பழத்தை நறுக்கவே இல்லை டாக்டர்'' என்ற சித்ராவைக் குறுக்கிட்டு, ''நான் ரதிக்கு எங்க வீட்டில் பலாச்சுளை கொடுத்தேன்' என்று இந்து

சொன்னதும் டாக்டர், ''அதுதான் இந்த வலிப்புக்குக் காரணம்'' என்று சொல்லிவிட்டார்.

அவ்வளவுதான், எரிமலையாய் வெடித்தாள் சித்ரா. யாரோடு பேசுகிறோம், என்ன பேசுகிறோம், கூட யார் இருக்கிறார்கள் என்ற உணர்வே இல்லாமல், தாய்ப்பாசம் கண்ணை மறைக்க அடிவயிற்றிலிருந்து சீறினாள் அவள்.

''குழந்தைக்கு இரண்டு நாளாக ஜுரம் என்று சற்று முன்தான் உன்னிடம் சொன்னேன். அதையும் மீறிக் கொண்டு, பழத்தைக் கொடுத்தாயா? இது என்ன அக்கிரமம் இந்து?''

டெலிபோன் மணி அடித்ததும், தான் சொல்ல வந்ததை முடிக்காமல் விட்டுவிட்டதும், அதைக் கேட்காமலே இந்து போய்விட்டதும், திரும்பி வந்த பிறகும் சொல்லச் சந்தர்ப்பமற்றுப் போனதும் அவளுக்குச் சற்றும் நினைவில்லை.

''ஜுரமா? ரதிக்கா? நீ என்னிடம் சொல்லவே இல்லையே!''

''என்னதான் ஆனாலும், என்னை ஒரு வார்த்தை கேட்க வேண்டாமா இந்து. உனக்குத் தெரியுமா, இல்லை பெத்த தாய் எனக்குத் தெரியுமா. குழந்தைக்கு என்ன ஒத்துக்கொள்ளும், கொள்ளாது என்று?''—அம்புகளாய்த் தன்னைத் தாக்கிய வார்த்தைகளைத் தாளமுடியாமல் கூனிக் குறுகி விறைத்துப் போனாள் இந்து.

உண்மைதானே?

ரதியைப் பெற்றவள் சித்ரா. அவளை ஒரு வார்த்தை கேட்டுத்தான் நான் எதையுமே செய்ய வேண்டும்.

நாத் தழுதழுக்க ''மன்னித்துவிடு, சித்ரா'' என்று சொல்லிவிட்டு ''டாக்டர் குழந்தைக்கு ஆபத்து ஒன்றுமில்லையே'' என்று டாக்டரைக் கேட்டவளுக்கு ''ஆபத்து இல்லை. காலையில் குழந்தை சரியாகிவிடும். கவலைப்படாதீர்கள்'' என்று அவர் சொன்னது சற்று தைரியத்தைத் தர மெல்ல நடந்து தன் வீட்டிற்கு வந்தாள்.



''என்னதான் ஊரார் குழந்தைகளை எடுத்து ஊட்டி வளர்த்தாலும் உன் குழந்தையாகுமா, இந்து...?'' அவள் தாய் என்றோ சொன்ன இந்த வார்த்தைகள் விசுவரூபம் எடுத்து, சுற்றி நின்று முழங்கின.

மாடியறையில் உறங்கிக் கொண்டிருந்த கணவனை உலுக்கி எழுப்பி ''எனக்கு ஒரு குழந்தை வேணும் ராஜா; நமக்கென்று ஒரு குழந்தை வேணும்...'' என்று உரக்க நெஞ்சு வெடிக்கக் கதறி அழுதபோது, என்ன விஷயம்? என்று புரியாமலே அவளை அணைத்துக்கொண்ட ராஜாராமன் பதறித்தான் போனான்.

# 10

''எனக்கு ஒரு குழந்தை வேணும்; எனக்கே எனக்கு என்று. நம்ப குழந்தை வேணும்...ராஜா...'' என்று உள்ளம் துடிக்க உடல் பதறக் கண்களிலிருந்து மாலை மாலையாய்க் கண்ணீர் வடிய, குரல் கம்ம, அழுது கொண்டே திரும்பத் திரும்ப புலம்பிய மனைவியைக் கண்ட ராஜாராமன் விக்கித்துப் போய்விட்டான்.

''டார்லிங்...டார்லிங்...'' என்று அழைத்தவண்ணம் அவள் முகத்தைத் தன் பக்கமாகத் திருப்ப முயற்சி செய்தும் பலனில்லாமல் போகவே, அப்படியே இந்துவை அள்ளி, மார்போடு அழுந்த அணைத்துக்கொண்டான்.

ஒரு கைக்குழந்தையைத் தேற்றுவது போல, ''என்னம்மா...என்ன இந்தும்மா...'' என்று மெதுவாக, இதமாகக் கேட்டவாறு அவள் முகத்தில் வழிந்தோடும் கண்ணீரைத் துடைத்தான்.

அழுகையினூடே திக்கிக்கொண்டு சாயங்காலம் சந்துரு தன்னை ஏமாற்றியதிலிருந்து தொடங்கிய இந்து. சித்ரா சற்று முன் தன்னை வந்து அழைத்ததையும், டாக்டர் வந்ததையும், ரதியின் உடம்பைப்பற்றியும் கூறிக் கொண்டே வருகையில் அவளுக்கு மேலே பேசமுடியாதபடி தொண்டையை அடைத்துக்கொண்டது; மார்பகம் விம்மி விம்மித் தணிந்தது.

''ராஜ்...ராஜ்...சித்ரா கேட்டதில் ஒன்றுமே தப்பு இல்லை, ராஜ்...உண்மையாக நான் யார்? ஆசையா குழந்தைகிட்ட இருக்கிறவள் என்பதைத் தவிர, எனக்கு வேறு என்ன உரிமை ராஜ்?...அம்மா அன்னிக்கே சொன்னாள்; 'அடீ, உனக்குன்னு ஒண்ணை...எப்போ பெத்துக்கப் போறயோ...அப்பதான் உனக்கு பாத்யதை...' என்று. ஆமாம்—டார்லிங்...அது ரொம்ப உண்மை...'' கண்ணில் தாரை தாரையாகக் கண்ணீர் வடியத் தாங்கொணாத் துக்கத்துடன், ''ராஜா—எனக்கு நம்ம குழந்தை வேணும். உங்க பிள்ளை வேணும்.'' என்று கண்களை மலர மலர வைத்துக் கொண்டு பரிதாபமாக இந்து கெஞ்சியபோது, ராஜாவின் இதயம் நொறுங்கிப் போயிற்று.

''பிள்ளைதானே இந்து...பெற்றுக் கொண்டால் போயிற்று. நாளைக்கே மீண்டும் டாக்டர்கிட்டே போவோம். என்ன வைத்தியம் சொல்கிறாரோ அதைச் செய்து கொள்ளலாம். பிறகு 'ஜம்'மென்று உனக்கும் பிள்ளை பிறப்பான்'' என்று அடித்தொண்டையிலிருந்து திரும்பத் திரும்ப ராஜா சொல்லவும், அந்த வார்த்தைகளில் ஒரு நம்பிக்கை கண்ட இந்து தன்னை மறந்து மெல்ல உறங்கலானாள்.



மறுநாள், சொன்னபடியே டாக்டரிடம் மாலை ஐந்து மணிக்கு இந்துவைக் கூட்டிக் கொண்டு வருவதாகச் சொல்லி ஏற்பாடு செய்து கொண்ட ராஜாராமன், சரியாக நாலரை மணிக்கு இந்துவையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டான்.

காரில் போகும் போது என்ன நினைத்துக் கொண்டாரோ, தனக்கு அருகில் இருந்த மனைவியின கைவிரல்களைத் தன்விரல்களோடு கோத்துக்கொண்டு 'இந்தும்மா டாக்டர் கிட்டே தைரியமா மனத்தை விட்டுப் பேசணும். தெரியுமா? மேலும் என்ன வைத்தியம் அவர் சொன்னாலும் செய்து கொள்ளவும் தயாராக இருக்க வேண்டும். சரியா?'' என்ற போது பதிலே கூறாமல் அமைதியாகத் தலையை ஆட்டினாள் இந்து. அவளுக்கு அப்போது இருந்த மனநிலையில் அவள் எதை வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருந்தாள். முதல்நாள் இரவில் இருந்து ''எனக்கென்றே ஒரு குழந்தை வேண்டும்'' என்ற எண்ணமே அவளுள் முழுக்க முழுக்க நிறைந்து இருந்தது.

காலையில் ரதிக்கு உடம்பு நன்றாகக் குணமானதும் ''இந்துக்கா இந்துக்கா'' என்று இந்துவின் வீட்டை நோக்கி கையைக் காட்டிக் கொண்டு அழவும் நேற்று இரவு தான் பேசின பேச்சுக்களை அறவே மறந்தவளாக சித்ராவும் குழந்தையை எடுத்துக் கொண்டு இந்துவிடம் வந்து ''கொஞ்சம் குழந்தையின் உடம்பு தேவலை ஆக வேண்டியதுதான்; உடனே உன்னிடம் வரவேண்டும் என்று 'ஙொய் ஙொய்' என்று நச்சரிக்கிறாள்'' என்று வழக்கம் போலவே இன்றும் சொன்ன பொழுது. இரவின் சுமை தாங்காமல் அயர்வுடன் அப்பொழுதுதான் கண் விழித்து, காலை காப்பி அருந்திக் கொண்டிருந்த இந்துவுக்கு, இந்தப் பெண்ணை நினைத்து அழுவதா, சிரிப்பதா என்றே புரியவில்லை. மனைவியின் அருகில் இருந்த ராஜாராமனுக்கும் இது காதில் விழவே அவளை நிமிர்ந்து 'பாவம் ஒன்றும் தெரியாதவள்...மன்னித்துவிடு இந்து... என்பது போல நோக்கவே, இந்துவும் அந்தக் கணத்தி

லேயே தன்னைச் சுதாரித்துக் கொண்டு சித்ராவை நோக்கிப் புன்னகைத்தாள்

இப்பொழுது காரில் கணவனுடன் டாக்டர் வீட்டை நோக்கிச் செல்லும் போது, முதல் நாள் நடந்த நிகழ்ச்சிகளை மீண்டும் ஒரு முறை நினைவு கூர்ந்த இந்துவுக்கு ஒன்று மட்டும் நன்றாகப் புரிந்தது. அதுதான் நேற்றைய நிகழ்ச்சி தனக்கு ஒரு பாடமாக அமைந்து விட்டதால், மூடிக்கிடந்த உணர்வு திறந்து கொண்டு 'எனக்கு என்று ஒரு குழந்தை வேண்டும் என்று அலறுகின்றது' என்பது.

''இந்துமதியின் யூட்ரஸில் கோளாறு இருக்கிறது மிஸ்டர் ராஜாராம்—சற்றே பின் நோக்கி வழக்கத்திற்கு முரண்பாடாய்ச் சாய்ந்திருக்கும் இந்துவின் கருப்பை, சூல் கொண்டதும் அந்த பளு காரணமாக இன்னும் பின்னால் சாய்கிறது. ஓரளவு கரு வளர்ந்தபின் கருப்பை பின்னால் எலும்பில் படுவதால் சிசு வளர—பை பெரிதாக இடமில்லாமல் போகவே குறைப்பிரசவமாக ஆகி விடுகிறது. இந்தக் குறை தீர வயிற்றைத் திறந்து கருப்பையை நேராக இருத்தித் தைக்கவேண்டும் பயப்படுவதற்கு ஒன்றுமில்லை. பல பெண்களுக்கு இப்படி இருந்திருக்கின்றது.''

ராஜாராமன் அமைதியாக டாக்டர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்து விட்டு எழுந்து வெளியே வந்தான்.

அவன் உள்ளே இருந்த பத்து நிமிஷங்களும் பத்து யுகமாகவே இருந்தன, அவனுக்காக வண்டியில் காத்திருந்த இந்துவுக்கு. அவன் வந்து வண்டியைக் கிளப்பின போது அவளால் தன் ஆவலை அடக்க முடியவில்லை ''டாக்டர் என்ன சொன்னார் ராஜ்?'' என்று கேட்டாள்.

மாலை மணி ஏழு ஆகிவிட்டதால், நன்றாக என்று சொல்ல முடியாதபடி ரெண்டும் கெட்டானாக இருள் சூழ்ந்திருந்த அந்த நேரத்தில் 'டிரைவ் இன் ரெஸ்டாரெண்'டில் வண்டியை ஓடித்து. ஒரு மரத்தடியில் தனிமையை நாடியவனாக நிறுத்திவிட்டு, 'பம்...பம்' என்று



ஹாரனை ஒலித்து இருமுறை சர்வருக்குத் தங்கள் வருகையைத் தெரிவித்த ராஜாராமன், நிமிர்ந்து உட்கார்ந்து இந்துவைப் பார்த்து, ''என்ன கேட்டாய் டார்லிங்?'' என்றான் சாவதானமாய்.

சர்வர் வந்து ஆர்டரைக் கேட்டுக் கொண்டு போய் விட்டதாலும் இனி பத்து நிமிடங்களுக்குத் தங்கள் தனிமையை உணர்ந்ததாலும் முன்னே சாய்ந்து கொடியாய் நீண்டு கிடந்த இந்துவை இழுத்து தோளில் சாய வைத்துக் கொண்டான் ராஜா. அவள் காதின் மீதும் முகத்திலும் விளையாடிய முடிக் கற்றைகளைத் தன் வலக்கையால் ஒதுக்கியவாறு ''உன் கர்ப்பப் பை கனம் தாங்க முடியாத நிலையில் இருக்கிறதாம்...இந்தா... அதைத் தூக்கிச் சரியாக வைத்துத் தைத்து விட்டால் எல்லாம் சரியாகி விடுமாம். அடுத்த வாரமே அப்படிச் செய்து விடலாம் என்கிறார் டாக்டர். எல்லாம் நல்லபடியாக முடியும் இந்து எது நடந்தாலும் நான் உன் பக்கத்திலேயேதான் இருப்பேன். யு மஸ்ட் பீ ப்ரேவ்'' என்று அமைதியான குரலில் நிதானமாய்ச் சொன்னான்.

அன்று இரவு உறக்கம் வராமல் புரண்டு எழுந்த இந்து. என்ன தோன்றியதோ முதல் தடவையாக நான் பட்டதாரி; அதுவும் உடலியல் படித்தவள் என்பதை அடியோடு மறந்து விட்டு ''ஆபரேஷன்' ரொம்ப 'மேஜராக' இருக்குமோ?'' என்று குழந்தை போல் கேட்டதும், ''இல்லை...இல்லை...மிக சாதாரணமானது டார்லிங்'' என்று அவளிடம் பதிலுக்கு கூறிய ராஜா அந்தக் கணம் இந்துவுக்கு ஆறுதல் தேவை என்பதை உணர்ந்து முதலில் கண்களிலும், பிறகு கழுத்திலும் தோள்பட்டை எலும்பிலும் மெதுவாக முத்தமிட்டவன், மெல்ல மெல்ல தன் அணைப்பை இறுக்கிக் கொண்டு ஆவேசத்துடன் ''இந்து நான் இருக்கிறேன். உன்கூட எப்போதும்...என்...டார்லிங்'' என்று முணுமுணுத்தான்.

''நான் அருகில் இருந்தால் இந்து ரொம்பத் தைரியமாக இருப்பாள்...டாக்டர்'' என்றான் ராஜாராமன்.

''எனக்குத் தெரியும்...ஆனாலும் நாங்கள் ஆபரேஷன் நடக்கும் பொழுது வெளி ஆட்களை உள்ளே அனுமதிப்ப தில்லையே...என்ன செய்வது?'' என்று பதிலுக்கு லேடி டாக்டர் சொல்லவும், ஒருகணம் என்ன செய்வது என்று புரியாத ராஜா திடீரென்று ''ஒன்று சொல்லட்டுமா? மயக்கம் கொடுக்கும் வரையில் நான் அவள் அருகில் இருக் கிறேன். பிறகு வெளியே வந்து விடுகிறேன் இந்து மயக்கத்தில் இருப்பதால்தான் நான் இருக்கிறேன் என்ற நினைப்பிலே அமைதியாக இருப்பாள். தயவு செய்யுங் கள், டாக்டர்' என்றான். மனைவியின் பேரில் ராஜா ராமனுக்கு இருந்த பாசத்தை அந்தக் குரலில் தெரிந்து கொண்ட டாக்டர் சிரித்துக் கொண்டே 'சரி' என்றார்.

ஏ. ஸி. செய்யப்பட்ட அறை. சுற்றிலும் பளுங்குச் சுவர்கள். பளபளவென்று மின்னும் ஆயுதங்கள்; பெரிய விளக்கு. முகமூடியணிந்த டாக்டர்கள், நர்சுகள்.

அந்த மேஜையில் படுத்துக் கிடந்த இந்துவின் முகம் வெளிறிக் கிடந்தது.

மயக்க மருந்துக் குழாயை அருகில் கொண்டு வரவும் சற்றே பயந்து, தலையைத் திருப்பியவள்,தன் கையை ஆண்மையுடன் அழுந்தப் பிடித்துக் கொண்டு 'உனக்கு நான் இருக்கிறேன்' என்று சொல்லாமல் சொல்லிய கணவனின் கண்களைச் சந்தித்தாள்.

அவ்வளவுதான் எங்கிருந்துதான் அவ்வளவு தைரிய மும் மனபலமும் வந்தனவோ தெரியவில்லை.

''ராஜா'' என்று மனத்துக்குள் முனகிக் கொண்டு அவனுடைய கையைப் பதிலுக்குத் தானும் பிடித்துக் கொண்டு அவள் எதற்கும் தயாராகி விட்டாள்.

அன்றைக்கு இந்துவுக்குத் தையல் பிரித்து விட் டார்கள்.

கோர்ட்டிலிருந்து வந்து நின்ற கணவனைக் கண்ட இந்து, ''ராஜ், நீங்கள் மிகவும் இளைத்துப் போய் விட் டீர்கள்'' என்றாள்.



மெல்லச் சிரித்தான் ராஜ். பிறகு ''நீ எழுந்து வந்து இரண்டு நாள் கவனித்தால் போதும் டார்லிங். திரும்ப பழையபடி ஆகிவிட மாட்டேனா?'' என்று சொல்லி மீண்டும் சிரித்தபோது, அவன் இந்தப் பத்து நாட்களாக எத்தனை மனக்கஷ்டத்திற்கு ஆளாகியிருந்தான் என்பதை இந்துவால் ஓரளவு புரிந்து கொள்ள முடிந்தது.

''டாக்டர் வருகிறார்'' என்றாள், தம்பதியைத் தனி யாக விட்டுவிட்டு அறைக்கு வெளியே நின்றிருந்த மங்களம்.

''என்ன மிஸ்டர் ராஜாராம்! எப்படியிருக்கிறீர்கள்?'' என்ற டாக்டரிடம், ''இந்து எப்படியிருககிறாள் டாக்டர்?'' என்று பதிலுக்குக் கேட்டான் ராஜ்.

''ஓ! எப்பொழுதும் உங்களுக்கு அவள் கவலை. அவளுக்கு உங்கள் நினைப்பு. எவ்வளவு ஒற்றுமையான தம்பதி!'' மனம் விட்டுச் சொன்ன டாக்டர், ''இந்து நன்றாய்க் குணமாகிவிட்டாள். நாளை மறுநாள் வீட்டுக் குக்கூட அழைத்துப் போகலாம்... ஆனால்...'' என்று சற்றுத் தயங்கிவிட்டுப் பிறகு ''முதல் ஆறு மாசங்கள் கனமே தூக்கக் கூடாது; மிகக் கவனமாக இருக்க வேண்டும். மேலும் நிச்சயமாக ஓராண்டுக்கு கர்ப்பம் தரிக்கக்கூடாது. இது ரொம்ப முக்கியம்...மிஸ்டர் ராஜா ராம்...'' என்றார்.

டாக்டர் போன பிறகு கணவனிடம் தனித்து விடப் பட்ட இந்து, அவன் கைகளை எடுத்துத் தன் கன்னத்தில் வைத்துக்கொண்டு 'பூ—ஓராண்டுதானே ராஜ்! நிமிஷமாக ஓடிப் போய் விடாதா'' என்று நம்பிக்கையோடு சொன்னாள்.

சொன்னவள் உண்மையாகவே காத்திருக்கவும் செய் தாள்

''வேண்டாம் என்று ஓராண்டும், 'வேண்டும் வேண்டும்' என்று மூன்று ஆண்டும் நம்பிக்கையோடு காத்திருந்தாள். காத்து காத்து ஏமாந்தவள் அந்த ஆண்டு முடிவில் மனதில் வேதனைச் சுமையைத் தாங்க சக்தி

அற்றவளாய்—தாயிடம் சென்று, ''அம்மா, 'முப்பாத்து அம்மன் கோவிலுக்குத் தொட்டில் வாங்கிக் கட்டலாம்... நெய் விளக்குப் போடலாம்' என்றெல்லாம் சொல்லுவாயே அம்மா, செய்யலாமா அம்மா?'' என்று தன் பிடிவாதம் உருகக் கேட்டபோது, முடிமுதல் அடிவரை நிராசையினால் அவள் உயிர் புழுவாய்த் துடித்தது.

# 11

நீல்ல முழு நிலாவில் இருந்து ஒரு பகுதியை வெட்டிப் படுக்கையில் கிடத்தினாற்போல் உறங்கிக் கொண்டிருந்தாள் இந்து. ஒரு பக்கம் சற்றே ஒருக்களித்து ஒரு கையைக் கன்னத்திற்கடியில் வைத்து அழகுச் சிலையாய்ப் படுத்திருந்த இந்துவை யார் கண்டாலும் 'ஆகா! எப்பேர்ப்பட்ட பேரழகு' என்று வியக்காமல் இருக்கமாட்டார்கள்.

இந்துவுக்குச் சற்றுத் தள்ளி அமர்ந்து, உறங்கும் மனைவியையே பார்த்துக்கொண்டிருந்த ராஜாராமனுக்கு அவள் அழகோ, இல்லை, படுத்திருந்த பாங்கோ உள்ளத்தில் உறைக்கவில்லை. 'என் அன்புக் கண்மணி இந்தப் பன்னிரண்டு மாசக் காலத்தில் எவ்வளவு அல்லல் பட்டிருக்கிறாள்!' என்றே திரும்பத் திரும்ப அவன் மனம் நினைத்தது.

திருமணமாகி ஐந்து ஆண்டுகள் வரை, அதாவது போன ஆண்டுவரைகூட, தான் உண்டு, தன் சிந்தனைகள் உண்டு என்று வாழ்ந்து வந்தவளின் பொறுமைக்கும் ஓர் எல்லை வந்துவிட்டது.

ஆபரேஷன் ஆன ஓராண்டு காலம் குழந்தை வேண்டாம் என்று இருந்தவர்களுக்கு அடுத்த இரண்டு வருஷங்களில் 'வேண்டும் வேண்டும்' என்று எப்படியெல்லாமோ முயன்று முயன்று பலனில்லாது போகவே, கவலை உண்டாகலாயிற்று.



இதனூடே மெல்ல மெல்ல இந்துவின் போக்கும் மாறுவதைப் புரிந்து கொண்டான் ராஜாராமன்.

அடிக்கடி தாயுடன் வெவ்வேறு கோயிலுக்குச் செல்லத் தொடங்கினாள். நாட்கள் செல்லச் செல்ல 'ஆருடம், சொல்பவர்,' 'நாடி ஜோசியம் கூறுபவர்' ஆகியவர்களுடைய இல்லங்களுக்கு விஜயம் செய்வதையும் அறிந்து கொண்டபொழுது ராஜாராமனுக்கு வருத்தமே ஏற்பட்டது

இந்துவுக்குத் தான் என்ன செய்கிறோம் என்ற உணர்வு இருக்கிறது. அதனால் நான் இதில் கவலைப்பட அவசியமே இல்லை என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டு கூடுமானவரையில் அவளுடைய நடவடிக்கைகளில் தலையிட்டுக் கொள்ளாமல் இருந்த ராஜா, அன்றொரு நாள் காலையில் குளித்துவிட்டு எதேச்சையாகக் கீழே பூஜை அறைப் பக்கம் சென்றவன், உள்ளே இந்து இருப்பதைக் கண்டு வெளியே நின்றான்.

**''தனம் தேஹி!**
**ப்ரியம் தேஹி!**
**ஸுபுத்ரம்தேஹி—ஸுரேஸ்வரீ!''**

என்ற சுலோகத்தை திருப்பித் திருப்பி இந்து சொல்வதைக் கேட்கையில் அவனுக்கு ஆச்சரியம் உண்டாயிற்று, 'இது எத்தனை நாளாய்?' என்று.

அன்று மாலை தனித்து இருக்கையில் ''என்ன இந்து, சுலோகங்கள் எல்லாம் அமர்க்களப்படுகின்றன. சுவாமியை எதற்குக் 'காக்காய்' பிடிக்கிறாய்? நான் தெரிந்து கொள்ளலாமா?'' என்று சும்மாவேனும் பேச்சிற்காகக் கேட்ட பொழுது, அவள் தடுமாறி நிலைகுலைந்தது அவனுக்கு என்னவோ போல் இருந்தது.

அவசர அவசரமாக முகத்தை மாற்றிக்கொண்டு "புளூடைமண்டில் நல்ல படமாம், போகலாமா?" என்று அவன் கேட்ட கேள்வியே காதில் விழாதமாதிரி அவள் பேசிய பொழுது இவள் என்னிடம் இந்த விஷயத்தைப் பற்றிப் பேசத் தயங்குகிறாளா? அல்லது தனக்குத்தானே யோசிக்கவும் அஞ்சுகிறாளா?என்றே ராஜா நினைத்தான்.

'இந்து நீ என் பழைய இந்துவா?' என்று கேட்டு அலற வேண்டும் என்று அவனுக்குத் தோன்றினாலும், வேண்டாம் அவள் வருத்தப்படுவாள் என்ற எண்ணத்தில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

நாட்கள் நகர்ந்து. மாதங்களாக மாறியபொழுது இந்து தன்னைச் சுற்றி ஒரு சுவரை எழுப்பிக்கொண்டு விட்டாள் என்பதைப் புரிந்து கொண்ட ராஜாராமனுக்கு அவள் அந்தக் கூட்டிற்குள் குதூகலமாக இருக்கிறாளா இல்லையா என்பது தெளிவாகவில்லை.

ஒருநாள் கோர்ட்டில் இருந்து திரும்பிய ராஜாவை வழக்கம் போலத் தானே அருகில் இருந்து கவனித்து விட்டுத் தயங்கி மெல்ல அவனிடம் இந்து சொன்னாள் "வந்து...வந்து ராஜ்! இராமேசுவரத்திற்குத் தம்பதியாய்ச் சென்று கடலில் குளித்தால் மிகவும் நல்லதாம்... டார்லிங்...போகலாமா?"

இதைச் சொல்லும்போது இந்துவின் கண்கள் தரையை நோக்கிக் கொண்டிருந்தன. என்றைக்கும் எதற்கும் தலையை நிமிர்த்தி, தன் உயரம் எடுபட, கண்ணோடு கண் நோக்கிப் பேசுபவள் இன்று தலை ஒடிந்த தாமரை போலக் கவிழ்ந்து நிற்பது ராஜாராமனை உலுக்கியது.

வருத்தமா கோபமா என்று பிரித்துச் சொல்ல முடியாத உணர்ச்சி மனசுள் வெடிக்க, நெற்றியில் சுருக்கங்கள் விழ, கண்ணில் சற்றே செவ்வரிகள் ஓட, அடிவயிற்றிலிருந்து "இந்தூ" என்றான் அவன்.

ஒரே வார்த்தைதான். இதற்குப் பிறகு அவளும் பேசவில்லை அவனும் பேசவில்லை.



பொழுது போய் இரவு உறங்கும்போது உள்ளே நுழைந்த நிலாவின் வெளிச்சத்தில் தூங்கும் இந்துவைப் பார்த்த ராஜா மெல்ல அவள் கன்னத்தை வருடினான். வருடும் கைகளில் சொரசொரவென்று காய்ந்து போன கண்ணீர் தட்டுப்பட அவள் அழுதிருக்கிறாள் என்பதைப் புரிந்து கொண்டான். அப்புறம் கொஞ்சம் யோசித்தவன் சட்டென்று ஒரு தீர்மானத்திற்கு வந்தான்.

மறுநாள் காலை கோர்ட்டுக்குப் போகும் கணவனுக்குக் கறுப்புக் கோட்டைக் கையில் எடுத்துக் கொடுத்த இந்து அமைதியாய், தேங்கி கிடக்கும் தண்ணீராய், உயிரோட்டமே இல்லாதவளாக அருகில் நின்றபொழுது, "இராமேசுவரம் போக வேண்டும் என்றாயே, டார்லிங். வருகிற சனி, ஞாயிறில் போய்த் திரும்பிவிடலாம்" என்று சொன்னதும், இந்துவுக்குத் தன் காதுகளையே நம்பமுடியவில்லை. பிரமித்து நின்றவளுக்கு மீண்டும் தன் உணர்வு வந்ததும், 'ராஜ்' எனக்காக எதையும செய்கிறாரே!' என்று தோன்றியதால், பதிலே பேசாமல் கண்களில் நீர் கோத்துக்கொள்ளக் கணவனின் கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

பிறகு? பிறகென்ன?

இராமேசுவரத்திற்குப் போனார்கள். தம்பதி சமேதராய் சேது சமுத்திரத்தில் குளித்தார்கள். கையோடு கை கோத்துக் குளிக்கும்பொழுது தன் விரல்களில் அழுங்கிக் கிடந்த இந்துவின் விரல்கள் படபடவென்று பட்டாம்பூச்சியாய்த் துடிப்பதை அவன் உணர்ந்தான்.

அந்த நேரத்தில் நம்பிக்கையே இல்லாமல் மனைவிக்காக மூழ்கி எழும் அந்த விநாடியில் நான் ஒரு பகுத்தறிவாளனா என்ற எண்ணம் ராஜாராமனுள் எழுந்து அவனை வருத்தத்தில் ஆழ்த்தியது.

மனசிற்கு உண்மையாகப் பிடிக்காததை வெளியில் சொல்லத் தைரியமில்லாமல்—என் அருமை இந்துவை நோக அடிக்க மனமில்லாமல்—ஒப்புக்காகச் செய்யும்

வேஷதாரி நான் என்றும் நினைத்துத் தன்னைத்தானே அவன் வெறுத்துக் கொண்டான்.

ஆனால், பக்கத்தில் குழந்தையாக மாறி நடுங்கும் கரங்களுடன் அவனைப் பற்றிக்கொண்டு நின்ற இந்துவைப் பார்த்த மாத்திரத்தில் ஓ! பரவாயில்லை. நான் இவளுக்காக-இவள் அடையும் மகிழ்ச்சிக்காக அதன் மூலம் நான் அடையும் ஆனந்தத்திற்காகவும் ஒரு 'வேஷதாரி'யாக இருப்பதில் பெருமை கொள்கிறேன் என்று தன் வருத்தத்தை மறந்து மகிழ்ச்சி அடைந்தான்.

இதெல்லாம் நடந்து மாசங்கள் ஓடிவிட்டன.

இன்று காலை குளித்துவிட்டு 'மடியாக' இந்து அவள் தாயோடு அருகில் பத்து மைல் தொலைவில் இருக்கும் சந்தான கோபாலகிருஷ்ணன் கோயிலுக்குக் காரில் சென்று அந்தக் கோவிலை அடைந்த இந்து,சிதிலமடைந்து கிடந்த கோவிலைச் சுற்றி நன்றாகப் பார்த்தாள். அந்த இடத்தில் அவள் அம்மாவும் அவளும்தான் தனித்து இருந்தார்கள்.

"என் பெண் திருமணமாகிப் பதினைந்து ஆண்டுகளாகப் பிள்ளை இல்லாமல் இருந்தாள். சந்தான கோபாலகிருஷ்ணன் கோவிலில் இருக்கும் தவழும் கிருஷ்ணன் சிலையை மடியில் வைத்துக்கொண்டாள். என்ன ஆச்சரியம் போங்கள்! உடனே கர்ப்பமாகிவிட்டாள்" என்று போன வாரம் வீட்டுக்கு வந்த ஓர் அம்மாள் சொல்லவும் மங்களம் அதை மகளிடம் தெரிவித்தாள்.

அம்மா கூறியபோது 'என்னம்மா, ஒவ்வொன்றாக எத்தனைதான் செய்வது?' என்ற கோபம் எழுந்தாலும், கூடவே இது உண்மையாக இருந்து, பலித்தும் விட்டால்? என்ற எண்ணமும் சேர்ந்து வந்து அவளைத் திசை திருப்பி விட்டது.

கோவிலின் படிகளில் ஏறிய இந்துவுக்கு அன்று ஏனோ தெரியவில்லை, சற்று படபடப்பாக இருந்தது.



இவர்கள் வரப்போவதை முன்கூட்டியே அறிந்திருந்த அர்ச்சகர் "வாருங்கள் வாருங்கள்" என்று வரவேற்று அமரச் செய்தார். பிறகு ஒரு சிவப்பு நிற—என்றைக்கு வாங்கியதோ மக்கிக் கிடந்த பட்டுத் துணியை இந்துவின் கையில் கொடுத்து, மடியில் விரித்துக்கொள்ளச் சொன்னார். வெங்கலத்தால் ஆன கிருஷ்ணன் சிலை ஒன்றை எடுத்துத் தானே, தன் கைபட "நீங்கள் தொடக் கூடாது" என்ன கூறியவண்ணம், அவள் மடியில்—அந்தப் பட்டுத் துணிமேல் வைத்தார்.

அந்தச் சிலை மடியில் கனத்தது, அதே விநாடியில் இந்துவின் உள்ளமும் கனத்தது.

"உடலியல் படித்து பிள்ளை எப்படி உண்டாகிறது. என்பதை நன்கு அறிந்த நான். இப்படி ஓர் அந்நியர் என் மடியைத் தொட்டு ஒரு சிலையைவைக்கச் சம்மதிக்கிறேனே, இது சரியா?' என்ற எண்ணம் எழ, 'நான் ஏன் இப்படி மாறினேன்!' என்றும் நினைத்து மனச்சுமை தாளாமல் விக்கி விக்கி அழலானாள்.

பதறிப் போனாள் மங்களம்.

அன்று இரவு கணவனிடம் கோவிலில் நடந்ததையெல்லாம் முதல் தடவையாக மனம் விட்டுப் பேசினாள் இந்து.

ஒன்றுமே குறுக்கே பேசாமல், அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த ராஜாராமன், தனக்குள்ளேயே சற்று யோசித்துவிட்டு, இன்றைக்கு இவளிடம் பேசியே தீர வேண்டும் என்ற முடிவுக்கு வந்தவனாய், இந்துவிடம் சொன்னான்.

"டார்லிங், 'நான் ஏன் மாறினேன்?' என்று கேட்கிறாயே- நீ மாறிவிட்டாயா? இல்லை, இந்தும்மா—நீ மாறவில்லை...உன்னைச் சுற்றி ஒரு போர்வையாக—ஒரு

சுவரை எழுப்பிக்கொண்டுவிட்டாய், அவ்வளவுதான். நீ அதில் மகிழ்ச்சியாக இருக்கிறாயா இல்லையா என்று நிச்சயமாகத் தெரியாததாகையால், இத்தனை நாட்கள் உன்னோடு இது விஷயமாகப் பேசாதிருந்துவிட்டேன். ஆனால் இப்பொழுது நீ சொன்னாயே 'கடவுளை என் மடியில் கிடத்தி அவரைக் கடவுள் இடத்திலிருந்து அகற்றி மனிதர்கள் இடத்திற்குக் கொண்டுவந்துவிட்டார்களே ராஜா?'என்று.இதிலிருந்து உன் மனசை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது இந்து, நீயும் இந்த ஓராண்டு காலத்தில் எத்தனை எத்தனை நோன்புகளையும் பிரார்த்தனைகளையும் பிள்ளை உண்டாவதற்காகச் செய்திருப்பாய்? இத்தனை செய்தும் உனக்கு ஏன் இன்னும் கர்ப்பம் தரிக்கவில்லை? இதிலிருந்தே தெரியவில்லையா. அது... நடக்க வேண்டிய நேரத்தில்தான் நடக்கும் என்று முயற்சி இருக்க வேண்டியது தான் டார்லிங்.ஆனால் இந்த மாதிரி தன் கையை மீறிய முயற்சிகள் தேவையில்லை. கடவுள் இருக்கிறார் இந்து...கண்டிப்பாக நம்பு. ஆனால் அவருக்கு இந்த மாதிரி வழிபாடெல்லாம் தேவையா? அவர் வாயைத் திறந்து உன்னிடம் 'இதைச்செய், அதைச் செய்' என்று கேட்டாரா? இல்லையே! பின் ஏன்? இந்து! மனிதனுக்குப் பகுத்தறிவு மிக அவசியம். அதை இழந்து விட்டால் நாம் மனிதர்கள் அல்ல; மிருகங்கள் தான்.

ஆமாம் கடைசியாக உன்னைக் கேட்கிறேன். நீ முன்பெல்லாம் சொல்வாயே—முழுமையான மனம் ஒன்றிய செயலைத் தான் உண்மை என்று இப்பொழுது சொல் நீ இத்தனை மாசம் இத்தனை காரியங்கள் செய்தாயே!... அவைகளை உன் மனசின் ஒவ்வோர் அணுக்களும் ஒன்றிச் செய்தாயா? உண்மையான எண்ணம், சிரத்தை இருந்தால் தான் பலன் உண்டு என்பாயே! அது உன் காரியங்களில் இருந்ததா? சொல்லேன் இந்து''

மடை திறந்தாற் போல் பேசினான் ராஜாராமன்.

''குழந்தை ஒன்று வேண்டும் என்கிற ஆசை உன்னை மாற்றவில்லை இந்து. ஆனால், உனக்கும் உன்பகுத்தறிவுக்கும். இடையே அது ஒரு மெல்லிய திரையைப் போட்டு விட்டது. எங்கே, அந்தத் திரையைக் கிழித்துவிட்டுச் சிந்தித்துப் பார் பிறகு எனக்குப் பதில் சொல்...''



கணவன் பேசப் பேச இந்துவின் முகம் தெளிவடைந்தது. மனமும் லேசானது.

கணவனின் அருகில் வந்து அவன் தோள்களில் தன்னைப் பதித்துக் கொண்டவள், ''ராஜ ராஜ்...'' என்று வார்த்தைகள் வராமல் தவித்தபோது, ராஜாராமனுக்கு மனைவியிடம் வெளிப்படையாகக் கண்ட மாறுதல் மகிழ்ச்சியைத் தந்தது.

இரவு இந்து தூங்கிய பிறகு, உறக்கம் வராமல் இப்பொழுது எழுந்து அமர்ந்திருந்தவனின் உள்ளத்தில் அமைதியும் நிரம்பியிருந்தது.

தெளிந்த பாலென உறங்கும் மனைவியின் முகத்தைப் பார்த்தவன், 'இவள் தனிமையைப் போக்க என்ன செய்யலாம்?' என்கிற யோசனையில் ஆழ்ந்தான்.

## 12

டெல்லி விமானம் வருவதற்கு இன்னும் பத்து நிமிஷத்திற்கு மேலேயே இருந்ததால், சற்று முன்னதாக விமானக் கூடத்திற்கு வந்துவிட்ட இந்துமதி, இருக்கை கொள்ளாமல் மேலும் கீழுமாக நடந்துகொண்டு இருந்தாள்.

ராஜாராமனுக்குக்காகத்தான் அவள் காத்திருக்கிறாள்.

ராஜா டெல்லிக்குப் போய் இன்றோடு சரியாக ஐந்து நாட்கள் தாம் ஆகின்றன. ஆனாலும், என்னவோ மாதக் கணக்கில் பிரிந்திருந்த தாபம் இந்துவுக்கு ராஜா வேலை

நிமித்தமாக எந்த ஊருக்குப் போனாலும் சரி, எத்தனை நாட்கள் போனாலும் சரி, இந்த உணர்வுதான் இந்துவை ஆட்கொள்ளும்.

ஒரு நாளோ, இல்லை, ஐந்து நாட்களோ, இரவு முழுதும் உறங்காமல் கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டு ஏதாவது புத்தகத்தைப் படித்துக்கொண்டு இருப்பாள். "ஏன்??' என்று கேட்டால் அவளுக்குப் பதில் சொல்லத் தெரியாது.

"எதற்காக இப்படித் தூங்காமல் உடம்பைக் கெடுத்துக் கொள்கிறாய்?" என்று ராஜா ஒரு தடவை கேட்ட பொழுது, "தெரியவில்லையே! படுக்கையில புரண்டு நீங்கள் இருக்கும் இடத்தைக் 'காலி'யாக உணரும் பொழுது, உடம்பை என்னவோ செய்கிறது ராஜ் நான் என்ன பண்ண?" என்ன பண்ண?" என்று பதில் சொல்லுவாள்.

அந்த வார்த்தைகளில் பொதிந்து கிடக்கும் அன்பின் ஆழத்தைப் புரிந்துகொண்டு ராஜாவும் பரவசப்பட்டுப் போவான்,

இந்துவுக்குத் தெரிந்த எத்தனையோ பெண்கள் 'பிள்ளைப்பேறு; அது இது' என்ற காரணங்களையெல்லாம் சொல்லிக் கொண்டு பெற்றோர் வீட்டில் கணவனை விட்டுப் பிரிந்து மாதக் கணக்கில் இருப்பதைப் பார்க்கும் பொழுது, அவளுக்கு வேடிக்கையாக இருக்கும்; எப்படி இவர்களால் இது முடிகிறது? என்று.

அம்மா வீட்டில் ஏதாவது என்றால்கூட, வீடு நிறைய உறவுக்காரர்கள் குழுமி "இந்து, நீயும் எங்களுடன் இரேன்" என்று எவ்வளவு சொன்னாலும்கூட அவளுக்குத் தன் வீட்டுக்குப் போயே ஆகவேண்டும். ராஜாவும் இரவு பதினொன்று ஆனாலும் மனைவியைக் காத்திருந்து அழைத்துக் கொண்டு போய்விடுவான்.



"அம்மாடி, உங்களால் ஓர் இரவுகூடப்பிரிந்து இருக்க முடியாதா என்ன?" என்று குறும்பாகவும், கேலியாகவும் பிறர் கேட்கும்பொழுது, இந்துவும் ராஜாவும் பதிலே சொல்ல மாட்டார்கள்.

"கல்யாணமாகி இத்தனை ஆண்டு ஆகியும் இது என்ன, புது தம்பதி போல்?" என்று பலர் அவளைக் கேலி செய்திருக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் சின்னதாய்ச் சிரிப்பாள்; அவ்வளவுதான். மிஞ்சிப் போனால் "தம்பதி உறவு நாளாக நாளாகத்தான் இறுகுகிறது, இது உங்களுக்குத் தெரியாதா?" என்று பதிலுக்குக் கேட்பாள் அவள்.

நடந்துகொண்டே வராந்தாவின் வழியாக அங்கிருந்த புத்தகக் கடையை அடைந்தாள் இந்து, மேலாக அடுக்கி வைத்திருந்த புத்தகங்களில் பார்வையைச் செலுத்திய பொழுது 'ஒரு சிறந்த காரியதரிசியாக விளங்குவது எப்படி?' என்ற புத்தகம் அவள் கவனத்தைக் கவர்ந்தது.

கையில் எடுத்த புத்தகத்தைப் பிரிக்கையில் கடந்த சமீப கால நிகழ்ச்சிகளும் அவளுள் விரிந்தன.

அந்த சந்தான கோபாலகிருஷ்ணன் கோவிலுக்குப் போய்த் திரும்பிய நிகழ்ச்சி நடந்து மாசங்கள் ஓடிவிட்டாலும், இப்பொழுதுதான் நடந்தாற்போன்ற தெளிவான உணர்வு உள்ளத்தில்.

அன்று இரவு கணவன் அவளிடம் விரிவாகப் பேசினது, அந்தப் பேச்சைத் தான் உள்ளிப்பாகக் கேட்டது. அதில் விசேஷ அர்த்தம் கண்டது, குழம்பிக் கிடந்த உள்ளம் ஓரளவுக்குத் தெளிந்தது எல்லாம் மீண்டும் ஒரு முறை இந்துவின் நினைவுக்கு வந்து போயின.

மறுநாள் அன்னையைக் கூப்பிட்டு, அவள் "அம்மா இனிமேல் தயவு செய்து எந்த மாதிரி பிரார்த்தனையையும் எனக்காகச் செய்துகொள்ளாதே. அதது வருகிற பொழுது வரட்டும்" என்று சொன்னாள்.

மகளின் கண்டிப்பான வார்த்தைகளைக் கேட்ட பொழுது மங்களத்திற்கு அவள் எவ்வளவு தூரம் தீவிர மாகச் சொல்லுகிறாள் என்பதும் நன்றாகப் புரிந்தது.

பிறகு அடுத்தடுத்து வந்த நாட்களில் இந்து மிகவும் சிரமப்பட்டுத் தன் பழக்க வழக்கங்களை மாற்றிக் கொண்டு விட்டாள்.

ராஜாவே உலகம் என்று அவள் வாழத் தெரிந்து கொண்டாள்.

இப்படியிருக்கையில்தான் ஒருநாள் ராஜா கேட்டான்? ''நீ மேலே சேர்ந்து படிக்கிறாயா, இந்து?'' என்று.

''ஆ...நானா? ஆறு ஆண்டுகழித்தா? என்னாலே முடியாதும்மா...—''பெரிதாகத் தலையை அசைத்துக் கொண்டே சொன்னாள் இந்து.

''நீ முயற்சி செய்தால் முடியாதது ஒன்றுமில்லை என்பது என் எண்ணம். பிறகு உன் விருப்பம், இந்தும்மா.''

அன்று மாலை கோர்ட்டு சம்பந்தப்பட்ட ஒரு கடிதம் கிடைக்காமல், தேடு தேடென்று தேடியபிறகு, குமாஸ் தாக்களைப் 'பொறுப்பில்லாதவர்கள்' என்று ராஜா பட்டம் கொடுத்துக் கொண்டிருந்த வேளையில் இந்து மெள்ள அந்தக் கடிதத்தை எடுத்துக் கொடுத்ததும், ராஜா ''ஓ. என்ன இருந்தாலும் நீ கெட்டிக்காரிதான்'' என்று தட்டிக் கொடுத்த பொழுதுதான் இந்துவுக்கு அந்த எண்ணம் தோன்றியது.

''ராஜா, என்னை மேலே படிக்கச் சொன்னீர்களே— 'செக்ரட்டேரியல் கோர்ஸ்' படித்துவிட்டு, உங்களுக்கே உதவியாக இருக்கட்டுமா?'' என்றாள் மெதுவாக.

ராஜாராமன் பதில் கூறாமல் இருந்ததைக் கண்டு, அவள் மேலும் சொன்னாள். ''முதலில் உங்கள் கடிதப் போக்குவரத்து இவற்றைக் கவனிக்கிறேன். சரிப்பட்டு வந்தால் இன்னும் தீவிரமாக உங்களுக்கு உதவலாமே ராஜ்!... சொல்லுங்கள், முயற்சி செய்யட்டுமா?''



ஒரே மகிழ்ச்சி ராஜாவுக்கு. இந்தமாதிரி ஒரு காரிய தரிசி கிடைக்க வேண்டுமே என்றா, இல்லை, ஒருவரை ஒருவர் இன்னும் அதிகமாகப் புரிந்துகொள்ள வாய்ப்பு கிடைத்ததே என்றா தெரியவில்லை. ஆனால், அன்று இரவு இந்துவிடம் அவன் ''டார்லிங், நீ என் காரியதரிசி யாக மாறினால்—என்னை வேலை செய்ய விடுவாயா? இல்லை. நான் தான் உன்னை வேலை செய்ய விடுவேனா வேலையின் தலை எழுத்து அவ்வளவு தான்' என்று சொன்னபொழுது, அவர்கள் இருவருமே சிரித்தார்கள்.

மூன்று மாசம் பயிற்சி பெற்ற இந்து ஓரளவிற்கு ராஜாவின் வேலைகளைச் செய்யப் பழகிக்கொண்டு விட்டாள். அவளுக்குப் பொறுமையுடன் ராஜாவும் அந்தந்த வேலைகளை எப்படிச் செய்வது என்று கற்றுக் கொடுப்பான். சொல்லிக் கொண்டே வருகையில் ஒரே மூச்சில் பிடித்துக்கொண்டு விடும் மனைவியின் புத்தியைப் பார்த்து அதிசயிப்பான்.

இப்பொழுதெல்லாம் அவன், அவளைக் கூப்பிடுவது என்னவென்று தெரியுமா? ''மை டியர் ப்ளாட்டிங் பேப்பர்'' என்றுதான். மையை அப்படியே சிந்தாமல் கொள்ளாமல் கவர்ந்து கொள்ளும் மை உறிஞ்சு காகிதம் போல், அவளும் எதையும் புரிந்துகொள்வதால் அந்தப் பட்டப் பெயரை அவளுக்குப் பெருமையுடன் சூட்டி விட்டான் ராஜா.

'உய்ங்ங்' என்று ஓசையிட்டுக்கொண்டு டெல்லி 'காரவல்' விமானம் வந்து இறங்க, தன் சிந்தனை கலைந்த வளாக இந்து வராந்தாவுக்குச் சென்றாள்.

ஆ! அதோ ராஜ்!

ஒரு கையில் மடித்துப் போட்ட கொட்டும், மற்றொரு கையில், அதென்ன?—ஒரு கூடையுமாக கம்பீரமாக வந்து கொண்டிருந்தான் ராஜா.

அவனும் அவளைப் பார்த்துவிட்டான்.

"ஹலோ...டார்லிங்...எப்படி இருந்தாய். ஐந்து நாளாய்? என்று கேட்டவண்ணம் அருகில் வந்த கணவனிடம் இந்து கேட்ட முதல் கேள்வி, "அது என்ன கூடை? பிரமாதமாக ரிப்பனெல்லாம் வைத்துக் கட்டி?"

"அவசரத்தைப் பாரேன். உனக்குத்தான் ஒரு பரிசு—ஆனால், காரில்தான் கொடுப்பேன்"

அந்தக் கூடையை மார்போடு அணைத்துக்கொண்டு, அதை அசைக்காமல் அவன் வண்டிக்குச் செல்வதைப் பார்த்த இந்துக்கு அதனுள் என்ன இருக்கும் என்றே புரியவில்லை.

ஆனால் அதை வண்டியில் வைத்துவிட்டு அவன் 'லக்கேஜை' வாங்கிக்கொள்ளச் சென்றபொழுது அதனுள் இருந்து 'ங்கு ங்கு' என்று வந்த சத்தம் அவளுக்கு அது என்ன என்று தெரிய வைத்து விட்டது.

"உனக்காக என் அன்புப் பரிசு" என்று ராஜா அவளிடம் அந்தக் கூடையைத் தரவும் உள்ளே பரபரக்க அவள் அதைத் திறந்தாள்.

அவள் நினைத்தது சரிதான்.

அந்தக் கூடைக்குள், அதில் விரித்திருந்த சின்ன மெத்தை மேல் கருப்புபந்தாய் ஓர் அல்ஷேசன் நாய்க்குட்டி இருந்தது. கூடை திறக்கப்பட்டதால் வெளிச்சம் குபீரென்று உள்ளே பாயவும், அந்த நாற்பது நாள் குட்டி கண்களைப் பிரித்து மெதுவாக 'வள்வள்' என்று குலைத்தது.

குட்டியை எடுத்துத் தன் மார்போடு தழுவிக்கொண்ட இந்துவுக்கு ஒரே மகிழ்ச்சி.



ரொம்ப நாளாக அவளும் ஒரு நல்ல அல்சேஷன் வேண்டும் என்று தேடுகிறாள்—கிடைக்கவில்லை. அவள் மனத்தைப் புரிந்துகொண்டு, டெல்லியிலிருந்து ராஜா இதைக்கொண்டு வந்திருந்தது அவளுக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது.

"தாங்க்யூ டார்லிங்...ரொம்ப ரொம்பத் தாங்க்ஸ்" என்று திரும்பத் திரும்பச் சொல்லியவள்,அந்தக் குட்டியை மார்போடு தழுவிக்கொண்டு முத்தமிட்டாள்.

"ராணா!"

இந்து உரக்கக் குரல் கொடுத்தாள்.

ராணா என்கிற அந்த அல்சேஷன்—இப்பொழுது ஒரு கரடிபோல் வளர்ந்து விட்டதால் 'திமுதிமு' என்று இந்துவின் குரல் கேட்டு ஓடி வந்தது.

"பந்து எங்கேடா?"

சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, வாசற்படிக்கட்டுகளுக்குப் பக்கத்தில் கிடக்கும் பந்தை எடுத்துக்கொண்டு அவளிடம் ஓடி வந்தது.

"குட் பாய்! இப்படித் தா..."

ராணா தருகிறது.

"உட்கார்."

"ஒன்...டூ...த்ரி" என்று சொல்லிவிட்டுப் பந்தைத் தோட்டத்தில் எறிந்தாள் இந்து.

குபீரென்று பாய்ந்து, பந்தைத் துரத்தி ஓடி, அது எங்கே என்று தேடி எடுத்துக்கொண்டு வருகிறது ராணா.

இதைப் பார்த்துக் கொண்டு அருகில் இருந்த ராஜா ராமன் "இதுதான் எப்படி நீ சொன்ன பேச்சைக் கேட்கிறது?" என்று வியந்தான்.

''எது?'' என்றாள் இந்து.

''இதுதான்'' என்றான் ராஜா—ராணாவைச் சுட்டிக் காட்டி.

''என்ன டார்லிங், நான சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும் எவ்வளவு அழகாகப் புரிந்துகொண்டு நடக்கிறான் ராணா. அவனைப் போய் அஃறிணையில் 'அது இது' என்று சொல்லிக்கொண்டு...''

''ஓ! மன்னிக்கணும். தெரியாமல் சொல்லி விட்டேன்...'' என்று கூறிக்கொண்டே ராணாவிற்கு ஒரு கும்பிடும், இந்துவுக்கு ஒரு சலாமும் வைத்தான் ராஜா. பிறகு, ''மூன்று தடவை மன்னிப்புக் கேட்கட்டுமா, டார்லிங்?'' என்று கேட்கவே, பழைய நாட்களை மனத்தில் நினைத்த இந்து பெரிதாகச் சிரித்துவிட்டாள்.

இப்பொழுதெல்லாம் வாழ்க்கையில் ஒரு மாறுதலை உணர்ந்து விட்டாலும் ரகுவிற்கு மறுபடியும் டெல்லிக்கு மாற்றலாகி, அவன் சித்ராவுடனும், ரதியுடனும் ஊரை விட்டுப் போய்விட்டாலும்—இந்து, ராஜா இருவருமே தங்கள் வாழ்க்கையை ஒருவருக்காக ஒருவர் என்று அமைத்துக்கொண்டு வாழத் தொடங்கி விட்டார்கள். ''குழந்தை இல்லையே'' என்ற குறையை ஒரு நன்மையாக மாற்றிக் கொண்டு விட்டார்கள் என்றே சொல்ல வேண்டும்.

கணவனும் மனைவியுமாகச் சேர்ந்தே வேலை பார்ப்பார்கள். நினைத்த பொழுதில் அப்படியே கிளம்பி எங்காவது போய்விட்டு வருவார்கள். அதற்கும் மிஞ்சிப் போனால் பத்து நாட்கள் ஒரு தென்னிந்திய டூரோ, இல்லை, மலைப் பிரதேசத்திற்கோ போய்விட்டு வருவார்கள்.

வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் வரலாம். ஆனால், அவை நம்மை எந்த அளவுக்குப் பாதிக்கின்றன என்பதை நிர்ணயிக்கும் சக்தி நம் கையில்தான் இருக்கிறது'' என்பான் ராஜா அடிக்கடி.



அதைப் பூரணமாக ஆமோதிப்பாள் இந்து.

இப்படி இவர்கள் குடும்பம் நடத்திவரும் இந்த வேளையில்தான் ஒருநாள் மாலை இந்து, கணவனிடம் சொன்னாள் : ''எங்க பெரியப்பா பெண்ணுக்கு கலியாணமானால் திருப்பதி சுவாமிக்குக் கல்யாண உத்சவம் செய்யறேன் என்று வேண்டிக்கொண்டாராம். போன மாசம் கலியாணம் ஆகிவிட்டது. இப்ப குடும்பத்தோட எல்லாருமே திருப்பதிக்குபோகிறார்களாம். அம்மா அப்பாகூட போகிறார்களாம். நம்மையும் வரமுடியுமா என்று பெரியப்பா கேட்கிறார். மேலும் கலியாணப் பெண், மாப்பிள்ளை எல்லோரும் ஏழுமலைகளையும் நடந்தே ஏறப் போகிறார்களாம் வேடிக்கையாக இருக்கும் போல இருக்கே ராஜ். நாமும் போகலாமா?''

# 13

''ஆறு கார்களுக்கும் 'டோல்கேட் டிக்கட்' வாங்கியாச்சா? காரிலே போக வேண்டியவர்கள் எல்லாம் அந்தந்த காரிலே ஏறியாச்சா? மலை ஏற வேண்டிய கும்பல் ஒண்ணா இருங்கோ. டேய் பசங்களா, ஜாக்கிரதை. சின்னப் பெண்கள் கூடவரா கவனம் இருக்கட்டும். மாப்பிள்ளை, ராம்...எல்லாரும் சுருக்க ஏறி வந்துடுங்கோ திருமலையிலே தகவல் அலுவலக வாசல்லே உங்களுக்காக வண்டிகளை நிறுத்தி வைக்கறேன். சரியா? அப்ப நாங்க கிளம்பறோம்.''

அட்டகாசம் செய்துகொண்டிருந்தார் இந்துவின் பெரியப்பா ராமலிங்கம். மொத்தம் ஆறு கார்களில் எல்லோரும் சென்றிருந்தார்கள். கீழ்த் திருப்பதியில் மலைவாசலில் மலை ஏற வேண்டியவர்களைத் தனித்து இறக்கி விட்டுவிட்டு, மற்றவர்களை வண்டியில் ஏற்றி மலைமீது கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டியது அவர் பொறுப்பு.

நண்டும் சிண்டுமாய் சின்னக் குழந்தைகளெல்லாம் 'நாங்களும் மலை ஏறி வறோம்' என்று அடம் செய்கிறதையெல்லாம், "இருபது வயதுக்கு மேற்பட்டவர் தான் ஏறணும். மிச்ச பேர் எல்லாம் வண்டியிலேதான். ம்...மூச்சு விடக்கூடாது" என்று அதட்டி உருட்டிக் கத்திவிட்டு, ஒரு வழியாகக் கிளம்பினவரை வேடிக்கையுடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள் இந்துவும் ராஜாவும்.

அத்தனை வண்டிகளும் கிளம்பி ஒன்றன் பின் ஒன்றாகப் போனதும், நடக்கக் கிளம்பியதும் தங்களைச் சுற்றி ஒரு நோட்டம் விட்டான் ராஜாராமன்.

அவசர அவசரமாக சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொள்ளும் சுந்தர்—இந்துவின் பெரியப்பா பிள்ளை கல்கத்தாவில் வேலையாக இருப்பவன்; இன்னும் மணமாகாதவன்; அருகில் அவன் நண்பன் சேகர், அவனுக்கு சரியான ஜோடி.

இந்தப் பக்கம் பெட்டிக்கடையில் ஒரு சோடா வாங்கிக் குடித்துக்கொண்டிருப்பது இந்துவின் சித்தப்பா மாப்பிள்ளை அருகே அரட்டை அடித்துக்கொண்டிருப்பது அவன் மனைவி மீராவும், அவள் தங்கை பானுவும்.

சற்றுத் தள்ளி முதுகைக் காட்டிக்கொண்டு ஒருவரோடு ஒருவர் இணைந்து நின்று ஏதோ பேசிக் கொண்டிருப்பவர் தாம் புது மாப்பிள்ளை வெங்கிட்டுவும், அவன் மனைவி சுதாவும் கிடைத்த நேரத்தை விடாமல் என்னவோ அவர்கள் 'கிளுகிளு' வென்று பேசிச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். வெங்கிட்டு ராஜாராமனின் பள்ளி நண்பன் ஆக எல்லோருமே ஒருத்தருக்கு ஒருத்தர் மிக வேண்டியவர்கள். சரியான 'ஜமா' என்று சொல்லுவார்களே, அப்படி.

சிகரெட்டை முடித்துவிட்ட சுந்தர் "என்ன, கிளம்பலாமா? தயாரா?" என்று குரல் கொடுத்துவிட்டு அருகில் வந்தான்.



"ஓ...கே கிளம்பலாம்"—எல்லாரும் ஒரு மனதாகச் சொல்லிவிட்டு, கூடவே இரண்டு கூலிக்காரப் பையன்கள் குடிக்கத் தண்ணீர், கோகோகோலா, பாண்டா முதலிய பானங்களைச் சுமந்து கொண்டு வர, பயணத்தைத் தொடங்கினார்கள்.

ஏதேதோ பேச்சு, குபீர்...குபீர் என்ற சிரிப்புக்கள்—ஆரம்பத்தில் சக்கை போடு போட்டன.

"பெண்களில் முதலில் யார் காளி கோபுரத்தைக் கடக்கிறார்களோ அவளுக்கு ஒரு பரிசு" என்று சுந்தர் அறிவித்ததும், பானுவும் சுதாவும் கிடுகிடுவென்று ஏறத் தொடங்கினார்கள்.

பரிசைப்பற்றிக் கவலைப்படாமல், நிதானமாக இடப் பக்கத்திலிருந்து வலப்பக்கத்துக்கும், அங்கிருந்து மறுபடியும் இடப்பக்கத்துக்கும், ஏறிக்கொண்டிருந்தாள் இந்து, உயரே தலை தூக்கி காளி கோபுரத்தை அண்ணாந்து பார்த்த பொழுது 'ஏ, அம்மா! இன்னும் எவ்வளவு தூரம் இருக்கிறது!' என்ற மலைப்புதான் அவளுக்கு ஏற்பட்டது. அப்பொழுது மாலை ஆறு மணி இருள் இன்னும் சேரவில்லை. அவள் ஏறிய மட்டத்திலிருந்து கீழே ஊர் அழகாகத் தெரிந்தது.

ஏற ஏற முட்கள் கெஞ்சின. மார்பு மூச்சுவிட முடியாமல் விம்மித் தணிந்தது.

முன்னால் ஓடிய சுதா, "அம்மாடி என்னால் முடியலே" என்று உரக்கச் சொன்னவண்ணம் படிகளில் உட்கார்ந்து விட்டாள். புது மனைவி சிரமப்படுகிறாளே என்று தவித்த வெங்கிட்டுவைக் காணச் சகியாத ராஜா, "தூக்கிக்கொண்டு வந்துவிடப்பா" என்று சொல்லி சமாதானப்படுத்துவதைக் கேட்ட இந்துவுக்கும் மற்றவர்களுக்கும் சிரிப்பு தாங்கவில்லை.

"தாகம் தாகம்"—யாரோ கூவினார்கள்.

"இப்பொழுது ஒன்றும் கிடையாது. காளி கோபுரத்தில் தான். ம்...ம்..." பெரிய மாப்பிள்ளை விரட்டியதும் மறுபடியும் ஏறத் தொடங்கினார்கள்.

"சிரமமாக இருக்கிறதா, இந்து?" அருகே நெருங்கி வந்து ராஜா கேட்டது இந்துவுக்கு மிகவும் பிடித்திருந்தது.

"அதிகம் பேசாமல் வா. அப்பொழுதுதான் ஏறுவதற்கு சிரமமில்லாமல் இருக்கும்."—மனைவியின் உள்ளங்கையை அழுந்தப் பிடித்து ராஜா சொல்லுவதற்கும் "டேய் ராஜ், உனக்குக் கல்யாணம் ஆகி, ஆறு வருஷம் ஆச்சு இன்னும் என்னடா கொஞ்சல்? இந்தப் பக்கம் வாடா" என்று வெங்கிட்டு சொல்வதற்கும் சரியாக இருந்தது.

மறுபடியும் சிரிப்பு...

ஒரு வழியாகக் காளி கோபுரத்தை அடைந்து சற்று சிரம பரிகாரம் செய்துகொண்டு, மீண்டும் நடக்கத் தொடங்கியதும் தரை சமதரையா இருந்ததால் சுந்தருக்கும், சேகருக்கும் இளவட்டகளுக்கே உரிய 'குஷி' திரும்ப வந்துவிட்டது.

"நான் பாடப் போகிறேன். எல்லோரும் என்னோடு சேர்ந்து பாடணும், சரியா?" என்று அறிவித்துவிட்டுத் தெம்மாங்கு மெட்டில்—

**"திருப்பதிக்குப் போயி வந்தேன் நாராயணா"**

என்று கட்டைக் குரலில் சுந்தர் தொடங்கினான்.

இருள் நன்றாகக் கூடிவிட்டது. அவரவர்கள் ஜோடியுடன் கை கோத்துக் கொண்டார்கள். உற்சாகம் கரை புரண்டோடியது, பிறகு கேட்பானேன்? எல்லோரும் கோரஸ் குரலில் சுந்தர் பாடியதைத் திரும்பப் பாடினார்கள்.

**"திருப்பதிக்குப் போயி வந்தேன் நாராயணா**
**நான் திருமொட்டை அடிச்சுக்கிட்டேன் நாராயணா"**



அவ்வளவுதான். பெண்கள் எல்லோரும் ஒரே குரலில் "டேய்...டேய்" என்று அலறவே சுந்தருக்குத் தன் தவறு புரிந்தது. சமாளித்துக் கொண்டு "இனி ஆண்களுக்கு மட்டுந்தான்" என்று சொல்லிவிட்டு மீண்டும் ஆரம்பித்தவனை "வேண்டாம்...வேண்டாம் சும்மாயிரு" என்று ஒரே மூச்சில் அடக்கிவிட்டார்கள்.

அத்துடன் பாட்டு நின்று, பேச்சு தொடங்கியது.

இப்பொழுது படிகள் கார் செல்லும் ரோடில் வந்து சேர்ந்து கொண்டதால் சற்று வேகமாக எல்லோரும் நடையைப் போட்டார்கள்

"அதுதான் சந்திரகிரி," கூலிக்காரப் பையன் சொன்னான்.

ஒரு மலைக்கும் மற்றொரு மலைக்கும் குறுக்கே யாரோ பாலம் கட்டிவிட்டாற்போல் அமைந்திருந்த அந்த இடத்தில் இடப்பக்கம் பள்ளத்தாக்கில் இருநத சந்திரகிரி என்னும் ஊர் ஜெகஜோதியாய் அந்த இருட்டில் தெரிந்தது.

ஏறிவந்த சிரமத்தில் துவண்டு நின்றிருந்த இந்துவின் அருகில் வந்து, அவள் இடையைச் சுற்றிக் கையைப் போட்டுக் கொண்ட ராஜா, "இதைப்பார்த்தால் உனக்கு என்ன ஞாபகம் வருகிறது இந்து?" என்று மெதுவாகக் கேட்டான்.

தலையைச் சற்றே தூக்கி அழகாகச் சிரித்தாள் இந்து. "கோகர்ஸ்வாக்கில் இருந்து பார்த்தால் தேனீ பள்ளத்தாக்கு தெரியுமே—அப்படி இருக்கிறது இல்லையா?" என்று அவள் பதிலுக்குக் கேட்கவும் அவள் சொல்லுவதை ஆமோதிப்பதுபோல் ராஜா தலையை ஆட்டினான்.

அவரவர்கள் தங்கள் கால்வலியையும் மறந்து நின்று கொண்டிருந்த வேளையில் பொறுத்துப் பொறுத்துப் பார்த்த கூலிக்காரப் பையன். தனக்குத் தெரிந்த அரை

குறைத் தெலுங்கிலும் தமிழிலுமாகச் சொன்னான்: இங்கே கொஞ்சநாள் முன்பு ஒரு திருட்டுக்கூட்டம் ஆட்களை மறித்துத் திருடியது,

''என்னது?''—அரண்டு விட்டார்கள் மீராயும் பானுவும்.

''சுருக்கப் போகலாம் வாருங்களேன். மணி இரவு ஒன்ாதாயிடுத்து'' பயந்த குரலில் அவர்கள் சொன்னது எல்லோரையும் விரைந்து ஏறவைத்தது.

அடுத்தது 'முழங்கால் முடிச்சு' எப்படியோ ஏறினார்கள்

''புஸ் புஸ்' என்று இரை தின்ற பாம்பாய் அவர்கள் திருமலையைச் சென்று அடையும்போது இரவு மணி பதினொண்ணரையை நெருங்கிக் கொண்டிருந்தது.

இந்துவுக்கு உடல் ஓய்ந்து விட்டது. ராஜாவின் கைகளைப் பிடித்துக் கொண்டே ஏறும் அவளை பார்த்தால் பாவமாக இருந்தது.

தகவல் அலுவலக வாசலில் நின்று கொண்டிருந்த கார்களைக் கண்டதும் அவர்களுக்கு 'அம்மாடி' என்றிருந்தது. 'தொப்'பென்று வண்டியில் ஏறி அமர்ந்த எல்லார் மனமும் மகிழ்ச்சியால் நிறைந்து கிடந்தது, எத்தனை இன்பமான மாலை என்ற நினைப்பில்.

அருமையான, சுற்றிலும் வண்ண வண்ணப் பூக்களைக் கொண்டே தோட்டந்தை உடைய திருமலையிலேயே சிறந்ததெனக் கருதப்படும் 'நான்கு 'காட்டேஜ்' களைத் தங்கள் குடும்பத்திற்காக அமர்த்தி இருந்தார் ராமலிங்கம். ஒரு காட்டேஜில் சாப்பாடு; மற்றவற்றில் எல்லாம் படுக்க இடம் என்று பிரித்துவிட்டதால், வந்து இறங்கி அலுப்புத்தீர முகம் கழுவிக்கொண்ட இந்துவைப் பார்த்து ராஜா ''நீ அடுத்த காட்டேஜுக்குப் போய்ச் சூடாக ஏதாவது சாப்பிடு நான் முகத்தைக் கழுவிக் கொண்டு வந்து விடுகிறேன்'' என்றான்.



மணி பதினொண்ணரை ஆகியும் ஒருவரும் தூங்கப் போகவில்லை போலிருக்கிறது.

பெரியவர்கள் எல்லாரும் அடுத்த காட்டேஜில் நாற்காலிகளிலும், திண்ணைகளிலும் அமர்ந்திருந்தார்கள். அவர்களுக்கு நடுவே மஞ்சளுடை உடுத்தி நெற்றியில் சூர்ணம் ஒளிர கப்பீரமாக இரு பட்டாச்சாரியார்கள் நடுநாயகமாக உட்கார்ந்து பேசிக் கொண்டு இருந்ததை இந்து பார்த்து விட்டு, ஏதோ முக்கியமான விஷயம் பேசுகிறார்கள்' என்று உணர்ந்தவளாய்ச் சற்றே ஓரமாய் நின்றாள்.

ராமசாமிதான் முதலில் மகளைப் பார்த்தார். ''ஏம்மா இந்து, எப்படி இருந்தது மலை ஏற்றம்?'' என்று வாஞ்சையோடு அழைத்தவர், மங்களத்தைப் பார்த்ததும் ''சூடாக ஏதாவது குடிக்கக் கொடேன் குழந்தைக்கு'' என்றார்.

பேசிக் கொண்டிருந்த அர்ச்சகர்கள் கவனம் கலைந்தவர்களாய்த் திரும்பி, இந்துவைப் பார்க்கவும், ''இவர்களை நமஸ்கரியம்மா'' என்றார் ராமசாமி.

''யாரு குழந்தை?'' என்றார் ஒரு பட்டாச்சாரியார்

''என் தம்பி மகள்'' என்று பதில் உரைத்தார் ராமலிங்கம்

காலில் விழுந்து வணங்கிய இந்துவை ''தீர்க்க சுமங்கலி பவ'' என்று வாழ்த்திய பெரியவர், ''குழந்தைக்கு எத்தனை குழந்தைகள்?'' என்று மேலும் கேட்டார்.

சட்டென்று ஒரு வேதனை நிரம்பிய அமைதி நிலவியது அங்கே.

''இரண்டு தடவை குறைப் பிரசவமாயிடுத்துச் சுவாமி. அப்புறம் ஒண்ணும் உண்டாகலை. ஏழுமலையானுக்குக் கருணை எப்போ பிறக்கப் போகிறதோ தெரியலை...''என்றார் துயரக் குரலில் ராமலிங்கம்.

ஒரு விநாடி கண்களை மூடியபடி அமர்ந்திருந்தார் அந்தப் பெரியவர்.

பிறகு என்ன நினைத்தாரோ தெரியவில்லை. கணீ ரென்ற குரலில் "நாளைக் காலையில் புஷ்கரணியில் குளித்து விட்டு சுவாமியை அங்கப் பிரதட்சணம் செய்யச் சொல்லுங்கோ... அடுத்த ஆண்டு இதே நேரத்திலே, குழந் தையும் கையுமா இல்லைனா பாருங்கோளேன்" என்று சொல்லவும், அங்கிருந்த அனைவருமே மலைத்துப் போனார்கள்.

பக்கத்து வீடுகளிலிருந்து மலை ஏறி வந்தவர்களும் இதற்குள் இந்த வீட்டிற்கு உணவு உண்பதற்காக வந்து விடவே, அந்த வீடு முழுவதும் உறவு மனிதர்களால் நிறைந்து கிடந்தது.

எல்லோர் காதுகளிலும் பட்டாச்சாரியார் சொன்னது தெளிவாக விழுந்தது

அங்கப் பிரதட்சணமா? இந்துவா?

ஒரு நிமிஷம் கூடச் சென்றிருக்காது. 'அதற்கென்ன அப்படியே கண்டிப்பா செய்யச் சொல்றேன்" என்று பதிலுக்குப் பெரியப்பா சொல்லுவதைக் கேட்ட இந்து, விக்கித்துப் போய் விட்டாள்.

யாருமே பேசவில்லை.

கதையில்தான் படித்திருக்கிறாள்...'ஊசி விழுந்தால் சத்தம் கேட்கும் அமைதி' என்று. அப்பொழுது அப்படிப் பட்ட நிசப்தத்தைத்தான் அங்கே இந்து உணர்ந்தாள்.

"என்ன ராமசாமி, நீ என்ன சொல்கிறாய்?" என்று தம்பியை அவர் கேட்டதும், இதுவரை அண்ணனுக்கு மறுப்பே சொல்லி அறியாத ராமசாமி நிமிர்ந்து இந்துவை நோக்கினார். 'பெரியவர்கள் ஆசைப்படுகிறார்கள் நீ என்னம்மா சொல்லுகிறாய்?' என்பது போல இருந்த அந்தப் பார்வையின் தீவிரத்தைத் தாளாத இந்து அமைதி யாக சரி' என்பது போல் மனமேயில்லாமல் தன் விருப்பத் திற்கு விரோதமாய்த் தலை அசைத்தாள்.

# 14

இந்து வந்து ராஜாவிடம் சமாசாரத்தைச் சொல்லு வதற்கு முன்பாகவே, சுந்தர் சென்று நடந்த அத்தனையை யும் ஒன்றுவிடாமல் ராஜாராமனிடம் சொல்லிவிட்டிருந் தான். இந்து இந்த வீட்டினுள் நுழைந்தபோது "என்ன பைத்தியக்காரத்தனம் ராம் இது? யார் யார் என்ன சொன்னாலும் செய்துவிடுவதா? சே...சே" என்று சுந்தர் கோபமாகச் சொல்லிக்கொண்டு இருந்ததையும் ராஜா ஆடாமல் அசையாமல் அமர்ந்து கேட்டுக்கொண்டு இருந் ததையும் இந்து பார்த்தாள்.

அவள் ஒன்றுமே பேசவில்லை. ராஜாவும் அவளிடம் ஏதும் கேட்கவில்லை.

ஆனால், அன்று இரவு அருகருகே படுத்து உறங்கும் வேளையில் புரண்டு படுத்த இந்துவைத் தன்பக்கம் திருப்பிய ராஜா, "அங்கப் பிரதட்சணம் என்றால் என்ன இந்து?" என்று கேட்டான்.

வாயில் வார்த்தைகளே வராமல் தவித்த இந்து, 'அது...அது சுவாமியின் வெளிப் பிரகாரத்தில் உருண்டு வருவதற்கு பேர்தான் அங்கப் பிரதட்சணம்" என்று திக்கித் திக்கிச் சொல்லிவிட்டு, ராஜாவின் பார்வையை— அந்த இருட்டிலும் கூர்மையாய்த் தெரிந்த பார்வையை— தாங்க சக்தியற்றவளாய், "நான் என்ன பண்ணுவேன் ராஜ்... பெரியவர்கள் சொல்லும்போது?" என்று பரிதாப மாகக் கேட்டபொழுது, பதில் கூறாமல் திரும்பிப் படுத்து விட்டான் ராஜாராமன்.

விடியற்காலை காற்றில் மிதந்து வந்த சுப்ரபாதத் தைக் கேட்டுக் கண்விழித்த இந்துவுக்கு உள்ளம் படபடத் தது.

"காலை பூஜைக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன்; நம்ப குடும்பம் மொத்தத்திற்கும்...உம்—உம். கிளம்புங்கள்"

என்று எல்லோரையும் ராமலிங்கம் எழுப்பிக்கொண்டிருந்த வேளையில், மகள் இருந்த அறைக்கு வந்த மங்களம், ''வருகிறயா இந்து? கூட்டம் வருவதற்குள் நாம் பிரார்த்தனையை முடித்து விடலாம்'' என்று மெதுவாகக் கேட்டாள்.

படுக்கையில் படுத்துக் கிடந்த கணவனிடம் குனிந்து, இந்து''நான் போய்விட்டு வரட்டுமா?'' என்ற பொழுது, ''நான் வரவேண்டுமா? நான் வந்தால் உனக்குத் தைரியமாக இருக்குமா?'' என்று ராஜாராமன் கேட்கவே அந்தக் குரலில் அவனுக்குத் தன்னிடம் இருந்த பாசத்தை, அன்பை உணர்ந்த இந்து, ''வேண்டாம், அம்மா வருகிறார்களே' என்று சொல்லிவிட்டுக் கிளம்பினாள்.

அந்தக் காலை வேளையில் இந்து புஷ்கரணியில் குளிக்கச் சென்ற பொழுது நன்றாக விடிந்திருந்தும் 'சிலுசிலு'வென்று ஊத காற்று வீசி இந்துவினுள் ஊடுருவிச் சென்றது.

அம்மா படித்துறையில் நிற்க, மூக்கைப் பிடித்துக் கொண்டு தண்ணீரில் மூழ்கி எழுந்த இந்துவுக்கு, அந்தத் தண்ணீரின் குளிர்ச்சியோ, இல்லை, காற்றின் வேகமோ, இல்லை, மனத்தின் பாரமோ தெரியவில்லை. உடல் நடுங்கியது. உதடுகள் துடிக்க, கை கால்கள் சில்லிட்டுப் போகக் குளித்தவளைப் பார்த்தவாறே ''நானும் வருகிறேன். உனக்குத் துணையாக'' என்று சொல்லி வந்திருந்த சுதாவுக்கு கோபம் தாங்கவில்லை.

''நானாக இருந்தால் கண்டிப்பாக முடியாது என்று சொல்லிருப்பேன். ஆயிரம் பேர்கள் நடந்த இடத்தில் நாம் உருளுவதா? நன்றாயிருக்கிறது இந்து. எங்கப்பா உன்னைக் கேட்காமல் 'சரி' என்று சொன்னது ரொம்பத் தப்பு.''

''சுதா என்னைக் கொஞ்சம் சும்மா விடேன்'' என்று கூறி அவளை அடக்கினாலும், இந்துவுக்கு அவள் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும் தன் முழு மனசும் ஆமோதிப்பது நன்றாகப் புரிந்தது.



ஈர ஆடை உடலைக் கவ்வ, படியேறி மேலே வந்து கோவிலுக்குள் நுழைந்தாள் இந்து. அந்தப் பாசிப்பச்சைப் பட்டுப் புடவை தன் உடலோடு ஒட்டிக்கொண்டு தன் அழகை எத்தனை தூரம் வெளியில் அள்ளிக் கொட்டி, சுற்றி இருப்போரின் கவனத்தை ஈர்க்கிறது என்பதை உணர்ந்த போது, இந்துவின் நிமிர்ந்த உடல் சற்றே அவமானத்தால் கூனியது.

இன்று ஏன் இந்தக் கூட்டம்?

தர்ம தரிசனத்திற்காக நீண்டு கிடந்த மனிதர்கள் வரிசை இரண்டு பிராகாரங்களையும் தாண்டி, கோயில் வெளிச் சுவரைச் சுற்றிக்கொண்டு நின்றது.

ஈரப் புடவை கால்களைத் தடுக்க, தலையைத் தரையை நோக்கிக் குனிந்துகொண்டு இந்து வரவும், இரண்டாவது நுழைவாசலில் இருந்த சிப்பந்தி அவர்களைத் தடுத்தான்.

மங்களம் அவனிடம் ''அங்கப் பிரதட்சணம் செய்யணும் அப்பா'' என்று சொன்னதும், இந்துவை ஒரு தடவை ஏறிட்டுப் பார்த்துவிட்டு ''போங்க போங்க'' என்று உள்ளே போக வழி விட்டான்.

வலப்பக்கம் சுதா நிற்க, தன் மனசின் ஆர்ப்பாட்டத்தைத்தாங்க முடியாத இந்து, அம்மாவின் கையைப் பற்றிக் கொண்டு சுற்றிலும் நூற்றுக்கணக்கானவர்கள் இருக்கிறார்களே! எத்தனை ஆண்கள் இருக்கிறார்கள்—என்ற வெட்க உணர்வில் ''அம்மா'' என்றாள் குரல் கரகரக்க.

விருப்பம் இல்லாமல்தான் இந்து இருக்கிறாள் என்பதை நன்றாகத் தெரிந்து கொண்டு விட்டாலும், பிரார்த்தனை செய்யாவிட்டால், தெய்வக் குற்றமாகி விடுமே என்ற பயத்தில், ''சட்டென்று படுத்துக்கோ இந்து. பிறகு

சரியாகிவிடும். பாதியில் எழுந்திருக்க கூடாது—ஒரே மூச்சில் முடித்துவிடலாம்'' என்று ஊக்கினாள் மங்களம்.

பெற்றவர்களுக்காகச் செய்கிறேன் என்று தன்னை உலுப்பிக்கொண்ட இந்து,அம்மா சொன்னபடியேஅங்கே படுத்து இரு கைகளையும் தலைக்கு மேலே கூப்பிக் கொண்டு மெல்ல உருண்டாள்.

பத்து முறை உருள்வதற்குள் ஏதோ கயிறு குறுக்கே வந்தது. அதைத் தாண்டிச் சென்று உருளும்போது கைகளும் முகமும் கயிற்றில் உராய்ந்து அந்தந்த இடங்களில் எரிச்சல் கண்டன

ஈரத்தரை கசகசவென்றிருந்தது. பனிக் கட்டியாகக் குத்திய அதன் குளிர்ச்சி அவள் உடலை மரக்கட்டையாகச் செய்தது.

சுற்றிலும் உள்ள மனிதர்களைக் காணப் பிடிக்காதவளாய்க் கண்களை மூடிக்கொண்டு உருண்டாள் இந்து.

''இந்து கொஞ்சம் கீழே இறங்கு. ரொம்பச் சுவரோரமாய்ப் போகிறாய்'' அம்மாவின் குரல் கேட்டு ஓர் அடி கீழே இறங்கினாள். இறங்கும் வேகத்தில் முடிந்திருந்த தலை முடி அவிழ்ந்து, புடவை முழங்காலுக்கு மேல் சிக்கிக் கொள்வதை உணர்ந்து, ''அம்மா, கொஞ்சம் தலையை முடி,புடவையை இழுத்துவிடு'' என்று சொன்னபொழுது, இந்துவுக்கே அது தன் குரல்தானா என்று இருந்தது.

குப்புறப்படுத்து ஒரு நிமிஷம் தன்னை ஆசுவாசப் படுத்திக்கொண்டவள், கண்களைத் திறந்துதான் இன்னும் கால்வாசியைக் கூட முடிக்கவில்லை என்பதைத் தெரிந்து கொண்டு சுருக்க முடிக்க வேண்டுமே என்ற எண்ணத்தில் மீண்டும் உருண்டாள்.

''வழி விடுங்க...வழி... அங்கப்பிரதட்சணம் வருது...'' ...யாரோ அவளுக்குக் கட்டியம் கூறுகிறார்கள்.



''எதுக்காகங்க?'' என்று மங்களத்தை ஒரு மாது கேட்கிறாள்.

''ஏதோ பிரார்த்தனை''—மங்களம் மழுப்புகிறாள்.

''என்ன பிரார்த்தனை? உடம்பு சுகமில்லையா?''— அந்த மாது விடாமல் கேட்கவே, கடவுள் சந்நிதானத்தில் பொய் சொல்லப் பிடிக்காமல் ''பிள்ளைக்காக'' என்கிறாள் மங்களம்.

உருண்டுகொண்டே போகும் இந்துவின் காதுகளில் இந்தப் பேச்சு விழுகிறது. கண்களைத் திறந்து பார்க்கிறாள். மேலே நிர்மலமான ஆகாயம்; கீழே அழுக்குத் தரை; நிர்மலமும் அழுக்கும் அவள் உருளும் வேகத்தில் ஒன்றை ஒன்று துரத்திப் பிடித்து விளையாடுகின்றன.

''ஏம்மா, இப்படி உருண்டா குழந்தை பிறக்குமாம்மா?''—ஆறு வயசு சிறுவன் ஒருவன் மங்களத்திடம் பேச்சுக் கொடுத்த அம்மாளிடம் கேட்கிறான்.

மடேர் என்று யாரோ ஓங்கித் தன் தலையில் அடித்தாற் போன்ற அதிர்ச்சி இந்துவுக்கு.

**''உருண்டா குழந்தை பிறக்குமா?''**

**''உருண்டா குழந்தை பிறக்குமா?''**

ஆகாயமும், தான் உருளும் பூமியும், சுற்றியிருக்கும் ஒவ்வொரு மனிதரும் அந்தக் கேள்வியைக் கேட்பது போன்ற பிரமை.

'தம் தம்' என்று காதுக்குள் இதயம் படபடக்கிறது.

''தெய்வமே...''

நெஞ்சமெல்லாம் கதறுகிறது இந்துவுக்கு.

'தெய்வத்திடம் ஆழ்ந்த நம்பிக்கை இருக்க வேண்டும் இந்து. ஆனால் அதற்கு இந்த மாதிரி வழிபாடெல்லாம் தேவையா? நாம் வணங்கும் தெய்வம் இந்த வழிபாடு தான் தேவை என்று எங்கே சொல்லுகிறது?'

அன்றைக்கு கிருஷ்ணன் சிலையை மடியில் வைத்த பிறகு அழுதுகொண்டு கணவனிடம் சென்றபோது, அவன் கேட்டது இந்துவுக்கு இப்பொழுதும் கேட்கிறது.

மறுபடியும் அவள் உள்ளம் ''கடவுளே!' என்று அலறுகிறது.

''விருப்பம் இல்லாமல் எந்தக் காரியத்தையும் செய்யக் கூடாது இந்து. நீ சொல்லுவாயே அந்த நம்பிக்கை—சிரத்தை அது இல்லாமல் ஒரு காரியமும் செய்யக்கூடாது இந்து'' என்று அவள் மனச்சாட்சியே விசுவரூபம் எடுத்து அவளைத் துளைக்கிறது.

இந்து உருண்டு கொண்டே இருக்கிறாள்.

ஆகாயமும், பிசுக்கென்று ஒட்டும் தரையும் அவளுடன் சேர்ந்தே உருளுகின்றன.

'எங்களுக்கு நிகரில்லை என்று ஆனந்தமாக திருமணமான புதிதில் வாழத் தொடங்கினோமே, அந்த எண்ணத்தில் ஒரு சின்னக் கறுப்புப் புள்ளியை வைத்துவிட்டு அதைப் பெரிதாக வளரச் செய்தது யார்?'

எங்கோ, யாரே ஆஜானுபாகுவாய் நின்றுகொண்டு அவளைப் பார்த்துச் சிரிப்பது போன்ற பிரமை.

நெற்றிப் பொட்டு துடிக்கிறது. உடம்பு வலிக்கிறது. நெஞ்சம் உடைந்து ஆயிரமாயிரம் சிதறல்களாகச் சிதறியே போகிறது.

தாரை தாரையாக இந்துவின் கண்களில் இருந்து கண்ணீர் பெருகுகிறது.

சுற்றி நின்று, அவளை வேடிக்கை பார்க்கும் மனிதர்களின் பரிதாபமும், பச்சாதாபமும். உள்ளே கர்ப்பகிருகத்தில் மட்டும் இல்லாமல், இந்த உலகத்தையே வியாபித்துக் கொண்டிருக்கும் தெய்வத்தின் சோதனையும் இந்துவுக்கு புரிந்து, அவள் உடலிலுள்ள ரத்தம் கண்களின் வழியாகி அருவியாய்க் கொட்டுகிறது.



உடல் விம்ம விம்ம, அழுதுகொண்டே தலைமுடி பிரிந்து முகத்தை மறைக்க, புடவை முழங்கால் வரை மடிந்து அந்தக்கால்களின் அழகை எடுத்துக் காட்ட, உருளும் மகளைக் கண்டு பதைபதைத்த மங்களம், ''ஆயிற்றம்மா, இன்னும் பத்தே அடிகள்தான்'' என்று அவளைத் தேற்ற முயல்கிறாள்.

அங்கப் பிரதட்சணத்தை முடித்துவிட்டாள் இந்து. தள்ளாடிக்கொண்டு உடல் கொடியாய்த் துவள, அம்மாவும், சுதாவும் கொடுக்கும் பலத்தில் எழுந்து நின்ற இந்துவுக்கு தன்னையே பிடிக்கவில்லை.

அருகில் இருந்த கல்யாண மண்டபத்தில் சென்று உடையை மாற்றிக்கொண்டு வந்தவளால் நிற்கக்கூட முடியவில்லை.

இதற்குள் உறவுக்காரர்கள் அனைவரும் சுவாமி தரிசனத்திற்கு தயாராக வந்துவிடவே, கம்பிக் கதவுகளைத் திறந்து அந்தக் குடும்பத்தை மட்டும் கோவில் நிர்வாகிகள் உள்ளே மூலவரைக் காண விட்டார்கள். மண்டபத்தில் இருந்து தங்களை நோக்கி வரும் இந்துவையே பார்த்துக்கொண்டிருந்த ராஜாராமனுக்குச் சட்டென்று உலகமே கசந்து போயிற்று.

அப்பொழுது அருகில் நின்றுகொண்டிருந்த இரு இளவட்டங்கள், ராஜா தான் இந்துவின் கணவன் என்பதை அறியாததாலும், 'அங்கப் பிரதட்சணம் செய்தவளுக்கு ஆங்கிலம் தெரியாமல் இருந்திருக்கலாம்' என்ற நினைப்பாலும், இந்துவையே பார்த்துக்கொண்டு இருந்துவிட்டு ஆங்கிலத்தில் ஒருவனிடம் ''என்ன அழகு, என்ன அழகு. சினிமாக்காரி பிச்சை வாங்கணும்; இன்னும் கொஞ்சம் உருண்டிருந்தால் அந்தத் தந்தக் கால்களையாவது பார்த்துக் கொண்டு இருந்திருக்கலாம்'' என்று சொல்லிவிட்டுச் சிரிக்கிறார்கள்.

அது இந்துவுக்குக் கேட்டது; ராஜாவுக்கும் கேட்டது; ஏன் அருகில் நின்றுகொண்டிருந்த உறவுக்காரர்கள் சிலருக்கும் கேட்டது.

அவ்வளவுதான் —

துரும்பும் ஒட்டகத்தின் முதுகெலும்பை உடைக்கும் என்பார்கள். இதுவோ துரும்பு அல்ல, இரும்புப் பாளங்கள். பிறகு கேட்பானேன்?

''ராஜா'' என்று தன்னை மறந்து, தன் சூழ்நிலையையும் மறந்து கதறியவாறே கணவனின் மார்பில் சாய்ந்தாள் இந்துமதி

என்ன இருந்தாலும் ராஜாராமன் ஓர் அப்பட்டமான ஆண். அதுவும் இந்துவை உயிராகக் காதலிக்கும் ஒரு கணவன் அவனாலும் இதற்குமேல் பொறுத்துக் கொள்ள இயலவில்லை.

எரிமலையாய் வெடித்தான் அவன். சுற்றி மரமாய் நிற்கும் பெரியவர்களையெல்லாம் பார்த்துச் சீறினான் அவன். அவன் நெஞ்சில் இத்தனை ஆண்டுகளாய் அடைந்து கிடந்தது இன்று வெளிப்பட்டது. எப்படி? எல்லோரையும் பொசுக்கும்படி.

''பார்த்தீர்களா? அனைவரும் பார்த்தீர்களா? உங்கள் மூடநம்பிக்கைகள் என் மனைவியைப் பிறர் எந்த அளவுக்குக் கீழ்த்தரமாக எண்ண வைத்துவிட்டன என்று பார்த்தீர்களா? அவள் ஆயிரம் இருந்தாலும் பெண் ஐயா, பெண், அவளை நாளுக்குநாள் துன்புறுத்தாமல் நிம்மதியாக இருக்கவிடுங்கள். உங்களையெல்லாம் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன்! என்னையும், என் மனைவியையும் இனியாவது அமைதியாகஇருக்கவிடுங்கள் .எங்களுக்கு ஒரு குழந்தை உங்கள் பச்சாதாபத்தாலும், பரிதாபத்திலும், ஏன் அந்தக் கடவுளின் பச்சாதாபத்திலும்தான் பிறக்க வேண்டுமென்றால், எங்களுக்குக் குழந்தையே



வேண்டாம். நான்,சொல்லுவது புரிகிறதா? எங்களுக்குக் குழந்தையே வேண்டாம்.''

கணவனின் தோள்களில் துவண்டு சாய்ந்து, அவன் முழக்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்த இந்துவுக்கு அவன் பேசப் பேசக் கண்கள் இருண்டன. தலையைச் சுற்றியது. ''ராஜா—ராஜ்'' என்று அவனைத் தடுக்க எண்ணி முன்னே சாய்ந்தவள் அப்படியே எல்லோர் கண் முன்னாலும், அந்த ஆண்டவன் சந்நிதியில் மயங்கித் தரையோடு தரையாய் வேரறுந்த மரமாய்ச் சாய்ந்தாள்.

''ஐயோ...'' என்று மற்றவர்கள் பதறிக் குனிந்த வேளையில், மூடிக் கிடந்த ஏழுமலையானின் கதவுகள் திறந்தன. ''டணடண...'' என்ற ஜங்காரத் த்வனியோடு ஆலய மணி முழங்கியது.

''சர்வமும் நானே'' என்று சொல்லாமல் சொல்லி அங்கே குடி கொண்டிருந்த என் ஐயன், இந்துவைப் பார்த்துப் புன்னகைத்தான். எப்படி? அழகாய் மிக மிக அழகாய் சற்றே உதடுகள் விரிய புன்னகைத்தான்.

# 15

''இன்னும் உங்கள் வேலை முடியவில்லையா டார்லிங்?'

இந்துதான் குரல் கொடுத்தாள்.

ஏ.ஸி. செய்யப்பட்ட அந்த அறையின் கால்வாசி பகுதியை இரண்டு கட்டில்கள் அடைத்துக்கொண்டிருந்தன கட்டில்களுக்கு எதிராக ஒரு சின்னச்சிவப்பு ரத்தினக் கம்பளம். அதற்கு இடப்புறம் ஓர் அழகிய மேஜை, நாற்காலி, மேஜைக்கு எந்த நேரமும் வெளிச்சம் கொடுக்க

மேலே விட்டத்திலிருந்து பளபளவென்று சங்கிலியில் தொங்கிக்கொண்டிருக்கும் கூண்டு விளக்கு அந்த அறையே இந்துவின் கை வண்ணத்தினால் சிறந்து விளங்கியது.

நாற்காலியில் அமர்ந்து ஏதோ மும்முரமாக மறுநாளைய வழக்கு சம்பந்தப்பட்ட குறிப்புகளைத் தயார் செய்துகொண்டிருந்த ராஜாராமனுக்கு, இந்து கேட்டது காதில் விழவே, கவனம் கலைய, மனைவியை நோக்கினான்.

மல்லாந்து படுத்தால் மூச்சு முட்டுவதாலும், பின் இடுப்பு வலி எடுக்கிறதாலும் இப்போதெல்லாம் அதிகமாக ஒருக்களித்துப் படுக்க ஆரம்பித்திருக்கும் இந்து, இந்த சமயத்திலும் கணவனை நோக்கி ஒரு பக்கமாகத் திரும்பிப் படுத்துக்கொண்டு, உறக்கம் வராமல் தவித்த கண்களை மலர மலரக் கொட்டிக்கொண்டு மெல்லச் சிரித்தாள்.

ராஜா அருகில் வந்து படுக்கும் வரை அவளும் உறங்க மாட்டாள்.

''நான் வெளியே போய் வேலை பார்க்கிறேன். நீ தூங்கு இந்தா ' என்று எத்தனையோ தடவைகள் ராஜா சொன்ன பொழுது, ''ம்ஹூம் வேண்டாம்...ராஜ்...இந்த வெளிச்சம் என் கண்களை உறுத்தவில்லை. நீங்கள் உங்கள் வேலையைப் பாருங்கள்''என்று மறுப்புக்கூறி, அவனை அறையிலேயே இருக்கச் செய்துவிடுவாள்

ஆனால், மணி பதினொன்று ஆகவேண்டியதுதான், ''வேலை ஆயிற்றா?'' என்று தொணதொணத்து அவனை அலுவலக வேலைகளை மூடி வைக்கச் செய்தும் விடுவாள்.

இன்றும் அப்படித்தான்.

தலையைத் திருப்பி, தன்னைப் பார்த்துப் பூவாய்ச் சிரிக்கும் மனைவியைக் கண்ட ராஜா வேலை போதும் என்று தீர்மானித்துவிட்டு, மெல்ல எழுந்து அவள் அருகில் வந்தான். கட்டிலில் இந்துவின் பக்கத்தில் அமர்ந்து கொண்டு அவள் தலையைத் தூக்கித் தன் மடி மீது இருத்திக் கொண்டான்.



பிறகு, ஆசையுடன் அவள் தலையை வருடியவாறே ''இந்தா நீ என்ன நாளுக்கு நாள் அழகாகிக்கொண்டே வருகிறாய்? ம்'' என்று கிசுகிசுக்கும் குரலில் கேட்டான்.

சட்டென்று மலர்ந்தது இந்துவின் முகம்.

''ஆ! நான் எதைப்பற்றி பேசணும் என்று நினைக்கிறேனோ அதைப்பற்றியே நீங்களும்பேசுகிறீர்களே ராஜ்...—வியந்தாள் அவள்.

''எதைப்பற்றிப் பேச வேண்டும் என்று நினைத்தாய்?''

''நீங்கள் கேலி பண்ணாமல் இருந்தால் சொல்லுகிறேன். சரியா?''

''அதெப்படி? கேலி பண்ணக்கூடிய விஷயமாக இருந்தால் கண்டிப்பாகப் பண்ணுவேன்.''

''அப்போ சொல்ல மாட்டேன்...''

''ஏய், ஏய் போக்கிரி, நான் கேலி பண்ணவில்லை...நீ சொல்லு...''

''வந்து...வந்து...''

' வந்து...?''

''இன்னிக்கு பெரிய பாட்டி வீட்டுக்கு வந்திருந்தார். அவர் சொன்னார் எனக்குப் பெண்தான் பிறக்கும் என்று...''—முகம் குங்குமப் பூவாய்ச் சிவந்து போயிற்று இந்துவுக்கு.

''அடி சக்கை பெரிய பாட்டி என் கட்சியா...பலே...''—மகிழ்ச்சி தாங்கவில்லை ராஜாவுக்கு.

''ஆமாம் அவருக்கு ஜோசியம், கீஸியம் தெரியுமா என்ன?'' என்றான் ஆச்சரியத்துடன்.

''அது ஒண்ணும் இல்லை. எனக்கு அழகு கூடிக் கொண்டு இருக்காம். அதனால்தான் பெண் பிறக்கும் என்றார்'' சொல்லி முடிப்பதற்குள் திணறிவிட்டாள் இந்து.

''என் ஆசைப்படி பெண்தானா?'' என்று உரக்கச் சொன்ன ராஜா, மேலும், ''உன் அழகு கூடி இருப்பது அவர்களுக்குக்கூடத் தெரிந்து போயிற்றா? என்ன இருந்தாலும் என் இந்து அழகுதான்'' என்று உற்சாகமாகக் கூறிக் கொண்டே, மடியில் கிடந்த அவளை இரு கைகளாலும் அள்ளிக் கொண்டு மார்போடு, மலர்ச்செண்டை அணைத்துக் கொள்வது போல அணைத்துக்கொண்டான்.

''ம். ம்...இந்தக் கொஞ்சல் எல்லாம் இன்னும் ஒரு வாரத்துக்கோ, பத்து நாளைக்கோதான். ஞாபகம் இருக்கட்டும்...என்றாள் இந்து, ஏதோ நினைவுக்கு வந்தவளாக.

''ஏனாம்?''

''ஏனோ...''

''ஏனாம்?''—விடவில்லை ராஜ்.

''ஏனென்றால் இந்தக் கட்டிலில் நமக்குப் பக்கத்தில் இன்னோர் உயிர் குட்டியூண்டாகப் படுத்துக்கொண்டிருக்குமே, அதனால்தான்...''

''அதென்ன 'குட்டியூண்டு' என்று இந்துவையே வலிய வம்புக்கு இழுத்தான் ராஜா.

''என்ன ராஜ்... 'குட்டியூண்டு' என்றால் குட்டியிலும் குட்டி, அதாவது சின்னக் குழந்தை...'' பேசிக்கொண்டே வந்த இந்து, அந்த இனிமையான நினைவிலே அமிழ்ந்து போனதை ராஜா நன்றாகப் புரிந்துகொண்டான்! அவளுடைய நிம்மதியான நினைவுகளைக் கலைக்க மனம் இல்லாமல் தன்னையும் அவற்றில் ஒன்றிக்கொண்டான்.

ஓ! காலம்தான் எவ்வளவு வேகமாகப் போகிறது!

அன்று, கிட்டத்தட்ட ஒன்பது மாதங்களுக்கு முன்னால்,

திருப்பதியில் இந்து மயங்கி விழுந்தாளே, அந்த நாள் இதோ இப்பொழுதுதான் நடந்ததாக உணர்வு ராஜாவுக்கு



இந்து மயங்கி விழவும் அலாக்காக அவளைத் தூக்கிக் கொண்டவன் மயக்கம் தெளிவித்து மெல்ல விடுதிக்கு அழைத்து வந்தான். யார் என்ன சொல்லியும் கேளாமல் ''மன்னியுங்கள், இந்துவுக்கு உடல்நலம் சரியாக இல்லை. நான் உடனே அவளை டாக்டரிடம் காண்பிக்கவேண்டும், நாங்கள் ஊர் திரும்புகிறோம்' என்று சொல்லி விட்டு, அன்று மாலையே சென்னைக்குத் திரும்பிவிட்டான்.

முதல்நாள் மலைகள் ஏறியதோ இல்லை மறுநாள் புஷ்கரணியில் குளித்துவிட்டு உள்ளம் உடைய, உடல் நோக அங்கப்பிரதட்சணம் செய்ததோ தெரியவில்லை. ஊர் வந்து சேருவதற்குள் இந்துவின் உடல் அனலாகக் கொதிக்கத் தொடங்கிவிட்டது.

நான்கு நாட்கள் விடாமல் நல்ல ஜுரம். இந்து பிடுங்கிப் போட்ட கொடியாய்த் துவண்டுதான் போய்விட்டாள்.

ஜுரம் நின்று பத்து நாட்கள் ஆனபிறகும் அவளால் எழுந்திருக்கக்கூட முடியாமல் தலை சுற்றல், வாந்தி, என்ன நினைத்தாரோ தெரியவில்லை. அவர்கள் குடும்ப டாக்டர், பன்னிரண்டாம் நாள் பரிசோதித்துவிட்டு, மறுநாள் லேடி டாக்டரையும் அழைத்துப் பேசியவர், ''பாராட்டுக்கள்'' ராஜா. உங்களுக்கு இந்து ஒரு மகனைத் தரப்போகிறாள்'' என்று சொன்னபொழுது பிரமித்துப் போனான் ராஜாராமன்.

சற்றும் எதிர்பார்க்காததாலும், ஆசைகளே மனதை விட்டு ஓடிவிட்டதாலும் விஷயம் இந்துவுக்குத் தெரிந்தபோது, அவள் ராஜாவைக் கட்டிக் கொண்டு விசித்து விசித்து அழுதாள்.

அதன்பிறகு ஒரே அமர்க்களம்தான்.

முதல் நான்கு மாசங்களுக்கு இந்து தரையில் கால் ஊனக்கூடாது என்று கண்டிப்பாக டாக்டர்கள் உத்தரவு போட்டுவிட்டார்கள்.

எப்படியோ நான்கு மாசங்கள் முழுக்க நல்லபடியாகப் போய், ஐந்தாம் மாசம் நடந்து கொண்டிருந்த பொழுது தான் இந்துவுக்கே தான் உண்மையாகவே கர்ப்பம் தரித்திருக்கிறோம் என்ற எண்ணம் முதன் முதலில் வந்தது.

இந்துவைக் கண்ணும் கருத்துமாக ராஜா பார்த்துக் கொண்டானே தவிர, தப்பித் தவறிக்கூட அவளிடம் அந்தவளரும் சிசுவைப் பற்றிப்பேச மாட்டான். முன்னமே இரண்டு தடவைகள் கட்டப்பட்ட மனக்கோட்டைகள் இடிக்கப்பட்டு அதன் வேதனையை உணர்ந்தவன் அல்லவா?

இந்துவும் அப்படித்தான். தான் கர்ப்பமாக இருப்பதை அறவே மறக்க வேண்டும் என்று உளமார நினைத்தாள். அம்மாவோ, அப்பாவோ இல்லை, வேறு உறவினர்களோ தப்பித் தவறிக் குழந்தைப் பேச்சை எடுத்தாலும்—''வேண்டாம்—எனக்கு வீண் நம்பிக்கையைக் கொடுக்காதீர்கள். பிறகு இல்லை என்று போனால் அந்த ஏமாற்றத்தைத் தாங்கமுடியாது'' என்று கண்ணில் நீர் சோரக் கெஞ்சிப் பேச்சை மாற்றிவிடுவாள்.

ஆனால், ஐந்து மாசங்கள் முடிந்து ஆறாம் மாசம் பிறந்ததும் 'சீமந்த வளைகாப்புக்கு'ப் பெற்றோர் நாள் பார்க்கும்போது, அவளை அறியாமல் மனமெல்லாம் கிளுகிளுத்துப் போயிற்று.

வயிற்றில் அவள் மகன் மெல்ல மெல்ல உருண்டு கொண்டு வளைய வரும்போது அந்தக் கிளர்ச்சி வயிற்றில் தொடங்கி, மேனி எல்லாம் பரவி, காதுக்குள்—நெஞ்சுக்குள்—'அம்மா, அம்மா' என்று யாரோ அழைக்கிறாற் போலவே பிரமை தட்டிற்று.

ராஜாவிடம் எத்தனையோ கோடானு கோடி சங்கதிகளைச் சொல்ல வேண்டும் என்று துடிப்பாள்; ஆனால் தைரியம் வராது.

ஒருநாள் இரவின் ஓட்டத்தில் திரும்பிப் படுத்த இந்து 'ஆ' என்று மெல்லிய குரலில் வாய்விட்டுச் சொன்னதைக் கேட்டுப் பக்கத்தில் அரைகுறைத் தூக்கத்திலிருந்த ராஜா எழுந்து ''என்ன இந்து...என்னம்மா'' என்று பதைபதைத்த போது, தன்னுள் வளரும் உயிரின் ஓட்டத்தை அவனிடம் சொல்லியே தீரவேண்டும் என்று உறுதி பூண்டாள் இந்து.



அவன் மார்போடு இணைந்தவள் ''உங்கள் மகன் உதைக்கிறான் ராஜா'' என்று மெல்லிய குரலில் ராஜாவுக்குப் புரியும்படிச் சொன்னாள்.

''எ...என் மகன்...''— புல்லரித்தது ராஜாவுக்கு.

இந்த ஆறு மாதங்களில் முதன் முறையாக இந்து வாய்விட்டு அவனிடம் அவர்கள் குழந்தையைப் பற்றிப் பேசுகிறாள்.

அப்புறம் இருவரும் 'அவனை'ப்பற்றியே அன்று முழுவதும் மாறி மாறிப் பேசிக் கொண்டே இருந்தார்கள்.

நாட்கள் செல்லச் செல்ல டாக்டர்கள் 'இனி பயமே இல்லை' என்று ஆணித்தரமாகச் சொல்லவும், வயிற்றில் வளரும் சிசுவைப் போலவே மனத்திலும் நம்பிக்கையை மகிழ்ச்சியையும் வளர்த்தார்கள் இந்துவும் ராஜாவும்.

''இங்கே வாருங்களேன்...'' என்று படபடக்க அழைப்பாள் இந்து.

என்னவோ, ஏதோ என்று பதறி வரும் கணவனின் கையைப் பிடித்து இழுத்து தன் வயிற்றில் வைத்து, ''இதைப் பாருங்களேன் முட்டிக் கொண்டு வந்து நிற்கிறதே இது உங்கள் பிள்ளையின் தலையா ராஜ்?'' என்பாள் ஆதுரத்துடன் இந்து.

அந்த உணர்ச்சியில் மயங்கிப் போய் நிற்பான் ராஜாராமன்.

அந்தத் தம்பதி இந்த எட்டு மாசங்களில் அனுபவித்த பயமோ, அவநம்பிக்கையோ, மகிழ்ச்சியோ, இன்பமோ வார்த்தைகளால் எழுத முடியுமோ?

பிரசவத்திற்கு நாள் நெருங்க நெருங்க, இந்துவின் ஒவ்வோர் அசைவையும் ஊன்றிக் கவனிக்கத் தொடங்கி விட்டான், ராஜா.

கடந்த ஒரு மாச காலமாக வெளியூர் போக வேண்டிய வழக்குகளையெல்லாம் உதவியாளர்களிடம் விட்டுவிட்டு, கோர்ட்டுக்குச் செல்லும் நேரம் தவிர மற்ற நேரங்களெல்லாம் இந்துவிடமே இருக்க முற்பட்டான். வெளியே எங்காவது சென்று வந்தால் கைகொள்ளாமல் விளையாட்டுச் சாமான்களை வாங்கி வருவான். யாருக்காக? பிறக்கப் போகிறானே, அந்தப் பையனுக்காக,

குழந்தை, இந்துவின் வயிற்றில் வளர வளர இந்துவின் நம்பிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்தது.

வளைகாப்பு, சீமந்தம் இரண்டுமே வீட்டோடு மட்டும் செய்வதில் மங்களம்—ராமசாமிக்கு ரொம்பக் குறைதான். ராஜாராமன் கண்டிப்பாக, 'இது நமக்குள் நடந்தால் போதும்' என்று சொல்லி விட்டானே, என்ன செய்ய?

வளைகாப்பு முடிந்த அன்று கைகளில் வளையல்கள் 'கலீர் கலீர்' என ஒலிக்க ராஜாவிடம் வந்து ''இதைப் பார்த்தீர்களா?'' என்று சிறு குழந்தையாய் இந்து மகிழ்ந்தபோது 'கடவுளே இவளை இன்னொரு தடவையும் ஏமாற்றி விடாதே! ஆண்டவனே! எங்கள் மனத்தை உடைக்காதே' என்று தனக்குள்ளேயே ஆயிரமாயிரம் தடவைகள் ராஜா வேண்டிக்கொண்டான்.

'இந்து சொன்னது போல் இன்னும் ஒரு வாரமோ பத்து நாட்களோ...பிறகு எங்கள் அருகில் ஒரு 'குட்டியூண்டு' இருப்பான்''—நினைக்க நினைக்க உள்ளம் துள்ளியது ராஜாவுக்கு. குனிந்து, தன் கைகளிலேயே மலர் மாலையாய் உறங்கிப் போய் விட்ட இந்துவை, மெல்ல படுக்கையில் கிடத்திவிட்டு விளக்கை அணைத்தான்.



அன்று கோர்ட்டில் இருந்த ராஜாராமனுக்கு இந்துவுக்கு வலி கண்டு நர்சிங் ஹோமுக்கு அழைத்துக்கொண்டு போயாகிவிட்டது என்று தகவல் கிடைத்ததும் துடித்துப் போய் ஓட்டமாய் ஓடி வந்தான். கணவனின் கையைப் பிடித்துக்கொண்டு வலி தாளாமல் ''அம்மா—அம்மா...'' என்று வாய்விட்டு இந்து கத்தியபோது அவன் தன்னையே யாரோ பல ஊசிகள் கொண்டு குத்துவதைப் போன்ற வேதனையை உணர்ந்தான்.

இரண்டு மணி நேரம் இந்து வலியுடன் போராடி விட்டுப் 'பெரிய வலி' வந்துவிட்டபின், இந்துவை தியேட்டருக்குள் எடுத்துச் சென்றார்கள்.

அடுத்த அரைமணிக்கு ராஜாராமன்:ஆண்டவா! என் இந்துவை ஏமாற்றாதே!' என்று அவன் நெக்குருகி நெக்குருகி வேண்டியது வீண் போகவில்லை.

'காத்திருக்கிறேன்; காத்திருக்கிறேன்; காலமெல்லாம் காத்திருக்கிறேன்' என்று இந்து காத்திருந்ததும் பாழாகவில்லை.

இறைவன் ராஜாராமனைப் பார்த்து மீண்டும் மெல்ல புன்னகைத்தான்—அவன் கண்ணிலிருந்து தெறித்த ஒளியாய்; கருவாய் இந்து—ராஜாவுக்கு ஒரு மகன் பிறந்தான்.

''நீங்கள் உள்ளே சென்று பார்க்கலாம்'' என்று டாக்டர் சொல்லவும் அவன் கால் தரையில் படாமல் ஓடினான்.

வெளுத்த உடலும், சோர்ந்த கண்களும் ஆனால் துள்ளும் மனமுமாக இருந்த இந்து, ராஜாவைக் கண்டாள்.

ஆதுரத்துடன் தன் முகத்தைக் கையில் எடுத்துக் கொண்ட கணவனிடம், ''ராஜ், கடைசியில் நான் உங்களைத் தந்தையாக்கிவிட்டேன் ராஜ். நான் ஒரு கடமை தவறாத மனைவியாக இருந்து விட்டேன் ராஜ்—' என்ற இந்துவின் கண்களில் இருந்து கண்ணீர் ஆறாகப் பெருகி வழிந்தது.

களிப்பே கண்ணில் நீராக ஓடுகிறது என்று நன்றாக உணர்ந்த ராஜா, ''இந்து—இந்து.''என்று திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டு அவள் முகத்தோடு முகம் வைத்து அணைத்து நெற்றியில் மெல்ல முத்தமிட்டான்.

# 19

சின்னச் சின்னப் பிஞ்சு விரல்கள் ரோஜா மொட்டுக்களை ஒன்றாகக் கட்டி வைத்தது போலச் சிவந்த நிறம், உருண்டை முகம், சற்றே மூடி உறங்கும் அந்தக் கண்களின் ஓரத்தில் கறுப்புக் கம்பளியை வெட்டி ஒட்ட வைத்திருப்பதைப் போன்ற இமைகள், தலை கொள்ளாமல் காடாய் நிறைந்து கிடக்கும் தலைமுடி அவளுடைய ராஜாவுடையதைப் போலவே.

உறங்கும் மதுவையே கண் கொட்டாமல் பார்த்துத் கொண்டிருந்த இந்து, சட்டென்று நேற்று அம்மா சொன்னது நினைவுக்கு வந்தவளாகத் தன்னை உலுக்கிக் கொண்டாள். நேற்றும் இப்படி மடியில் கிடந்த பாலனை உற்றுநோக்கின இந்து, ''அம்மா, இதுதான் என்ன அழகு பார்த்தியா?பெண்ணாக இருந்தால் பிரமாத அழகு என்று சொல்லும்படி இருக்கும் இல்லை?' என்று குரலில் பெருமை கூத்தாட மங்களத்தைக் கேட்டபொழுது. ''என்ன இந்தா நீ சும்மா சும்மா தூங்குகிற குழந்தையையே பார்த்துக் கொண்டு?குழந்தை முழிச்சுண்டு இருக்கிறபோது இதெல்லாம் பேசக் கூடாதா?...தூங்குகிற குழந்தையைப் பார்த்துப் பெருமைப்பட்டா, திருஷ்டி விழும்மா என்ன நீ... ஒன்றும் புரியாமல்...என்று நீட்டி முழக்கினாள் அவள் அன்னை.



'தன் குழந்தையைத் தாயார் பார்த்தால் திருஷ்டி பட்டுவிடுமாம். நல்ல வேடிக்கை' என்று நேற்றுச் சொன்னதை இன்றும் நினைத்துச் சிரித்த இந்து, இருபத்தைந்து நாட்களே ஆகியிருந்த மதுவை—அவளுடைய அருமை மகனை—எடுத்துத் தன் பக்கத்தில் விட்டுக் கொண்டாள்.

இந்துவிற்கு வாழ்க்கையே நிறைந்துவிட்ட மாதிரி உணர்வுதான், இந்த இருபத்தைந்து நாட்களாக.

'மகிழ்ச்சியான வாழ்வில் கறுப்புப் புள்ளியை வைத்தது யார், தன்னைப் பார்த்துச் சிரிப்பது யார்?' என்றெல்லாம் குமுறிக்கொண்டிருந்த வேளையில், கறுப்புப்புள்ளியை அறவே அழித்துவிட்டு வண்ணக் கோலங்களை வாரித் தெளித்தது போலத் தூரத்தே நின்று சிரித்த தெய்வம், கையில் வாழ்க்கையின் பரிசை மது என்ற குழந்தையின் எழிலில் கொடுத்து விட்டது, இனி என்ன வேண்டும்?

ராஜாவுக்கும் எனக்கும் இனி என்ன குறை? எங்கள் வாழ்க்கை என்கிற குடம் நிறைந்துவிட்டது.

குழந்தைக்குக் காப்புமாட்டி, பிறகு புண்ணியா வாசகத்து அன்று மாலை, தடபுடலாய்த் தொட்டிலில் இட்டார்கள். அன்றுகூட ராஜாவிடம் இந்து கூறினாள், ''இனி நமக்கு வாழ்வில் என்ன குறை ராஜ்?'' என்று.

அலங்கரிக்கப்பட்ட தொட்டிலில் பிள்ளையைக் கிடத்தி, அதன் அடியில் பரத்திய நெல்லில் வீட்டின் பெரிய அத்தை குழந்தைக்கு வைக்கப்பட்டிருக்கும் பெயர்களான 'வேங்கடராமன், விசுவநாதன், என்பதையெல்லாம் எழுதியபொழுது சற்றேதள்ளி நின்றுகொண்டிருந்த ராஜாராமன் அருகில் வந்து''அத்தை, நாங்கள் கூப்பிடப் போகும் பெயரான 'மது' வையும் அதில் எழுதி விடுங்கள்'' என்றானே—அதே கணத்தில் இந்துவுக்கு அவன் முகத்தில் பொங்கி வழிந்த பெருமை அப்பட்டமாகப் புரிந்தது.

மது...மது

ஆகா; எத்தனை பொருத்தமான பெயரை ராஜா தேர்ந்தெடுத்திருக்கிறார். மது தேன். எங்கள் இருவரு டைய சூழ்நிலையையே தேனாகத் தித்திக்கச் செய்தவன் மதுதானே!

இந்து அவள் பெற்றோர் வீட்டில் இருந்ததால், காலையில் கோர்ட்டுக்குப் போகும்வரையிலும், மாலை முழுவதும் அங்கேயே வந்து இருப்பான் ராஜா.

''ராஜ், இன்றைக்கு இவன் நன்றாக விழித்துப் பார்க் கிறான்.''

''நேற்று இரவு ரொம்பப் படுத்திட்டான்.''

''இங்கே பாருங்களேன்...நான் கூப்பிட்டால் திரும்பிப் பார்க்கிறதை.''

கண்கள் மலர, தன் தாய்மை உணர்வெல்லாம் வெளிப்படையாகத் தெரியும்படி இந்து நித்தமும் ஆயிர மாயிரம் தடவைகள் ராஜவிடம் பேசும்பொழுது, அவன் பதிலுக்குப் பேசவே மாட்டான் சிரித்துக்கொண்டே தலையை ஆட்டிக் கொண்டு இருந்துவிட்டு, கடைசியில் மெல்ல கிட்டே வந்து குழந்தையையும் மனைவியையும் ஒரே அணைப்பில் அணைத்து முத்தமிடுவான். அவ்வளவு தான்.

தூக்கத்தில் குழந்தை சிரிப்பான், அழுவான், மிரளு வான் ஏதோ என்னவோ என்று பயந்து போன ராஜா, முதல்நாள் ''என்ன இந்து இப்படி'' என்று கேட்டான்.

''இதுவா...இதுதான் ஹரிமிரட்டல், கண்ணா சுவாமி குழந்தையிடம் ஒரு தாமரைப் பூவைக் காண்பிப்பாராம். அது சிரிக்கிறது. உடனே மறைத்துவிடுவாராம். அப்பொழுது அழுகிறது. இது சுவாமிக்கும் குழந்தைக்கும் உள்ள ஒரு விளையாட்டு'' என்று, ஏதோ பத்து குழந்தை களைப் பெற்று வளர்த்த மாதிரி, இந்து சொன்ன பொழுது அவனுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

''ஆமாம், இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்?'' என்று பதிலுக்குக் கேட்டவனிடம்,



''அம்மாதான் சொன்னாள்.'' குழந்தையாய்—ஒரு குழந்தைக்குத் தாயாகி விட்ட குழந்தையாய் இந்து கூறிய போது ராஜா தன்னையும் மீறி உரக்கச் சிரித்தான்.

அப்பொழுது காலை நேரம். மணி ஏழரை. குளித்து விட்டு சேவ் செய்த முகத்திற்கு 'ஆப்டர் ஷேவ் லோஷன்' வழக்கம் போல் எடுத்துப் போடப் போன ராஜா, நேற்று மனைவியிடம் ' நீ ஏன் இப்பொழுது எல்லாம் பூ வைத்துக் கொள்வதில்லை இந்து?''... என்று கேட்டதும், ''குழந் தைக்கு வாசனை சாமான்கள் ஆகாதாம்'' என்று அவள் கூறியதும் நினைவுக்கு வந்தவனாக, கையில் எடுத்த லோஷனைக் கீழே வைத்து விட்டான், 'இந்த வாசனை மட்டும் குழந்தைக்கு ஒத்துக் கொள்ளுமா?'—என்ற நினைப்பில்.

ராஜாவுக்கு இப்பொழுதெல்லாம் தான் எத்தனை தூரம் மதுவினால் ஆட்கொள்ளப்பட்டு இருக்கிறோம் என்பது நன்றாகப் புரிந்தது. கல்யாணமான புதிதில் மனைவியின் மயக்கம் தன்னைச் சுற்றிச் சூழ்ந்து இருப்ப தைப் போலவே, இப்பொழுதும் இந்தக் குழந்தையின் நினைவு, கோர்ட்டில் பேசும் போதும், இரவு தனியாகப் படுக்கும் போதும், கார் ஓட்டும் போதும், ஏன்— விழித் திருக்கும் ஒவ்வொரு விநாடியும் அவனுள் ஏதோ ஒன்று சதா ''நான் இருக்கிறேன்—நான் வந்து விட்டேன்'' என்று முணுமுணுப்பதைப் போன்ற பிரமை. அந்த உருண்டை முகம்-இந்துவின் அதே அழகுக் கண்கள். நினைக்கை யிலேயே உடனே சென்று அந்தப் பட்டுடலை அணைத்து முத்தமிட வேண்டும் என்ற துடிப்பு.

'என் பிள்ளை—ஓ! என் பிள்ளை'— மகிழ்ந்து போனான் ராஜா.

பிள்ளையை விட்டால் அவன் நினைவு அவனுடைய மனைவி இந்துவிடம் தாவும்.

பிள்ளை பெற்ற மகிழ்ச்சியோ, இல்லை; பச்சைஉடம்பு என்று கட்டிக் காப்பதாலா தெரியவில்லை; இந்துவின் அழகு மேலும் கூடி இருப்பது போல ராஜாவுக்குத் தோன்றியது.

வெளுத்து, சற்றே பூசினாற் போலப் பெருத்த அவள் உடலும் எண்ணெய் தேய்த்துக் குளித்துச் சாம்பிராணிப் புகை காட்டப்பட்ட அவள் கூந்தலும், வெற்றிலை போட்டுச் சிவந்து வறண்டிருந்த அவள் உதடுகளும் இந்துவிடம் ஏதோ ஓர் ஒளி பிரகாசமாய்க் கண்ணில் இருந்து கொண்டு உடலின் ஒவ்வோர் அங்கத்திலும் தெறிப்பது அவனுக்கு மாத்திரமல்ல, எல்லாருக்குமேதான் தெரிந்தது இரண்டு நாள் முன்பு அவனுடைய மாமி இந்துவைப் பார்த்துவிட்டு''என்ன ராஜா உன் மனைவியைப்பார்த்தா முகத்திலே என்னவோ தேஜஸ் மாதிரியல்லவா தெரிகிறது. அது என்ன, அப்படி ஒரு மாறுதல்?'' என்று கேட்ட பொழுது ராஜா அதை ஆமோதிக்கும் வகையில் தலையாட்டி விட்டு ''பிள்ளை செய்த தந்திரம்''... என்றான் சிரிப்பினூடே.

ஆனால், இப்பொழுது உடைகளை மாற்றிக்கொண்டு புறப்படும் ராஜாவுக்கு மீண்டும், தகதகவென்று எரியும் தீப்பந்தம் போல் இந்து இருக்கிறாளே என்ற எண்ணம் தோன்றி, அவன் ஆச்சரியத்தில் மூழ்க வைத்தது என் இந்து இல்லாமல் என்னால் இங்கு இருக்க முடியவில்லை. சீக்கிரம் ஒரு நல்ல நாள் பார்த்து இங்கே கொண்டு வந்து விடச் சொல்ல வேண்டும் என்று தனக்குள் நினைத்தவன், இந்த எண்ணத்தை அன்றே செயல்படுத்தவும் செய்தான்.

ஆயிற்று. இந்து தன் வீட்டிற்கு வந்து ஒரு வாரம் ஆகி விட்டது.

சிறு வயது முதற்கொண்டே குழந்தைகளைத் தானே கவனிப்பதில் ஆர்வம் கொண்டவள் இந்து. பிறகு அவள் குழந்தைக்குக் கேட்க வேண்டுமா? உடம்பில் சிறிது தெம்பு வந்ததும் தானே மதுவின் காரியங்களைக் கவனிக்கத் தொடங்கி விட்டாள்.



''பச்சை உடம்பு இந்து'' என்று மங்களம் ஆட்சேபித்தால், ''போம்மா, வெள்ளைக்காரப் பெண்களெல்லாம் நான்காம் நாளில் இருந்து தாங்களே சகலமும் செய்கிறார்கள்...நீ என்னடாவென்றால் பதினைந்து நாட்கள் ஆகியும் கூட என்னை விடமாட்டேன் என்கிறாயே!'' என்று கூறிவிட்டு தன் விருப்பம் போலவே காரியங்களைச் செய்யலானாள் குழந்தையைத் தானே குளிப்பாட்டவும் நன்றாகப் பழகிக் கொண்டு விட்டதால், இப்பொழுது அவள் வீட்டிற்கு மங்களம் ''குழந்தையைக் குளிப்பாட்ட நான் தினமும் வரட்டுமா?'' என்று கேட்ட பொழுது, ''வேண்டாம்மா'' என்று தடுத்து விட்டாள்.

மதுவுக்குத் தேவையானதை அவள் செய்யும்பொழுது இந்த இன்பத்திற்காகத் தானே நான் காத்திருந்தேன்? என்று அவள் உள்ளம் கேட்கும்.

ஏ. ஸி. செய்யப்பட்டு இருந்த அந்தப் படுக்கையறையில் அழகான ஒரு சின்னத் தொட்டிலும் அவர்கள் கட்டில்களுக்கு அருகில் வந்து சேர்ந்து கொண்டிருந்தது. குழந்தையின் துணிகள் வைக்க ஒரு நவீன பாணி அலமாரி கிலுகிலுப்பை பொம்மைகள் என்று நிரம்பிக் கிடந்த அறையில் அன்று காலை மதுவுக்குப் பால் கொடுத்து விட்டு சற்று நேரம் அங்கேயே உட்கார்ந்தாள் இந்து.

அடையாகப் பெய்து கொண்டிருந்த மழை அன்று காலைதான் சற்று நின்று, வானம் வெளுக்கத் தொடங்கியிருந்தது. இரண்டு நாளாக ஜன்னல் கதவுகளைத் திறந்து வைக்காத இந்து, அன்று மழை நின்று சிறிது வெயில் கிளம்பியதும் ஜன்னல் கதவுகளைத் திறந்து வைத்தாள்.

ஜன்னல் அருகே நின்று கொண்டு இருந்தவளின் கவனம் குழந்தை அழும் ஓசையால் கலைந்தது.

அருகில் சென்று மதுவைக் கையில் எடுத்துக் கொண்டாள்—மார்போடு தழுவி! தலையில் முத்தமிட்டு—மெல்ல பாடத் தொடங்கினாள்.

**''சித்தடியே சித்தடியே இத்தனை நாள் எங்கிருந்தாய்...?
ஆறு இரண்டும் காவேரி அதன் நடுவில் ஸ்ரீரங்கம்...
சுவாமி ரெண்டு கையாலே தந்த திரவியமோ...
யாரடிச்ச கண்ணீர் ஆறாகப் பெருகி ஓடறது...?
அடிச்சாரைச் சொல்லி அழு ஆக்கினைகள் செய்திடுவோம்''**

அந்த இனிமையான சூழ்நிலையில் நீலாம்பரியில் இந்து மெல்லப் பாடியதைக் கேட்டுக் கொண்டு ''ங்கு...ங்கு'' என்று சொல்லிய மது, கண்களை மூடிக்கொண்டு உறங்கலானான்.

வெளியே போவதற்கான உடைகளோடு அந்த அறைக்குள் நுழைந்த ராஜாராமன் இந்து பாடுவதையும், அவன் நெஞ்சோடு நெஞ்சாகக் கிடந்து மது உறங்குவதையும் கண்டான். நிசப்தமான அந்தக் காலை நேரத்தில், இந்துவின் குரலும், தோற்றமும் ராஜாராமனைக் கிறக்கின ஆனால் அதையும் மீறிக்கொண்டு அவனுள் திடீரென்று ஒரு சலனம் தோன்றி பார்த்துக் கொள், இந்த அருமையான காட்சியை நன்றாகப் பார்த்துக்கொள்—என்று சொல்லவே சே என்ன விநோதமான உணர்வு என்று நினைத்து அந்தச் சலனத்தை உதறினான்.

''இந்து...அவசரமாக ஒரு வழக்கு விஷயமாகக் கொஞ்சம் வெளியே போய் விட்டு, ஒன்பது மணிக்குள் வந்து விடுகிறேன். மணி இப்பொழுது எட்டுதானே ஆகிறது'' என்று கூறியவாறே அவள் அருகில் வந்தான்.

''ஸ்...குழந்தை தூங்குகிறான்'' என்று மெல்ல உதட்டில் விரலை வைத்து சைகை காட்டிய இந்து, மதுவைச் சத்தம் இல்லாமல் தொட்டிலில் கிடத்திவிட்டு, ராஜாவின் அருகில் வந்தாள்.

''ஹாய்...ஜோராக இருக்கேளே, பிரமாதமாக டிரஸ் செய்து கொண்டு...யாரைப் பார்க்க ராஜ்...'' கண்ணில் குறும்பு கூத்தாடக் கேட்டாள் இந்து.



அருகில் நின்ற மனைவியை அள்ளி எடுத்துக் கொண்டான் ராஜ். கணவனின் கழுத்தைச் சுற்றிக் கைகளை மாலையாகப் போட்டுக்கொண்டாள் இந்து.

''உன்னைப் பார்த்துக்கொண்டே இருக்கணும் போல இருக்கு...ஏன் இந்து?''—கரகரத்த குரலில் கேட்டான் ராஜா.

'ம்! அப்போ வெளியே போக வேண்டாமே! இங்கேயே இருங்களேன் குழந்தை தூங்கறான். ஆயாவும் மற்றவர்களும் கீழே ஏதோ வேலையாக இருக்கிறார்கள். ப்ளீஸ்! இருங்களேன்''—ஒண்ணரை மாதப் பிரிவின் தாபத்தைக் குரலில் கொட்டிய இந்து கெஞ்சினாள்.

''இல்லை; டார்லிங்...பார்க்கவேண்டியவர் அரசியல் பிரமுகர்...போய்த்தான் ஆகணும்...போய்விட்டுச் சுருக்க வந்துவிடுகிறேன். சரியா?''

கதவுக்கு வெளியே போய்விட்ட ராஜாராமனை இந்து கேட்டாள்.

''எதையோ மறந்துவிட்டுப் போகிறீர்களே!''

இந்து ஏழு ஆண்டு தாம்பத்தியத்தில் அவள் அவனை ஆயிரமாயிரம் தடவைகள் கேட்டிருக்கும் கேள்விதான் அது.

''போக்கிரி...'' என்று கூறிய ராஜா மீண்டும் உள்ளே வந்து, அணைத்துக்கொண்டு அவள் முகத்தை நிமிர்த்தி ''போய்விட்டு வரேன்...இந்தும்மா'' என்று சொல்லி அவள் அதரத்தில் முத்தமிட்டான். பிறகு, திரும்ப யத்தனித்தவன் என்ன நினைத்தானோ, மீண்டும் ஒருமுறை இந்துவை இறுக அணைத்து ''எனக்கு இப்பொழுது வெளியில் போகக் கொஞ்சமும் விருப்பம் இல்லை'' என்றான்.

அந்த நேரத்தில் இந்துவும் ராஜாவும் சேர்ந்து இருக்க வேண்டும் என்று மனப்பூர்வமாக நினைத்தார்கள். ஆனால், சேர்ந்து இருக்க ஆசைப்படும் தம்பதியரைப் பார்த்து இன்று விதி சிரித்துக் கொண்டிருக்கிறதே!

ராஜாவை வெளியே அனுப்பிவிட்டு, மது எழுந்திருப்பதற்குள் தான் குளித்துவிட்டு, அவன் எழுந்ததும் அவனையும் குளிப்பாட்டி, ராஜா திரும்பி வருவதற்குள் தயாராகி விடலாமே என்று நினைத்த இந்து, படுக்கை அறையை ஒட்டி இருந்த குளியல் அறைக்குத் தன் மாற்று உடைகளை எடுத்துக் கொண்டு போனாள்.

மது நன்றாக உறங்கிக்கொண்டிருந்தான்.

கீழே போய் ஆயாவை அழைத்துக் குழந்தைக்குக் காவல் இருக்கச் சொல்லலாம் என்று நினைத்தவள், 'ஆயாவுக்கு நேற்று லேசாக ஜுரமாக இருந்ததே! அவளை வீணாகச் சிரமப் படுத்த வேண்டாம்' என்றும் நினைத்து, ''டேய்...ராணா! நான் குளிக்கப் போகிறேன். குழந்தை அழுதால் என் அறைக் கதவைத் தட்டு. குழந்தையைப் பார்த்துக் கொள்'' என்று சொன்னாள். ராணாவும் 'சரி' என்பது போல வாலை ஆட்டியது.

இந்து குளியல் அறையில் நுழைந்து கதவை மூடித் தாளிட்டுக்கொண்டாள்.

அவள் மனம் சலனங்களே இல்லாமல் அசாதாரணமாக நிம்மதியாக இருந்தது.

வாளிக்கு மேலாக இருந்த குழாயைத் திருப்பிவிட்டு சுருக்கக் குளித்துமுடித்து விடவேண்டும் என்ற ஆர்வத்தில் அவசரம் அவசரமாக உடைகளைக் களைந்து, கீஸர் எனப்படும் பெரிய வெந்நீர்த் தொட்டியை அடைந்து, அதன் குழாயை வெந்நீருக்காகத் திருப்பினாள் இந்து.

முதல் நாள் பெய்திருந்த அடைமழையில் குளியல் அறைச் சுவரில் சற்றே விரிந்திருந்த விரிசலின் மூலம் உள்ளே இரவு முழுவதும் வந்திருந்த தண்ணீர் அந்த விரிசலின் அருகாமையில் ஓடிக்கொண்டிருந்த கீஸரின் ஒயர் கம்பிகளை நன்றாக நனைத்திருந்தாலும் வெளியே சுவரில் செல்லும் 'எர்த் ஒயர்' கம்பியை முதல்நாள் காற்றில் முறிந்துவிழுந்த ஒரு பெரியமரக்கிளை அறுத்துவிட்டிருந்தாலும்—இந்து கீஸரைத் தொடவும் யாரைப் பிடித்துக் கொள்ளலாம் என்று தவித்துக்கொண்டிருந்த மின்சாரம், குபீரென்று இந்துவின் மலர்க்கரம் வழியாக அவள் பூ உடலில் பாய்ந்து விட்டது.



ஒரு விநாடி இந்துவுக்கு ஒன்றுமே புரியவில்லை.

யாரோ திடீரென்று மண்டையில் ஓங்கி அடிப்பதைப் போன்ற உணர்வுதான் அவளுக்கு. என்ன ஏது என்று மூளைக்கு எட்டுவதற்குள் நாராசமான சத்தம் ஒன்று தன் குரல் வளையிலிருந்து எழும்பி வெளியே வருவதை அவள் புரிந்துகொண்டாள்.

குழாயோடு ஒட்டிக்கொண்ட தன் கையை எடுக்கப் பயங்கரமாக அலறிக்கொண்டே திமிறியவள், கையை எடுக்க முடியாமல் போய் மின்சாரத்தின் பலத்திறகு ஈடு கொடுக்க முடியாதவளாக...ஐயோ! அந்தக் குழாய் மேலேயே சாய்ந்துவிட்டாள்.

அரை நிமிஷ காலம் பயங்கரமாக ஊளையிட்ட இந்துவின் குரல் அந்த 'ஜோ' வென்று கொட்டிய தண்ணீர் சத்தத்தில் வெளியே கேட்காமலேயே போயிற்று.

ஒரு பெரிய கிணற்றிற்குள் தான் விழுந்துகொண்டிருப்பதை அவள் உணர்ந்தாள்.

'இனி தான் கத்தினாலும் பிரயோசனம் இல்லை' என்பது அவளுக்கு நன்றாகப் புரிந்துவிட்டது.

மாடியில் ஒருவருமே இல்லை.

கீழேயிருந்து யாராவது வந்தாலும் கதவை உடைத்து உள்ளே வந்து ம்ஹீம் நடக்கக்கூடிய காரியம் இல்லை.

திடீரென்று கதவை 'பரபர' என்று ராணா சுரண்டுவது இந்துவுக்கு அந்த அரை மயக்கத்திலும் விளங்கியது.

''ராஜா—ஓ! என் ராஜ்...''

அவள் இதயத்தின் ஒவ்வோர் அணுவும் கூச்சலிட்டது. கண்கள் செருகின.

வாயில் நுரை தட்டி, பற்கள் நாக்கை வைத்து அழுந்தக் கடித்தன.

இப்பொழுது அவளைச் சுற்றி ஒரே காரிருள்.

'கும்' என்று காதை அடைக்கிறது. ஆனால், அவள் கீழே கீழே, மாடியிலிருந்து எறிந்த பந்தைப் போல, போய்க் கொண்டே இருக்கிறாள்.

அந்தக் கணத்தில்—அந்த ஒரு கணத்தில் மீண்டும் அவளுக்கு மதுவின் நினைவுதான் வந்தது.

கடவுளே! எனக்கு ஒரு குழந்தை வேண்டும் என்று எண்ணினேனே— இப்பொழுது இதை இப்படித் தவிக்க விட்டு செல்கிறேனே—நான் மதுவைப் பெற்றது மற்றவருக்காகவா, எனக்காக இல்லையா?

விழுந்துகொண்டிருந்த அவள் உணர்வும் உயிரும் ஒன்றை ஒன்று அணைத்தவாறு மங்கலாயின. அதன் பிறகு கருமை...ஒரே ஆழ்ந்த கருமை.

இந்து இறந்துவிட்டாள். 'தகதக' வென்று எரிந்த பந்தம் அணைந்துவிட்டது.

தண்ணீரின் இரைச்சலோடு சற்றே வெளியில் கேட்ட இந்துவின் குரலைக் கேட்டுத் திகைத்த ராணா, என்னவென்று புரியாமல் கதவைச் சுரண்டியது, அதற்குப் பதில் ஒன்றும் இல்லாமல் போகவே துடித்துப் போன அந்த நாய் அவசரம் அவசரமாகக் கீழே ஓடியது. ஆயாவின் புடைவையை வாயால் பிடித்திழுத்த வண்ணம் 'வள் வள்' என்று பரிதாபமாகக் குரைத்துக்கொண்டிருந்த வேளையில், ராஜாவின் கார் சத்தம் கேட்டது. ஒட்டமாக வாசலுக்கு ஓடிய ராணா ராஜா இறங்குவதற்கு முன்பே வண்டிக்குள் பாய்ந்து வெளியே அவன் மணிகட்டைக் கவ்விக்கொண்டு இழுத்தது.

ஒரே ஒரு விநாடிதான், ராஜாவுக்குப் புரிந்துவிட்டது.

''என்ன ராணா?' என்று குரல் ஒலிக்கக் கேட்டுவிட்டு, மாடிக்கு ஒரே தாவில் ஓடினான். அறைக்குள் நுழையும் போதே குழந்தை சாதாரணமாக உறங்குவதைப் பார்த்தவனுக்கு இந்துவுக்குத்தான் ஏதோ என்று தெரிந்துவிட்டது.

''இந்தூ...' என்று அலறியவன், குளியல் அறைக் கதவைத் தடதட என்று கூக்குரலிட்டவாறு தட்டினான்.

பதில் இல்லாமல் போகவே என்ன தோன்றியதோ, ஓடிப்போய் மின்சார மெயினை அணைத்துவிட்டு, ஆட்களை அழைத்துக் குளியலறைக் கதவை உடைக்கச் செய்தான்.

நான்கு ஆட்கள் கதவை உடைப்பதற்குள் டாக்டரையும் வரவழைத்துவிட்டான் ராஜா.

அந்தப் பரபரப்பிலும் மூளை எப்படியோ அவனுக்கு வேலை செய்தது.

என்ன செய்து என்ன?

கதவைத் திறந்த அந்த நேரத்தில் குழாயோடு குழாயாக ஒட்டிக்கொண்டிருந்த ஒரு கையும், வலது மார்பும், இடுப்பும் கரிக்கட்டைகளாகக் கருகி இருந்த இந்துவைத் தானே அவன் பார்த்தான்!

''இந்தூ—என் இந்தும்மா...'' — ராஜாராமனுடைய அந்தக் கூச்சல் அந்த வீட்டை இரண்டாகப் பிளந்து கொண்டு வானத்திற்கும் மேலே சென்று அவனுடைய உலகத்தையே அடைத்துக்கொண்டது.

இந்து என்கிற இந்துமதி இறந்தே போய்விட்டாள் அவள் வாழ்க்கை முடிந்தது.

'ஆமாம்—இந்த மாதிரி சம்பவம் நடப்பது என்ன பெரிய காரியமா—இதைப் போய்ப் பெரியதாக, கதையாக எழுத வந்துவிட்டாளே—' என்று உங்களில் பலர் நினைக்கலாம்.

உண்மைதான். இந்துவின் துர்மரணத்தைப் போன்று நூற்றுக்கணக்கான மரணங்கள் உலகம் முழுவதும் நித்தமும் நடக்கத்தான் செய்கின்றன.

ஆனால், ஒரு சந்தேகம்—

இந்து இப்படி துர்மரணத்தில் திடீரென்று அகாலமாய் இறக்கத்தான் வேண்டும் என்றிருந்தால் அவள் ஏன் சென்ற ஆண்டே இறக்கவில்லை?

அவளும் ராஜாவும் மனப்பூர்வமாக நம்பி வழிபட்டார்களே அந்தத் தெய்வம் ஏன் அவளைச் சற்று முன்னால்—இரண்டு மாதங்களுக்கு முன்னால் எடுத்துக் கொள்ளவில்லை?

'வேண்டும் வேண்டும்' என்று வாழ்நாளெல்லாம் தவித்தாளே, அந்த அருமைப் பிள்ளை பிறந்ததும், அவளை ஏன் அழைத்துக்கொள்ள வேண்டும்?

இந்தப் பிள்ளை பிறப்பதற்கு முன்னால் அந்தச் சுவையை உணர்வதற்கு முன்னால்—இந்து போயிருக்கக் கூடாதா?

அருமைப் பிள்ளை தாயில்லாமல் வளரட்டும் என்றா?

பாசம் நிறைந்த கணவன்—மனைவி இல்லாமல் பிள்ளையை வளர்த்து தவிக்கட்டும் என்றா?

எதற்காக?

இது எதற்காக?

யாராவது எனக்குப் பதில் சொல்லுங்களேன்—எதற்காக இந்துவுக்கு இப்படி ஓர் அகால மரணம் ஏற்பட வேண்டும்?

'நாங்கள் படித்தவர்கள். எங்கள் அறிவால் இயற்கையை எங்களுக்குச் சரணாகதி அடையச் செய்து விட்டோம்' என்று மார் தட்டும் மனிதர்களே! உங்களை எல்லாம் கேட்கிறேன், பதில் சொல்லுங்களேன்.

ஓ, கடவுளே! ஆலகாலத்தை உண்டவனே! இந்த உலகத்தையே ஆளும் நாயகனே! 'பிறப்பு, வளர்ப்பு, இறப்பு' என்ற மூன்று செயல்களையும் செய்யும் இறைவா உன்னையும் கேட்கிறேன்—

நீயாவது பதில் சொல்;

எதற்காக?

———